# குறும்பரின் விடுகதைகள்

முனைவர் வே.சிதம்பரநாதபிள்ளை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG6177
R007I01
U.G.6177

# குறும்பரின் விடுகதைகள்


முனைவர் வே. சிதம்பரநாதபிள்ளை

பேராசிரியர்

பழங்குடி மக்கள் ஆய்வு மையம்



தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-355-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு -12

F712 .AU
1002

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 294

திருவள்ளுவராண்டு 2036, ஐப்பசி - நவம்பர் 2005

| | | |
|---|---|---|
| நூல் | : | குறும்பரின் விடுகதைகள் |
| ஆசிரியர் | : | வே.சிதம்பரநாதபிள்ளை |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மானிடவியல் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2005 |
| பக்கம் | : | X + 118 = 128 பக்கம் |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு. 65/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

முனைவர் வே.சிதம்பரநாதபிள்ளை அவர்களின் 'குறும்பரின் விடுகதைகள்' என்னும் இந்நூல் பழங்குடி மக்கள் குறித்த நூற்களின் வரிசையில் வரவேற்கத்தக்கதொரு புதுவரவாகும். இந்நூல் குறும்பப் பழங்குடி இனத்தவரின் கற்பனைத் திறன்களையும் வாழ்வியல் அனுபவங்களையும் படம்பிடித்துக் காட்டி நிற்கும் நிலையில் அவர்தம் விடுகதைகளை ஆய்வுச் சிந்தனைகளுடன் அலசியுள்ள நூலாசிரியர் மிகவும் பாராட்டிற்குரியவராகத் திகழ்கிறார்.

நாகரிகத்தில் நனிசிறந்து விளங்கும் மக்களைப் போன்றே பழங்குடி மக்களும் தங்களுக்கெனத் தனித்ததொரு பாரம்பரியத்தையும் பண்பாட்டினையும் பேச்சு வழக்குகளையும் கொண்டு வாழ்கின்றனர். இவர்களின் நாவில் வாழையடி வாழையாக வாழும் வாய்மொழி இலக்கிய வகைமைகளாகப் பாடல்கள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள் போன்றவை நம் நாட்டின் பழமையான பண்பாட்டுச் சுவடுகளையும் மரபுகளையும் அறிந்துகொள்ளத் துணை செய்கின்றன. பழங்குடி மக்களிடம் காணப்படும் இவ்வாய்மொழி இலக்கிய வகைமைகள் இந்தியப் பண்பாட்டின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் நுண்கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

எல்லா நாடுகளிலும் உள்ள இலக்கிய மொழிகளின் உருவாக்கங்களுக்கும் இப்பழங்குடி மக்கள்சார் நாட்டுப்புறவியலே மூலமாக அமைந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். பண்டுதொட்டு இன்று

வரையுள்ள மொழிகளில் காணப்படும் நீதிக்கதைகள், பாடல்கள், உரைவீச்சுகள் போன்றவை பண்டையப் பழங்குடி மக்களின் வாய்மொழி இலக்கியங்களிலிருந்து தோன்றியவையேயாகும். இந்திய இலக்கியங்கள் மேற்கத்திய மொழிகளின் மொழிக்கூறுகள் சிலவற்றை எடுத்துக்கொண்டபோதிலும் எதனையும் ஏற்றுக்கொள்ளாமலும், மாற்றங்களுக்கு ஆட்படாமலும் இருந்து தம் புனிதத்துவத்தைப் பேணிக்காத்து நிற்பவை பழங்குடி மக்களின் இலக்கியங்களே. அன்றியும், பழங்குடி மக்களின் இலக்கியங்கள் மதச்சார்பற்றவையாகவும் திகழ்கின்றன என்பதையும் நாம் அறிவோம்.

வேதகாலம் முதல் இன்றைய நாள் வரை பழங்குடியினரின் மொழிகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படாததைப் போன்று அவர்களின் இலக்கியங்களுக்கும் கொடுக்கப்படாதது மனச்சுமையுடன் குறிப்பிடவேண்டிய செய்தியாகும். இதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டியது யாதெனின், நாட்டுப்புறவியல் அறிஞர்களும்கூட இப்பழங்குடி மக்களின் வாய்மொழி இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காத போக்கேயாகும். செல்வாக்குள்ள இலக்கிய மொழிகளின் ஆதிக்கத்தால் பழங்குடி மக்களின் மொழிகளும், இலக்கியங்களும் அழிந்தொழிந்துவிடும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதால் அவற்றைப் பேணிக்காப்பது நம் தலையாய கடமையாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பழங்குடி மக்கள் ஆய்வு மையத்தின் குறிக்கோள்களில் ஒன்றான பழங்குடி மக்களின் நாட்டுப்புற இலக்கியங்களைப் பேணுவதும் ஆய்வதுமான செயல்பாட்டிற்கு உயிரோட்டம் கொடுக்கும் வண்ணம் பேராசிரியர் வே.சிதம்பரநாதபிள்ளை அவர்களால் உருவாக்கம் செய்யப்பட்ட இந்நூல் பாராட்டிற்குரியதாக விளங்குகிறது. பொதுநோக்கில் விடுகதைகள் அமையும் போக்குகளுக்கு ஏற்றவாறு குறும்பரின் விடுகதைகளும் பொருத்தமுற அமைந்து, தேர்ந்த இலக்கிய மொழிகளுக்குரிய தன்மைகளைப் பெற்று விளங்குவதைச் சான்றுகளுடன் நூலாசிரியர் விளக்கிச்செல்வது சிறப்பிற்குரியதாகும். அறிஞர்கள் வகுத்த விடுகதைகளின் பாகுபாடுகளுக்கு ஒப்பக் குறும்பரின் விடுகதைகளும்

ஈடுகொடுத்து நிற்கும் பாங்கினை உரிய முறையில் எடுத்துக்காட்டிய ஆசிரியர், அவற்றின் அமைப்புகளில் ஊடுருவி நிற்கும் இலக்கணக் கூறுகளின் செயல்பாடுகளைப் பரந்துபட்ட அளவில் இலக்கணப் பார்வையோடுதான் விளக்க முடியும் என நிறுவிச் செல்வதை எவ்வளவு பாராட்டினாலும் தகைமையுடையதே. குறும்பர் விடுகதைகளின் இலக்கிய மெருகூட்டலுக்கு யாப்புக் கூறுகளும், அணியியற் கூறுகளும் பேரளவிற்குத் துணைசெய்யும் பான்மையினை விரிவாகத் தந்து நிற்கும் நூலாசிரியர் அவர்கள், பழக்கவழக்கங்களை விடுகதைகள் வழி படம் பிடித்துக் காட்டி அவற்றை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

புதிய ஆய்வு நோக்கங்கள், ஆய்வு உணர்வுகள், ஆய்வுச் சிந்தனைகள் ஆகியவற்றிற்குத் தமிழ்ப் டல்கலைக்கழகம் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வெளியிட்டு வருகின்ற அத்தனை நூற்களுக்கும் தமிழகமும், பிறபகுதித் தமிழரும் ஆதரவும் வரவேற்பும் நல்கி வருவது மறக்கமுடியாத ஒன்றாகும். இந்நூலினையும் தமிழுலகம் வரவேற்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆசிரியரும் இதனைப் போன்று பயன் தரும் பல நூற்களைப் படைத்திட வேண்டும் என்பது என் விழைவு. இந்நூலை மிக அழகாக அச்சேற்றி வெளியிட அடிப்படையாக அமைந்த பதிப்புத்துறை இயக்குநர் அவர்கட்கும் பதிப்புத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும்.

(சி.சுப்பிரமணியம்)

# 1. ஆய்வுத் தொடக்கவுரை

## 1.1 முன்னுரை

நாகரிகத்தில் நனி சிறந்து விளங்கும் மக்களைப் போன்றே பழங்குடி மக்களும் தங்களுக்கெனத் தனியொரு பாரம்பரியத்தையும், பழக்க வழக்கங்களையும் கொண்டு வாழ்கின்றனர். இவர்களும் சில துறைகளில் சிறந்து விளங்குவதோடு தாங்கமுடியாத குளிரில் தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்ற முறையானது நாகரிக மக்களின் அறிவைக்கூட வியப்புறச் செய்யும் வண்ணம் அமைந்துள்ளது. இவர்களின் சிந்தனைச்சிறப்பை இலக்கியத்திலும் அதனோடு தொடர்புடைய பிற துறைகளிலும் காண முடிகிறது. இவர்களிடையே வாழுகின்ற பழமொழிகள், விடுகதைகள். நம்பிக்கைகள், கவிதைகள், கதைகள் போன்றவற்றில் இவர்களின் கற்பனைத்திறனையும், அறிவுத்திறனையும் ஒருசேரக் காண முடிகிறது.

பழங்குடி மக்களிடையே வாழுகின்ற வாய்மொழி இலக்கியங்கள் ஏட்டில் ஏறாதவைதான்; எழுத்தில் வராதவைதான். ஆயினும் பரம்பரை பரம்பரையாக இவர்களின் நாவில் வாழும் இவ்வாய்மொழிஇலக்கியங்களில் சிறந்த உத்திகள், இலக்கண, இலக்கியப்பாணிகள் போன்றவற்றைக் காண முடிகிறது. பழங்குடி மக்களின் கற்பனையினையும், மனப்பக்குவத்தினையும் இவர்களிடையே வாழும் பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், கவிதைகள், கதைகள் போன்றவற்றில் காண முடிகிறது. மேலும், இவை நம் நாட்டுப் பழமையான

பழக்கவழக்கங்களையும், பண்புகளையும் படம் பிடித்துக்காட்டுகின்றன. இத்தகையப் போக்குகளைக் குறும்பர் விடுகதைகளும் கொண்டு இலங்குகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களான வாய்மொழி இலக்கியங்களில் மலைசார் நாட்டுப்புற இலக்கியங்களும் சிறப்பிடம் பெறுவதோடு பிரிக்க இயலாத உறவையும் கொண்டு விளங்குகின்றன. இந்நிலையினைத் தமிழ்நாடு நீலகிரி மாவட்டப் பழங்குடியினரான குறும்பரின் விடுகதைகளிலும் காணமுடிகிறது.

## 1.2 ஆய்வின் நோக்கம்

நாட்டுப்புறவியல் குறித்த ஆய்வுகள் தமிழில் தற்காலத்தில் மிகவும் விரிந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் மலைசார் நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் மிகவும் குறைவே; தவிரவும், குறிப்பிட்டதொரு வகையின் பல்நோக்குப் பார்வைகளில் அமைந்த முழுமைபெற்ற ஆய்வாகவும் அமையவில்லை. இந்நிலையில் நீலகிரி மலையில் வாழும் பழங்குடி மக்கள் இனத்தைச் சார்ந்த இருளர், கோத்தர், தோடர் ஆகியோரின் ஆட்டங்கள் தவிர்த்த வேறு இனத்தவர் குறித்தோ அல்லது பிற பழங்குடியினரின் மலைசார் நாட்டுப்புறவியல் குறித்த ஆய்வுகளோ இதுவரையிலும் தனித்ததொரு நிலையில் விரிவாக ஆய்வு செய்யப்படவில்லை. இவ்வெற்றிடத்தை நீக்கும் நோக்கத்தோடு ' குறும்பரின் விடுகதைகள்' என்னும் இவ்வாய்வுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இவ்வாய்வின்மூலம் வாய்மொழி நிலையில் உள்ள குறும்பர்களின் விடுகதைகள் காலப்போக்கில் மறைந்துவிடாமல் இருக்கும் பொருட்டுச் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுவதோடு பிற்கால நவீனத்துவ மலைசார் நாட்டுப்புறவியல் ஆய்வுகளுக்கு அடித்தளம் அமைக்கும் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் இவ்வாய்வு அமைகிறது.

## 1.3 ஆய்வின் குறிக்கோள்

இவ்வாய்வின் குறிக்கோள்களாகப் பின்வருவன அமைகின்றன :

1. விடுகதைகள் குறித்த பொதுப்பார்வையில் குறும்பர் விடுகதைகளின் தன்மைகளை ஆய்தல்.
2. பாகுபடுத்தும் போக்கில் குறும்பர் விடுகதைகள் அமைந்துள்ள பாங்கினை ஆய்தல்
3. குறும்பர் விடுகதைகளின் அமைப்பு நிலையினை ஆய்தல்
4. குறும்பர் விடுகதைகளில் இடம் பெற்ற யாப்புகளையும், அணிகளையும் ஆய்தல்

5. குறும்பர் விடுகதைகளின் வழி அவர்களின் சமுதாயப் பழக்க வழக்கங்களை ஆய்தல்.

என்பனவாகும்.

## 1.4 ஆய்வு எல்லை

'குறும்பரின் விடுகதைகள்' என்பது ஆய்வுத்தலைப்பாகும். ஆய்வின் களப்பகுதி நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழும் 39 குடியிருப்புகளாகும். குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் ஏழு ஊர்களிலும்[1], கோத்தகிரி வட்டத்தில் ஐந்து ஊர்களிலும்[2], குந்தா வட்டத்தில் ஐந்து ஊர்களிலும்[3], கூடலூர் வட்டத்தில் 11 ஊர்களிலும்[4], பந்தலூர் வட்டத்தில் 11 ஊர்களிலும்[5] வாழ்கின்றனர். இவர்களின் மக்கட்தொகை 4874 ஆகும்[6].

## 1.5 ஆய்வு அணுகுமுறை

ஆய்வில் பகுப்பாய்வு முறை, விளக்க முறை, சமூகவியல் ஆய்வுமுறை ஆகிய முறைகள் பின்பற்றப்படுகின்றன.

## 1.6 ஆய்வு மூலங்கள்

குறும்பர் விடுகதைகள் குறித்த தரவுகளைச் சேகரிக்க ஏதுவாகவும், பொருத்தமாகவும் அமையும் சில குறிப்பிட்ட ஊர்களைத் தெரிவு செய்வதற்கு ஏற்றவாறு முன்னோடிக் களப்பணி மேற்கொள்ளப்பட்டுப் பழமை மாறாநிலையில் உள்ள ஊர்களான நெடுகல் கொம்பை, குறும்பதி (குன்னூர் வட்டம்), மேட்டுக்கல் (கோத்தகிரி வட்டம்), கீழ்கோத்தகிரி (கோத்தகிரி வட்டம்) பெல்லத்தி கொம்பை, கின்னக்கொரை (குந்தா வட்டம்), தெப்பக்காடு, கனயம் வயல் (கூடலூர் வட்டம்), கப்பாலா, ஒனி மூலா (பந்தலூர் வட்டம்) ஆகியவற்றில் பிந்தையக் களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முதன்மைச் சான்றுகளான விடுகதைகள் சேகரிக்கப்பட்டன. மேலைநாட்டார், இந்திய நாட்டார் ஆகியோரின் குறும்பர் குறித்த ஆய்வுகளும், விடுகதைகள் குறித்த ஆய்வுகளும் துணைமைச் சான்றாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.7 ஆய்வின் நியாயப்பாடு

வாய்மொழி நிலையில் இருந்த சங்ககாலப்பாடல்கள் ஓலைச்சுவடிகளில் பொறிக்கப்பட்டு இருந்தமையால்தான் பிற்றைக்காலத் தமிழர்கள் அவை

குறித்து அறிய நேர்ந்தது என்பது வெள்ளிடைமலை. இச்சங்கப் பாடல்களைப் போன்றே நாட்டுப்புறமக்களிடையே வழங்கும் வாய்மொழிப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள், விளையாட்டுக்கள், கலைகள் போன்றனவற்றைப் பேணிக்காத்தால்தான் நாட்டுப்புறமக்களின் வாழ்வியல் நிலைகளை எதிர்காலத்தில் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். நாட்டுப்புறவியலில் ஓர் அங்கமாக விளங்கும் பழங்குடிசார் மக்களின் நாட்டுப்புறவியல் தன்மைகளும் பேணிக்காக்கப்பட வேண்டியவையே.

எதிர்கால ஒப்பாய்வு நிலைக்கும், பண்பாட்டு மீட்டுருவாக்கத்திற்கும் பழங்குடிசார் மக்களின் நாட்டுப்புறவியல் தன்மைகள் மிகவும் இன்றியமையாதனவாக விளங்குவது திண்ணம். ஏனெனில், மொழியாய்வில் பழங்குடி மக்களின் மொழிகள் சிறப்பான இடத்தைப் பெற்றதோடு பல்வேறு மொழிநிலைகளின் உறுதிப்பாட்டிற்கும் அவை உறுதியான அடிப்படைகளாக அமைந்தன. நாட்டுப்புறவியல் ஆய்வு அடிப்படையில் விரிவானபோக்கில் முழுமையாகப் பழங்குடியினரின் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றன சேகரிக்கப்படவும், ஆய்வு செய்யப்படவுமில்லை. ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எல்லாம் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நோக்கின் அடிப்படையில் மட்டுமே அமைந்திருப்பதனைக் காணமுடிகிறது. குறும்பர் பழங்குடியினரை எடுத்துக்கொண்டால், இவர்களின் விடுகதைகளில் உள்ள சொற்களின் பிறப்பியல் மட்டுமே ஒரு ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிறிதொரு ஆய்வு மானிடவியல் பார்வையில் ஆராயப்பட்டுள்ளது. முழுமையான பார்வையில் எந்த ஆய்வும் இவர்களைக் குறித்து மேற்கொள்ளப்படவில்லை. இக்குறையினை நீக்கும் பொருட்டு முடிந்த அளவு குறும்பரின் விடுகதைகள் ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டுப் பல்நோக்குப் பார்வைகளுடன் " குறும்பரின் விடுகதைகள் " என்னும் இவ்வாய்வு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1.8 ஆய்வு முன்னோடிகள்[7]

பொதுவாக நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடி மக்களைக் குறித்து எல்லா நோக்கிலும் நிறைவுபெற்ற முழுமையான ஆய்வுகள் ஒருசேர இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. ஆங்கிலேயர்கள் நீலகிரி பழங்குடியினர் குறித்து ஒரு சில ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே இந்திய நாட்டு அறிஞர்களும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

மானிடவியல் நோக்கில் ஆராய்ந்தவர்களில் முஸ்ஸி, ரிஃபிள், எட்கார் தர்ஸ்டன், பால் ஹாக்கின்ஸ், பிரான்சிஸ், ரிவர்ஸ், பிலோ இருதயநாத் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். சமூகவியல் நோக்கில் வேங்கடராமனும், வாழ்வியல் அடிப்படையில் சக்திவேலுவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

மொழியியல் நோக்கில் நீலகிரி பழங்குடி மக்களைக் குறித்து முழுக்க முழுக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் உயராய்வு மையமாகும். இம்மையத்தின் மூலம் ஆய்வினை மேற்கொண்டவர்களில் சண்முகம், சுப்பிரமணியம், சக்திவேல், சுப்பையா, சிதம்பரநாதபிள்ளை, பெரியாழ்வார், இராபர்ட் சத்திய சோசப், ஜீன் லாரன்ஸ், நடனசபாபதி, ஜெயபால் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர்த்து, பிறநாட்டு மொழியியல் அறிஞர்களான எமனோ, பரோ, கமில் சுவலபிள், டிப்ளாத் போன்றவர்களும் இம்மக்களைக் குறித்த மொழியியல் ஆய்வில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பழங்குடி மக்கள் ஆய்வு மையத்தின் சார்பில் நீலகிரிப் பழங்குடியினரின் வாழ்வியல் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு கூறு குறித்துப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வுகள் மேற்கொண்டனர்; மேற்கொண்டும் வருகின்றனர். இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் நடராசன், நிர்மலானந்த ரெட்டி, சேதுராமன், ஜக்கா பார்த்தசாரதி, இராகவராவ், பாஸ்கரதாஸ் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இம்மையத்தின் சார்பில் நீலகிரி பழங்குடியினர் மேற்கொள்ளும் மூலிகைச்செடிகள் மற்றும் உயரினங்கள் அடிப்படையிலான மருத்துவம் குறித்துச் சேதுராமன் ஆய்ந்து வருகிறார். அன்றியும், நீலகிரிவாழ் ஒவ்வொரு பழங்குடி இனத்தவரின் வாழ்வியலும் சுருக்கமாக எழுதப்பட்டு "நீலகிரி பண்டைய பழங்குடியினர் – ஓர் அறிமுகம்" என்னும் நூல் நீலகிரி மாவட்டம் முத்தோரை – பாலாடாவில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் ஆய்வு மற்றும் மேம்பாட்டு இயக்ககம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

நீலகிரி பழங்குடி மக்களின் மலைசார் நாட்டுப்புறவியல் ஆய்வுகளைப் பொறுத்தவரை பாடல்கள், விடுகதைகள், ஆட்டங்கள், இசைகள், கலையுணாவு ஆகியன குறித்து மட்டுமே ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தோடர்களின் பாடல்கள் குறித்து அறிஞர் எமனோ மிக விரிவாக ஆய்வு செய்துள்ளார். தோடர்களின் காதற் பாடல்களில் இடம் பெற்ற கிளியைத் தூதுவிடும் செய்தி குறித்து

அகத்தியலிங்கனார் எடுத்தியம்பியுள்ளமை குறிப்பிடத்தகுந்த செய்தியாகும். இருளர்களின் ஆட்டங்கள் குறித்து இலட்சுமணன் செட்டியார் செய்த ஆய்வும் குறிப்பிடத் தகுந்த ஒன்று. "நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள்" என்னும் தலைப்பில் தோடர், கோத்தர், இருளர் ஆகியோரின் ஆட்டங்கள் குறித்துத் தமிழில் ஒப்பாய்வு செய்த குணசேகரன் சிறப்பிடம் பெறுகிறார். தோடர்களின் இசைக்கருவிகள் குறித்து வர்க்கீஸ் என்பாரும், தோடர்களின் கைவினைத்தொழிற்கலை குறித்து எனாஷி பக்னானி என்பாரும், நீலகிரி பழங்குடி மக்களின் கலையுணர்வு குறித்துப் பிரகாஷ் பானர்ஜி என்பாரும் ஆய்வு செய்துள்ளமை இவண் குறிப்பிடத்தகுந்தவை. கப் என்னும் அறிஞர் குறும்பர்களின் விடுகதைகளை ஆய்வு செய்தலில் விடுகதைகளில் இடம்பெறும் சொற்களின் பிறப்பியலைக் குறித்தே ஆய்வு செய்துள்ளார்.

## 1.9 ஆய்வின் கட்டமைப்பு

இந்த ஆய்வானது மொத்தம் ஏழு இயல்களைக் கொண்டு விளங்குகிறது. ஆய்வுத் தொடக்கவுரை என்னும் முதல் இயலில் ஆய்வின் நோக்கம். ஆய்வின் குறிக்கோள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்வு மூலங்கள், ஆய்வின் நியாயப்பாடு, ஆய்வு முன்னோடிகள், ஆய்வின் கட்டமைப்பு ஆகியவை குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன.

இரண்டாம் இயலான " பொதுப்பார்வையில் குறும்பர் விடுகதைகள்" என்பதில் விடுகதைகள் குறித்துப் பொதுவாகப் பரந்துபட்ட நிலையில் செய்திகள் தரப்படுகின்றன. மேலும், நாட்டுப்புற இலக்கியத்தில் விடுகதையின் இடம், அதன் விளக்கம், விடுகதை குறித்த பல்வேறு சொல்லாட்சிகள், போடப்படும் சூழல்கள், நிகழ்த்தப்படும் முறைகள், போக்குகள், தன்மைகள், பகுப்பு முறைகள் போன்றவை குறித்து விரிவாகக் கருத்துகள் தரப்பட்ட போதிலும், அவ்வவ் கருத்துகளுக்குக் குறும்பர் விடுகதைகளும் ஈடுகொடுத்துப் பொருத்தமுற அமைந்துள்ள பாங்குகள் எடுத்தியம்பப்படுகின்றன.

"குறும்பர் விடுகதைகளின் பாகுபாடுகள் " என்னும் மூன்றாம் இயல் மனித இனத்தில் வாழும் சூழல்களும், வாழ்வியல் அம்சங்களும் இன்றியமையா இடங்களை ஆக்கிரமித்து விடுவதன் காரணமாக மனித இனத்தின் செயல்பாடுகளின் வெளிப்பாடுகளில் ஒன்றான விடுகதைகளின் மூலம் வெளிப்படுவதால் கிடைக்கப்பெறுகின்ற அடிப்படை ஏதுவின்வழி குறும்பர் விடுகதைகளை இயற்கையை அடிப்படையாகக் கொண்டவை,

சமூகப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் இவையல்லாத பிற என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை எனப் பாகுபடுத்தி ஆய்வதனை மேற்கொண்டுள்ளது.

நான்காம் இயலான " குறும்பர் விடுகதைகளின் அமைப்பாய்வு " என்பது குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளை அலகுகளின் அடிப்படையிலும், குறிப்பு-விடை ஆகியவற்றின் அடிப்படையிலும், இலக்கணப்பார்வை அடிப்படையிலும் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது. முதல் அமைப்பாய்வு முறையில் விரிவான போக்கில் ஆய்வு செய்ய இயலவில்லை என்பதனையும், இரண்டாம் அமைப்பாய்வு முறையில் அமைப்புகளின் போக்குகளை அறிய வாய்ப்புகள் கிட்டிய போதிலும் இலக்கணத்தன்மைகள் குறித்த செய்திகளை அறிய முடியவில்லை என்பதையும், மூன்றாம் அமைப்பாய்வு முறையில் விடுகதைகளின் அமைப்புகளில் இலக்கணக்கூறுகளின் ஊடுருவலை இலக்கணப்பார்வையுடன் அவற்றின் செயல்நிலைகள் மூலம் விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது என்பதனையும் எடுத்தியம்புகிறது.

" குறும்பர் விடுகதைகளின் யாப்பு நிலையும், அணி நிலையும் " என்னும் ஐந்தாவது இயலில் யாப்புக்கூறுகளான மோனை, எதுகை, இயைபு, முரண், அந்தாதி ஆகியன இடம் பெற்றுள்ள பாங்குகளும், தன்மை நவிற்சி, உருவகம், விரோதம் ஆகிய அணிகள் அணிநலம் பாராட்டும் போக்குகளும் எடுத்தியம்பப்பட்டுக் குறும்பர் விடுகதைகளுக்கு இலக்கியமெருகும் சுவையும் கிடைக்கப் பெறுதலைச் சிறப்புடன் விளக்குகிறது.

ஆறாவது இயலான "குறும்பரின் சமுதாயப் பழக்க வழக்கங்கள்" என்பதில் குறும்பர்கள் தம் முன்னோர்களால் மேற்கொண்டு வந்த பழக்க வழக்க மரபுகளைப் பேணிக்காத்து வருதலையும், அம்முன்னோர்கள் பழக்க வழக்க மரபுகளில் மாற்றங்களை உருவாக்க அடித்தளங்களை அமைத்துச் சென்றுள்ளதை அவர்களின் விடுகதைகளில் இடம்பெற்ற சுவடுகள், குறிப்புகள் வழி வெளிப்படுத்துதலையும் எடுத்துக்காட்டுகிறது.

"ஆய்வு முடிவுரை" என்னும் ஏழாவது இயல் இரண்டு முதல் ஆறு முடியவுள்ள இயல்களில் கிடைக்கப்பெற்ற ஆய்வுமுடிபுகளை ஒருசேரத் தொகுத்து தருகிறது.

"ஆய்வு முடிவுரை" தவிர்த்த ஏனைய எல்லா இயல்களின் இறுதியிலும் அடிக்குறிப்புகள் இடம் பெறுகின்றன. ஆய்வு முடிவுரையினை அடுத்துப் பல்வேறு தலைப்புகளில் அமைந்த பின்னிணைப்புகள் தரப்படுகின்றன. இறுதியில் துணைநூற்பட்டியல் இடம்பெறுகிறது.

# அடிக்குறிப்புகள்

1. காண்க பி.எ. 1.1.
2. காண்க பி.எ. 1.2.
3. காண்க பி.எ. 1.3.
4. காண்க பி.எ. 1.4.
5. காண்க பி.எ. 1.5.
6. 1991-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி குறும்பர்களின் மக்கட்தொகை தரப்பட்டுள்ளது.
7. காண்க பி.எ. 2.

# 2. பொதுப்பார்வையில் குறும்பர் விடுகதைகள்

## 2.1 முன்னுரை

"Oral" மற்றும் "Folk" என்னும் ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் முறையே " வாய்மொழி ", " நாட்டார் " என்னும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. எழுதப்படிக்கத் தெரியாத மக்களால் சிறிய மற்றும் பெரிய வாய்ப்பாடுகளால் வாய்மொழிப் பாடல்கள் உருவாக்கப்படுகின்றன.[1] வாய்மொழிப் பாடல்களை ஒருமுறை உருவாக்கிய பின்னர் சமுதாயச் சூழல்கள், நிலவியல் சூழல்கள், வட்டார வழக்குநிலைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் பார்வையாளர்களின் அடிப்படையிலும் மாற்றியமைக்க முடிகிறது.[2] வாய்மொழி இலக்கியங்களில் மாற்றங்கள் ஏற்படுதல் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். வாய்மொழி இலக்கியங்களே நாட்டுப்புற இலக்கியங்களாகும். வாய்மொழி இலக்கியப்பரப்பினுள் அடங்கும் காப்பியங்கள், பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவை நாட்டுப்புற இலக்கியங்களே.[3] அன்றாட வாழ்வோடு தொடர்புடைய இவ்விலக்கியங்கள் மக்களிடையே மக்களால் மக்களுக்காகப் பாடப்படுகின்றன.

வாய்மொழி வழக்காறுகளை வகைப்படுத்தும்போது அவற்றை வழங்கிய நாட்டுப்புற மக்களைக் கணக்கில் கொள்ளவேண்டும். ஏனெனில், வாழ்க்கையின் எச்சூழலுக்கும் பாடப்படும் வாய்மொழிப் பாடல்கள்

இயற்கைச்சூழலில் பாடப்படுவதால் பாடுபவருக்கும் இயற்கைச்சூழலுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறும்பரின் விடுகதைகளும் மலைப்பாங்கு மற்றும் வனப்பகுதிகள் நிறைந்த இயற்கைச் சூழல்களில் போடுப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்.

வாய்மொழிச்சார்பு நாட்டுப்புற வழக்காறுகளுள் விடுகதையும் பிற நாட்டார் வழக்காறுகள் போன்று பயன்பாட்டு இலக்கியமாகவே விளங்குகின்றது. விடுகதைகள் நாட்டுப்புறவியலில் முக்கிய இடத்தைப் பெறுவதோடு அதன் கூறுகளில் மிகவும் பழமைவாய்ந்த ஒன்றுமாகும்.[4] கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய பழமையினை உடையதால் ஒரு சமுதாயத்தைக் குறித்த முக்கியமான பழமைவாய்ந்த கூறுகளைக் கலப்படமற்ற நிலையில் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.[5] கிடைக்கப்பெற்ற குறும்பர் விடுகதைகளில் இடம்பெற்ற வாழ்வியல் கூறுகள் அவர்களின் மரபுவழி வாழ்க்கையோடு ஒன்றிய செய்திகளையே படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே, குறும்பர் பழங்குடியினரின் பண்பாட்டு வரலாற்றினை அறிவதற்கு அவர்களின் விடுகதைகள் மதிப்புடையனவாக அமைகின்றன.

## 2.2 விடுகதையின் விளக்கம்

ஏற்றுக்கொள்ள முடியாத சொற்களின் தொடர்ச் சேர்க்கையின் மூலம் ஒரு மெய்மையினை உருவக விளக்கங்களால் கூறுவதே விடுகதை என்றும், விடுகதையானது ஒரு பொருளை முற்றிலும் மாறுபட்ட பிறிதொரு பொருளோடு ஒப்புமைப்படுத்துகிறது என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன.[6] இப்போக்கினைக் குறும்பர் விடுகதைகளிலும் காணமுடிகிறது.

அறெகு மேலெ கெறெ (பாறையின் மேல் குளம்)
கெறெகு மேலெ காயி (குளத்தின் மேல் பழம்)
காயிகு மேலெ ஊ (பழத்தின் மேல் பூ)[7]
(விடை : எண்ணெய் விளக்கு)

என்னும் இக்குறும்பர் விடுகதையில் எண்ணெய் விளக்கினை விளக்க ஏற்றுக்கொள்ள முடியாத அளவில் உள்ள சொற்களின் தொடர்ச்சேர்க்கைமூலம் மெய்மை தரப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் விளக்கினை மாறுபட்ட தன்மை கொண்ட பாறை, குளம், பழம், பூ ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தன்மையுடன் ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளது.

விடுகதையானது மரபு வழியிலான வாய்மொழி வெளிப்பாடு என்றும், எது குறித்துக் கூறப்படுகிறதோ அதனை ஊகத்தின் அடிப்படையில் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும் என்ற நிலையினையும் கொண்டு விளங்குகிறது.[8] குறும்பர் விடுகதைகளில் விடுகதைகளைக் கூறி முடிந்தவுடன் 'அது எந்து ', 'அது ஏன', 'ஏது ' என்பன பொருட்களைக் குறித்து வரும் விடுகதைகளை அடுத்தும், 'ஆர', 'அவ ஆர ' என்பன மனிதரைக் குறித்துவரும் விடுகதைகளை அடுத்தும் இடம் பெற்று ஊகத்தின் அடிப்படையில் விடை கிடைக்க வழிவகுக்கின்றன.

## 2.3 விடுகதை - சொல்லாட்சி குறித்த செய்திகள்

விடுகதை என்னும் சொல்வடிவம் தமிழ்மொழியின் இலக்கணங்களிலோ, இலக்கியங்களிலோ காணப்படவில்லை. ஆனால் பிசி, நொடி ஆகிய சொற்கள் விடுகதையைக் குறிப்பிடுவதாக உள்ளன. தொல்காப்பியர் விடுகதையைச் செய்யுளியல் சூத்திரம் 79-இல் பிசி எனக் குறிப்பிட, சூத்திரம் 165-இல் நொடி, பிசி ஆகிய இரு சொல்லாட்சிகளை "நொடியொடு புணர்ந்த பிசி " என்னும் அடிவழி கையாளுகிறார். இச்சொற்கள்,

"பிசியும், நொடியும் பிறர் வாய்க் கேட்டு "[9]

என்னும் மணிமேகலை அடியிலும், பெருங்கதை அடிகளான

"புதல்வரை மருட்டும் வொய்ந்நொடி பகரவும் "[10]

"பிசியும் நொடியும் பிறவும் பயிற்றி "[11]

என்பனவற்றிலும் இடம்பெற்றுள்ளன. பிசி என்னும் சொல் தற்போது தமிழ் வழக்காற்றில் இல்லை. ஆனால், நொடி என்ற சொல் ஈழப்பகுதியிலும்,[12] புதிர் (மருவிய நிலையில் பிதிர்) என்னும் சொல் பரவலாக எல்லாத் தமிழ் வட்டாரப் பகுதிகளிலும், வெடி என்னும் சொல் சேலம், திருச்சி, தென்னார்க்காடு, வடார்க்காடு ஆகிய மாவட்டங்களிலும், அழிப்பாங்கதை என்னும் சொல்வடிவம் கன்னியாகுமாரி, நெல்லை மாவட்டங்களிலும், விடுகதை என்னும் சொல் தற்காலத்தில் இலக்கியங்கள் மட்டுமின்றி எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்படுகின்றன. [13] ஆனால், புதிர்களை நொடி என்றும் கூறும் வழக்கு தற்காலத்தில் இல்லை.

பிற திராவிட இலக்கிய மொழிகளான மலையாளத்தில் 'விடிகதா', 'கடன்கதா' என்னும் சொற்களும், கன்னடத்தில் 'ஒடகதா ', 'விடிகதா' என்னும்

சொல் வடிவங்களும், தெலுங்கில் 'பொதுபுகதா', 'பொதுபுக்கலு', 'விடிகதா' ஆகிய சொற்களும், இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகளான சமக்கிருதத்தில் 'அஹநயம் ', 'அபநக் ', 'குடா ', 'கூதம்', 'சமஸ்யா ', 'பிரம்மோத்யம் ', பிரவக்லிகா ', ' விவாத ' என்னும் சொல் வடிவங்களும், மராத்தியில் 'உகான ' என்னும் வடிவமும், குஜராத்தியில் 'வரத் ' என்னும் சொல்லும், வங்காளியில் 'ப்ரஹெலிகா', 'தந்தா ' என்னும் சொற்களும், ஒரியாவில் 'பஹெலி ', 'தந்தா ', நந்தியா ' ஆகிய சொல்வடிவங்களும், அசாமியில் 'சதுர் ' என்னும் வடிவமும் காணப்படுகின்றன.

இல்க்கியமில்லாத திராவிடமொழிகளான குறும்பமொழியில் " புதிர் விடுவிக்கப்படும் கதை' ' என்னும் பொருளைத் தரும் 'புடுசோ-பளமே ' என்னும் வடிவமும், [14] குயி மொழியில் 'பகெனி ', 'பகெரி ' ஆகிய வடிவங்களும் [15] விடுகதையினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

## 2.4 விடுகதை போடப்படும் சூழல்

விழாக் காலங்கள், சடங்கு நிகழச்சிகள் போன்ற சூழ்நிலைகளில் பொழுதுபோக்கிற்காக மகிழ்ச்சியின் வெளிப்பாடாக விடுகதைகள் போடப்படுகின்றன. இச்சூழல்கள் தவிர்த்து வெறுமனே பொது இடங்களில் அரட்டை அடிக்கும் காலங்களிலும் பொழுதுபோக்கிற்காக விடுகதைகள் இடப்படுகின்றன. நகர்ப்புறங்களைவிட நாட்டுப்புறங்களில்தான் அதிக அளவில் விடுகதைகள் போடப்படும் பழக்கம் உள்ளது. செருமானிய நாட்டில் மணப்பெண்ணை விடுகதைப்போட்டியினை நடத்தித் தேர்ந்தெடுத்த செய்திக்குறிப்பு கிடைக்கப்பெறுகிறது [16] எல்லாச் சமுதாய மக்களிடமும் காணப்படுவதைப் போன்று பழங்குடி மக்களிடமும் விடுகதைகள் போடும் பழக்கம் உள்ளது. இதற்குக் குறும்பர் பழங்குடியினத்தவரும் விதிவிலக்கானவரல்லர். குறும்பர்களிடையே பொழுதுபோக்கின்போது மட்டுமே விடுகதைகள் போடும் வழக்கம் உள்ளது.

## 2.5 விடுகதை நிகழ்வு

விடுகதை நிகழ்விற்கு விடுகதை போடுபவர், விடுகதை விடுவிப்பவர், பார்வையாளர் என்ற முக்கோண நிலையில் மூன்று திறத்தினர் தேவைப்படுகின்றனர். [17] விடுகதை போடும்போது விடுகதை போடுபவர் மற்றும் விடுவிப்பவர் தவிர்த்த ஏனையோர் பார்வையாளராக அமைகின்றனர். விடுகதை நிகழ்ச்சியில் விடுகதை போடுபவர் பிரிவிலும், விடுவிப்பர் பிரிவிலும்

எண்ணிக்கையில் வேறுபட்ட பலதரப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த நபர்கள் இடம் பெறுகின்றனர். ஒரு குழுவில் எண்ணிக்கையில் ஒருவரேகூட இடம்பெற வாய்ப்புண்டு. குறும்பர் பழங்குடியினரிடையே சில நேரங்களில் முக்கோணநிலையில் மூன்று திறத்தினர் விடுகதை போடும் நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றனர். சில நேரங்களில் பார்வையாளர் இல்லாதநிலையில் விடுக்கதைபோடும் குழுவும், விடுவிப்பர் குழுவும் மட்டுமே இடம்பெறுவதுமுண்டு. இருபிரிவிலும் சம எண்ணிக்கையில் நபர்கள் இடம்பெறுவதுண்டு.

குறும்பர்களிடையே விடுகதைப்போட்டியும் நடைபெறுகிறது. போட்டியின்போது பிற விளையாட்டுக்களில் நடைபெறுவது போன்று பல்வேறு குழுக்கள் பிரிக்கப்பட்டுக் குழுக்களுக்கிடையே போட்டி நடத்தப்படுகின்றது. இது ஒருவகையான போட்டி. இன்னொரு வகையான போட்டியில் விடுகதை போடுபவர் ஒருவராக இருப்பார். இவர் பல்வேறு குழுக்களிடம் விடுகதை போடுவார். வெற்றிபெற்ற குழுவிற்குப் பரிசுகள் வழங்கப்படுவதுமுண்டு.

## 2.6 விடுகதையின் போக்கு

பண்பாட்டுப் பின்னணியினையும், சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டு விடுகதைகள் போடப்படுகின்றன. சில விடுகதைகள் வினாத்தன்மையினை ஏற்றும், சில விடுகதைகள் வினாத்தன்மையில்லாத நிலையிலும் போடப்படுகின்றன. இவ்விருநிலைகளும் குறும்பர்களின் விடுகதைகளில் இடம்பெறுகின்றன.

பல்வேறுபட்ட மக்களின் அறிவைச் சோதித்துப் பார்க்க விடுகதைகள் வழிவகுத்துக் கொடுக்கின்றன. மேலும், இவை அவர்களின் அறியும் திறனையும் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றன. அறிவு வெளிப்பாட்டின் வடிகாலாக விடுகதைகள் விளங்குகின்றன. விடுகதையின் அடிப்படைப்போக்கே குழப்பநிலையை உருவாக்குவதாகும். [18] இந்நிலைக்குத் தடைக்கூறுதான் காரணம் என இராபர்டு பெட்சு குறிப்பிடுகிறார். இப்போக்கினைக் குறும்பர் விடுகதைகளும் கொண்டுள்ளன.

அக்க நீரு உத்தங்க மெதந்தது (அக்காள் நீரின் மேல் மிதந்தாள்)
தங்கெ நகெதது (தங்கை சிரித்தாள்) [19]
(விடை : தாமரை இலையும், பூவும்)

என்னும் விடுகதையில் அக்காள் நீரின் மேல் மிதக்கும்போது (இறந்தால் தான் மிதக்க முடியும்) தங்கை எவ்வாறு சிரிக்கமுடியும் என்னும் குழப்பநிலை ஏற்படுகிறது. இதில் மிதக்கும்நிலையே தடைக்கூறாக அமைகிறது.

## 2.7 விடுகதையின் தன்மை

விடுகதை என்பது ஒரு சொல் விளையாட்டாகும். நாட்டுப்புற வழக்காறுகளுள் குறுவடிவுடைய பழமொழியைவிடச் சற்று பெருவடிவுடையது விடுகதையாகும் என்பது பொதுநியதி. ஆனால் குறும்பர் விடுகதைகளில் குறுவடிவுடையதும் (ஒரு அடி அல்லது இரு அடிகளால் ஆனது.) பெருவடிவுடையதுமான (மூன்று முதல் ஆறு அடிகள் வரை) விடுகதைகள் இடம் பெற்றுள்ளன.

விடுகதைகளில் சொற்றிறத்திற்கு வாய்ப்புண்டு; அறிவுத்திறனிற்குப் பயிற்சியுண்டு. பழங்குடியினத்தைச் சார்ந்தவராகக் குறும்பர்கள் விளங்கியபோதும், அவர்களின் எல்லா விடுகதைகளிலும் இடம்பெற்ற சொல்லாட்சிகள் அவர்களின் சொற்றிறத்தையும், அறிவுத்திறனையும் பறைசாற்றுகின்றன. விடுகதையில் இடம்பெறும் சொல்வடிவங்கள் அடிப்படைக்கருத்தினை வெளிப்படுத்தும்பாங்கில் மறைமுகநிலையில் இடம் பெற்றிருக்கின்றன. இவ்வடிப்படைக் கருத்து உருவகமாகவும் இடம்பெற வாய்ப்புண்டு. சுருங்கக்கூறின், வினாவிற்கும் விடைக்கும் முடிச்சுபோடும் ஒரு முயற்சி இடம்பெறுகிறது. மேலும், இதில் செய்திக்கு மட்டுமின்றி வடிவ அழகிற்கும் இடமுண்டு. வடிவ அழகினைப் பொறுத்தவரை குறும்பர் விடுகதைகளில் உள்ள அடிகளில் இடம்பெறும் சொற்களின் ஓசை நயமே/ஓசை இயைபே சிறப்புடன் அமைகிறது. எடுத்துக்காட்டாக,

அட்டகு ஆறு கண்ணு (அட்டைக்கு ஆறு கண்கள்)
மொட்டகு மூறு கண்ணு (முட்டைக்கு மூன்று கண்கள்) [20]
(விடை : புல்லாங்குழலும், தேங்காயும்)

என்னும் விடுகதையில் முதலடியின் முதல் சொல்லின் இரண்டாம் எழுத்து முதல் நான்காம் எழுத்துவரையிலுள்ள வடிவத்திற்கும், இரண்டாம் அடியின் முதல் சொல்லில் உள்ள இரண்டாம் எழுத்து முதல் நான்காம் எழுத்துவரையிலுள்ள வடிவத்திற்கும் இடையே ஓசைநயம் காணப்படுகிறது. இதனைப் போன்று முதலடியின் இரண்டாம் சொல்லின் ஈற்றெழுத்திற்கும் இரண்டாம் அடியின் இரண்டாம் சொல்லின் ஈற்றெழுத்திற்கும் இடையே ஓசைநயம் இடம் பெற்றுள்ளது. ஆனால் இரண்டிலும் ஈற்றுச் சொற்கள் ஒன்றாக அமைந்து ஓசை இயைபு காணப்படுகிறது.

விடுகதையின் தன்மையே நிகழ்த்துதல் களனிற்கு அறைகூவலும், அதனை அடுத்து விடையிறுக்கப்படலுமே ஆகும். விடுகதையில் சிக்கலுக்கும்

அளிக்கப்படும் விடைக்குமிடையே பொருண்மைப்பொருத்தம் அமைந்திருக்க வேண்டும். இத்தகைய வரையறைகளையும், கட்டமைப்புகளையும் குறும்பர் விடுகதைகள் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு பண்பட்ட மொழிகளுக்கு ஒத்தநிலையில் சிறந்து விளங்குகின்றன.

## 2.8 விடுகதையின் பகுப்புகள்

விடுகதைகளைப் பாகுபடுத்த வரையறை செய்யப்பட்ட அடிப்படைகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. ஆனால், அவற்றைப் பாகுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டுப்புறவியல் அறிஞர்கள் தத்தம் ஆய்வு மனப்பான்மைக்கு ஏற்றவாறு விடுகதைகளின் அமைப்புகள், பயன்பாடுகள், தன்மைகள், இயற்கை மற்றும் சமூகப்பழக்கங்கள், பொழுதுபோக்குச்சார்பு நிலை, சொல்லுகின்ற பாங்குகள், இலக்கண அமைவுகள், பண்புகள், இலக்கியப்போக்குகள் என்பனவற்றில் ஒன்றையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றையோ அடிப்படைகளாகக் கொண்டு பாகுபடுத்துகின்றனர். பல்வேறு அறிஞர்கள் பல்வேறு நிலைகளில் பாகுபாடுகள் செய்தபோதிலும் வாழுமிடத்தின் இயற்கைச்சூழல்களை அடிப்படையாகக் கொண்டும், சமூகப்பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் இவையிரண்டுமல்லாத பிற என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டும், குறும்பர் பழங்குடியினரின் விடுகதைகளைப் பாகுபடுத்த முடிகிறது. பல்வேறு நிலைகளில் பாகுபாடுகள் செய்யும் அளவிற்கு இக்குறும்பர் பழங்குடியினரிடம் விடுகதைகள் இடம் பெற்றிருப்பது இவண் குறிப்பிடத் தகுந்த செய்தியாகும்.

## 2.9 முடிபுகள்

வாய்மொழி இலக்கியப்பரப்பினுள் அடங்கும் நாட்டுப்புற இல்கியங்களான காப்பியங்கள், பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியன பயன்பாட்டு இலக்கியங்களாகத் திகழ்கின்றன. வாய்மொழி இலக்கியங்கள் இயற்கைச்சூழல்களில் உருவாக்கப்படுவதால் பாடுபவருக்கும், இயற்கைச்சூழலுக்கும் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. குறும்பர் விடுகதைகளும் மலைப்பாங்கு மற்றும் வனப்பகுதிகள் நிறைந்த இயற்கைச்சூழல்களில் உருவாக்கப்படுகின்றன. குறும்பரின் விடுகதைகளில் இடம்பெற்ற வாழ்வியல் செய்திகள் அவர்களின் மரபுவழிப்பட்ட வாழ்க்கையோடு தொடர்புடையவை.

விடுகதைகளுக்குக் கொடுக்கப்படும் விளங்கங்கள் எல்லாம் குறும்பரின் விடுகதைகளுக்கும் பொருத்தமுற அமைகின்றன. குறும்பரின்

விடுகதைகளை அடுத்துவரும் வினாவடிவங்கள், விடைகளைப் பொருட்களா? அல்லது மனிதரா? என்பதனை ஊகத்தின் அடிப்படையில் கண்டுபிடிக்க வழிவகுக்கின்றன.

திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் விடுகதை என்னும் சொல் இல்லை. தற்காலத்தமிழ் இலக்கியங்களிலும், பிற திராவிட இலக்கியமொழிகளிலும் விடுகதை என்னும் சொல் காணப்படுகிறது. ஆனால் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்த இலக்கிய மொழிகளில் 'விடுகதை ' என்னும் சொல்லிற்கு நிகரான சொற்கள் காணப்படுவதைப் போன்று இலக்கியமில்லாத் திராவிட மொழிகளான குயி, குறும்பர் ஆகிய மொழிகளிலும் சொல் வடிவங்கள் காணப்படுகின்றன.

குறும்பர் பழங்குடியினரிடையே பொழுதுபோக்கின்போது மட்டுமே விடுகதை போடும் பழக்கம் உள்ளது.

மகிழச்சியின் வெளிப்பாடாகக் குறும்பர்கள் விடுகதைகளைப் போட்டாலும், விளையாட்டுப்போட்டிகளைப் போன்று விடுகதைப் போட்டிகளையும் நடத்துகின்றனர்.

விடுகதைகளில் காணப்படும் குழப்பநிலைக்கு அடிப்படையாக அமையும் தடைக்கூறுகள் இடம்பெற்று, பின் அவற்றின் உள்ளார்ந்த நிலையை உணரும்போது விடைதருபவரின் அறிவுத்திறனை எடைபோடமுடிகிறது. இத்தகையப் போக்கினைக் குறும்பர் விடுகதைகள் பெற்றுள்ளன.

குறுவடிவுடையதும், பெருவடிவுடையதுமான குறும்பர் விடுகதைகள் அவர்களின் சொற்றிறத்தையும், அறிவுத்திறத்தையும் பறைசாற்றும் போக்கில் அமைந்துள்ளன.

நாட்டுப்புறவியலறிஞர்கள் விடுகதைகளைப் பல்வேறாகப் பாகுபாடுகள் செய்துள்ள நிலைக்கு ஏற்றவாறு குறும்பர் பழங்குடியினத்தவரின் விடுகதைகளும் பாகுபாடுகள் செய்வதற்குரிய நிலையில் உள்ளதால் அவர்களிடையே விடுகதைகளின் ஆளுமை எத்தகைய நிலையில் இடம் பெற்றுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

# அடிக்குறிப்புகள்

1. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் - சில அடிப்படைகள், ப. 154.
2. ஜி. வசந்தா, தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள் - ஒரு சமுதாய ஆய்வு, ப. 3.
3. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 10.
4. M. Dorson Richard (Ed), Folklore and Folklife - An introduction, pp, 136-139.
5. K.B. Das, Odi . Lokgita 'O' Kahani (Oriya), p. 250.
6. S. Santhombi Singh, "Manipuri Riddles: Towards Classification and Analysis", Folklore, vol. 31, No. 357-358, March-April 1990, p.86.
7. காண்க பி.எ. 3:11.
8. S. Santhombi Singh, Op.Cit., p. 11.
9. மணி. 22.62.
10. பெருங். உஞ்சை. 33-72.
11. பெருங். உஞ்சை. 33-175.
12. ஆறு. இராமநாதன், தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு, ப. 125.
13. சு. சக்திவேல், மு.நூ., ப. 119.
14. கப்பாலா குடியிருப்பு தகவலாளி திரு. க. இராமன் தந்த செய்தி.
15. Raghunath Rath, "A study of Kui Riddles", *Vanyajathi, Vol.* XLIX, No. 4, Oct. 1996, p. 12.
16. சு. சக்திவேல், மு.நூ., ப. 122.
17. தே. லூர்து, மு.நூ., ப. 286.
18. மே.ப., ப. 293.
19. காண்க பி.எ. 3:2.
20. காண்க பி.எ. 3:5.

# 3. குறும்பர் விடுகதைகளின் பாகுபாடுகள்

## 3.1 முன்னுரை

விடுகதைகள் குறித்து ஆய்வு செய்த அறிஞர்கள் தங்களின் சிந்தனை வளங்களுக்கு ஏற்றவாறு அவற்றைப் பாகுபடுத்தியுள்ளனர். இவர்கள் மேற்கொண்ட பாகுபாடுகள் நிரந்தரமான பொதுமைக்கொள்கைகளின் அடிப்படையில் அமையவில்லை. விடுகதைகளின் அமைப்புகள், பயன்பாடுகள், தன்மைகள், இயற்கை மற்றும் சமூகப்பழக்கங்கள், பொழுதுபோக்குச் சார்புநிலை, சொல்லும் பாங்குகள், இலக்கண அமைவுகள், பண்புகள், இலக்கியப்போக்குகள் ஆகியனவற்றில் ஒன்றையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்லறயோ அடிப்படைகளாகக் கொண்டு அவை பாகுபாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் இரகுநாத் இராத் இரு பிரிவுகளாகவும், துர்க்கா பகவத் ஆறு வகைகளாகவும், ஆரியா ஆறு பகுப்புகளாகவும், ரோஜா ஆபிரகாமும் ஆலன் தண்டிசும் ஒன்பது பாகுபாடுகளாகவும், மரிய லீச்சு இரண்டாகவும், சுப்பிரமணியனார் ஒரு அடிப்படையில் இரண்டாகவும், பிறிதொரு அடிப்படையில் நான்காகவும், இராமனாதன் இரு நிலைகளாகவும், சாந்தி ஐந்து பிரிவுகளாகவும் விடுகதைகளைப் பாகுபாடு செய்துள்ளனர்.[1]

குறும்பர்களிடையே காணலாகும் விடுகதைகள் இயற்கைச் சூழல்களின் அடிப்படையிலும், சமூகப் பண்பாடுகளின் அடிப்படையிலும், இவை தவிர்த்த பிறவற்றின் அடிப்படையிலும் எழுந்தவை போன்று தோற்றமளிக்கின்றன.

இந்நிலை ஆரியாவின் பாகுபாட்டு நிலைக்கு ஒத்து அமைவதாக உள்ளது என்பது இவண் குறிப்பிடத் தகுந்த செய்தியாகும். இதனடிப்படையில் குறும்பர் விடுகதைகள் பாகுபடுத்தப்படுவதனை இவ்வியல் மேற்கொள்கிறது.

## 3.2 குறும்பர் விடுகதைகளின் உருவாக்கம்

குறும்பர்கள் இயற்கைவளம் நிறைந்த மரங்கள் அடர்ந்த மலைச்சரிவுகளில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளில் காட்டாறுகளும், பெரிய பெரிய நீரோடைகளும் நிறைந்து காணப்படுகின்றன. மேலும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களில் வாழ்வதால் வனப்பகுதியைக் குறித்தும், வான்பகுதியைக் குறித்தும் தங்கள் கற்பனைச் சிறகினை விரித்து எண்ணச் சிதறல்களை அதிக அளவில் தங்கள் விடுகதைகளின்பால் இழையோடச் செய்துள்ளனர். அன்றியும், இவர்கள் நீலகிரியில் வாழும் பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட பிற திராவிட இனப் பழங்குடியினரைப் போன்று தமக்கேயுரிய சமூகப் பண்பாட்டினை அழிந்துவிடாமல் பாதுகாத்து வருகின்றனர். எந்தவொரு சமூகப்பண்பாட்டிலும் வாழ்வியலைச் சார்ந்த அம்சங்களே முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. எனவே மனித இனத்தில் வாழும் சூழலும், வாழ்வியல் அம்சங்களும் இன்றியமையா இடங்களை ஆக்கிரமித்து விடுகின்றன. இவ்வாக்கிரமிப்பு மனித இனத்தில் செயல்பாடுகளின் வெளிப்பாடான பாடல்கள், கதைகள், பழமொழிகள் விடுகதைகள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுகின்றது.[2] குறும்பர் விடுகதைகளிலும் இந்நிலையினைக் காணமுடிகிறது. எனவே, குறும்பர் விடுகதைகளை இப்போக்கின் அடிப்படையில் பாகுபாடு செய்ய அடிப்படை " ஏது " கிடைக்கப் பெறுகிறது.

## 3.3 குறும்பர் விடுகதைகளின் பகுப்புகள்

கிடைக்கப்பெற்ற குறும்பர் விடுகதைகளை, அவை உருவாகுகின்ற நிலையினை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பகுக்கலாம். அவை,

1. இயற்கையாகவே அமைந்தனவற்றை அடிப்படையாகக் கொண்டவை
2. சமூகப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை
3. பிற என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை

என்பனவாகும். விடுகதைகளின் விடைகளை அடிப்படையாகக் கொண்டு இவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

### 3.3.1 இயற்கையாகவே அமைந்தனவற்றை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

குறும்பர்கள் வனப்பகுதிகளில் வாழ்ந்த போதிலும், விடுகதைகளில் இடம்பெறுமளவிற்கு இயற்கையின் படைப்புகளான வானம், நட்சத்திரங்கள், காடுகள், நீர்நிலைகள், ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், நீந்திச் செல்லும் உயிரினங்கள், பறந்து செல்லும் உயிரினங்கள், நடந்து செல்லும் உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவை இவர்களின் மனதில் இடம்பெற்றுள்ளன.[3]

### 3.3.1.1 வானம் - நட்சத்திரங்கள் - காடுகள் குறித்த விடுகதைகள்

குறும்பர்கள் வானத்தின் எல்லைத் தன்மையைக் குறித்து அறிந்து வைத்துள்ளனர். இவர்களின் அறிதிறனை,

எஞ்ஞாத கடலு ஏது?[4]
(சென்றடைய முடியாத கடல் எது?) - விடுகதை
பானு (வானம்) - விடை

என்னும் விடுகதை எடுத்துக்காட்டுகிறது. இவ்விடுகதையில் வானத்தின் எட்ட முடியாத எல்லலையையும், சென்றடைய முடியாத கடலின் பரப்பினையும் குறித்து மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்த செய்தியாகும். மேலும், அளவிட முடியாத நிலையில் வானில் இடம்பெறும் நட்சத்திரங்களைக் குறித்து,

அன்னத கோலு
எண்ணோங்கு முடிய[5]
(அளவிட முடியாத தானியங்கள்
எண்ண முடியவில்லை) - விடுகதை
பெள்ளி மீனு (நட்சத்திரங்கள்) - விடை

என்னும் விடுகதை குறிப்பிடுகிறது.

இயற்கையாகவே அமைந்த காடும் இவர்களின் விடுகதைச் சிந்தனையிலிருந்து தப்பவில்லை. இதனை,

பலெ பெந்தது
பகிரி பேயு[6]

(வலை எரிந்தது
கயிறு எரியவில்லை) - விடுகதை
வனவு தாரி (காடும், பாதையும்) - விடை

என்னும் விடுகதை எடுத்துக்காட்டுகிறது. மரங்கள் ஒன்றோடொன்று உரசியோ அல்லது யாரேனும் தீ வைத்தோ காடு எரிந்து போனாலும், அதனூடே செல்லும் பாதை அழியாது என்பதனை இவ்விடுகதை விவரிக்கிறது.

### 3.3.1.2 நீர், நீர்நிலைகள் குறித்த விடுகதைகள்

இயற்கைப்படைப்புகளில் ஒன்றான நீரைக் குறித்தும் குறும்பர்கள் தெரிந்து வைத்துள்ளனர். தங்களின் அறிவிற்கு எட்டியநிலையில் நீரின் தன்மைகளான அள்ளமுடியாத நிலையினையும், கிள்ள முடியாத நிலையினையும் எடுத்து விவரித்துள்ளனர். இதனை,

எத்தோங்கு முடிதது
ஜுள்ளோங்கு முடிய[7]
(அள்ள முடியும்
கிள்ள முடியாது) - விடுகதை
நீரு (நீர்) - விடை

என்னும் விடுகதை தெளிவாக்குகிறது.

நீர்நிலையான காட்டாறு தாண்ட முடியாத அளவில் மிக அகலமானது என்பதனை மிகப்பெரிய மரத்தடிக்கு உருவகப்படுத்தி மிகத் துல்லியமாக விடுகதையில் தெளிவுபடுத்துகின்றனர்.[8]

மேலும், கடலின் பரந்துபட்ட எல்லையினைச் சென்றடைய முடியாது என்பதனையும் தெரிந்து வைத்துள்ளனர்.[9]

### 3.3.1.3 ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் குறித்த விடுகதைகள்

குறும்பர்கள் ஊர்ந்து செல்கின்ற உயிரினங்கள் குறித்தும் மிகத் தெளிவாக அறிந்து வைத்துள்ளனர். எனவேதான், இவற்றின் செயல்பாடுகள் குறித்துத் தங்கள் விடுகதைகளில் எதிரொலிக்கச் செய்துள்ளனர். இதனை,

அவ்வெ பாடி
மகளு கொணிகி[10]

(தாய் பாடகி
மகள் நாட்டியக்காரி) – விடுகதை
சண்ணானு (அணில்) – விடை

என்னும் விடுகதை தெளிவாக்குகின்றது. அணிலின் ஒலி எழுப்புமிடம் தலையைச் சார்ந்துள்ள பகுதி என்பதால் தலையைத் தாய்க்கு உருவகப்படுத்தியும், ஒலி எழுப்பும்போது உடல் அசைவதால் உடற்பகுதியை மகளாக உருவகப்படுத்தி நாட்டியக்காரியாகவும் கற்பனை செய்து அணிலின் செயல்பாடுகளை உணர்த்தியுள்ள திறம் வியக்க வைக்கிறது. இதனைப் போன்று ஊர்ந்து செல்லும் உயிரினங்களான பேன்,[11] நண்டு, [12] பாம்பு[13] ஆகியவை குறித்த விடுகதைகளும் இவர்களிடம் இடம்பெற்றுள்ளன.

### 3.3.1.4 நீந்திச் செல்லும் உயிரினங்கள் குறித்த விடுகதைகள்

குறும்பர்கள் காடுகளில் வாழ்ந்தபோதிலும் நீர்நிலைகளில் வாழும் உயிரினமான மீன்கள் குறித்தும் தெரிந்து வைத்துள்ளனர். அவற்றின் பயன்பாட்டுநிலையைக் குறித்தும் அறிந்து வைத்திருப்பதால்தான் தங்கள் விடுகதைகளில் அவற்றைப் பிரதிபலிக்கவும் செய்துள்ளனர். இந்நிலையை,

ஒந்து மனுச சத்தொட்டு
அங்கிடிகு ஒத்து[14]
(ஒரு மனிதன் செத்தவுடன்
கடைக்குப் போகிறான்) – விடுகதை
ஒணங்கித மீனு (உலர்ந்த மீன்) – விடை

என்னும் விடுகதையும்,

சத்தவரு சத்தெகு ஓதோ[15]
(இறந்தவர்கள் சந்தைக்குப் போனார்கள்) – விடுகதை
ஒணங்கித மீனு (உலர்ந்த மீன்) – விடை

என்னும் விடுகதையும் சுட்டுகின்றன.

உலர்ந்த மீனும் (கருவாடும்) பயன்படும் என்பதனைத் தெரிந்துள்ளமையால்தான் எதனையும் நுணுகிப்பார்த்து வாழ்க்கை யனுபவத்தில் (உண்பதில்) செயல்படுத்துபவர்கள் என்பதனை அறிய முடிகிறது. நீந்துவனவற்றில் மீன் மட்டுமே இவர்களின் விடுகதைகளில் இடம் பெற்றுள்ளது.

### 3.3.1.5 பறந்து செல்லும் உயிரினங்கள் குறித்த விடுகதைகள்

குறும்பர்களின் கவனத்தில் இருந்து பறந்து செல்லும் உயிரினங்களும் தப்பவில்லை என்பதனை இவர்களிடையே நிலவும் விடுகதைகள் குறிப்பிடுகின்றன. காகம் கரைந்திடும்போது எல்லாக் காகங்களும் ஒருசேரக் கூடுவதனை,

ஒப்பன கொரெசி நோடியொட்டு
ஊருனவே கொரெசியது[16]
(ஒருவனைக் கூப்பிட்டான். பார்க்கும்போது
ஊரையே கூப்பிட்டு இருக்கிறான்) – விடுகதை
காகெ (காகம்) – விடை

என்னும் விடுகதை எடுத்துக்காட்டுகிறது. இதனைப்போன்று, ஆந்தை,[17] சேவல்,[18] தேனீ[19] ஆகியவை குறித்த விடுகதைகளும் இடம் பெறுகின்றன.

### 3.3.1.6 நடந்து செல்லும் உயிரினங்கள் குறித்த விடுகதைகள்

இயற்கைப் படைப்புகளில் ஓர் இனமான நடந்து செல்லும் உயிரினங்களும் குறும்பர்களின் விடுகதைகளில் இருந்து தப்பவில்லை என்பதும் குறிப்பிடத்தகுந்ததொரு செய்தியாகும். இவ்வகை உயிரினங்களில் மனிதனும், ஆடும், பசுவும் மட்டுமே இவர்களின் விடுகதைகளில் இடம்பெறுகின்றன. பின்வரும்,

நாகு காலு மனுச
கண்டவன் கயலு சத்தது[20]
(நான்கு கால் மனிதன்
கண்டவன் கையால் செத்தான்) – விடுகதை
கண்டவன் (மனுச), (கண்டவன் (மனிதன்)
சத்தது (நாலுகாலுமனுச) செத்தது (ஆடு)) – விடை

என்னும் விடுகதையும்,

அவ்வெ சத்த நாத
மகளு சத்த பாடெ "[21]

(தாய் இறந்தால் நாற்றம்
மகள் இறந்தால் மணம்) – விடுகதை
மாடுமு பாலு (பசுவும் பாலும்) – விடை

என்னும் விடுகதையும் இவற்றின் எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

### 3.3.1.6.1 உடல் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

எல்லாவகையான உயிரினங்களின் உடல் உறுப்புகள் குறும்பர் விடுகதைகளில் இடம் பெற்றிருந்தபோதிலும் மனித உடல் உறுப்புகளே அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இடம்பெற்றுள்ள 13 உறுப்புகளில் ஒரு உறுப்பு சேவல் கோழியின் உறுப்பாகவும், இரு உறுப்புகள் எல்லா உயிரினங்களுக்கான பொது உறுப்புகளாகவும், ஏனைய 10 உறுப்புகள் மனித உறுப்புகளாகவும் இடம் பெற்றுள்ளன.[22] உறுப்புகள் குறித்து விடுகதையில் அதிக அளவாக ஒருசேர மூன்று வெவ்வேறான உடல் உறுப்புகள் காணப்படுகின்றன. இந்நிலைக்கு,

ஒந்து தாரியலு
ஒந்து மனுச ஒத. அல்லி
ஒந்து அண்ணு இந்துட்டது.
அதுன நோடியது ராடு ஆளு.
அதுன எத்தியது அத்து ஆளு.
அதுன திந்து தீரிசியது மொவந்து – ராடு ஆளு"[23]

(ஒரு பாதையில்
ஒரு மனிதன் போகிறான். அங்கு
ஒரு பழம் கிடந்தது
அதைப் பார்த்தது இரண்டு ஆட்கள்
அதை எடுத்தது பத்து ஆட்கள்
அதைச் சாப்பிட்டுத் தீர்த்தவர்கள்
முப்பத்திரண்டு ஆட்கள்) – விடுகதை

ராடு ஆளு – இரண்டு கண்கள்
அத்து ஆளு – பத்து விரல்கள்
மொவந்து ராடு ஆளு – முப்பத்திரண்டு பற்கள் – விடை

என்னும் விடுகதை எடுத்துக்காட்டாக அமைகிறது. இதில் கண்கள், விரல்கள், பற்கள் ஆகிய உறுப்புகள் இடம் பெற்றுள்ளன. பல்வேறு உறுப்புகள் ஒருசேர இடம்பெறுகின்றபோது அவ்விடுகதை அதிக அளவு சிந்தனைக்கு இடம் கொடுப்பதனை உணர முடிகிறது.

### 3.3.1.7 தாவரங்களை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

இயற்கைப் படைப்புகளைப் பொறுத்தவரை தாவரங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தாவர இனத்தில் அங்கம் வகிக்கும் மரம், செடி, கொடிகளும் குறும்பர் விடுகதைகளில் இடம் பெறுகின்றன.[24]

மரம் என்ற நிலையில் ஆமணக்கு, ஈச்சமரம், கல்லக்கடலை, வாழை என்பனவும், செடி என்ற நிலையில் கீரை, தொட்டால்வாடி, புல் என்பனவும், கொடி என்ற நிலையில் நீரில் படரும் தாமரையும் இடம்பெறுகின்றன. பின்வரும்,

மரகு எல்லா
தொட்ட மர[25]
(மரங்களில் எல்லாம்
பெரிய மரம்) - விடுகதை
கல்லகடலெமர (கல்லக்கடலை மரம்) - விடை

என்னும் விடுகதையும்,

ஒந்து கொண்ணென தட்டியலெ
சாவிர கிளி எத்தது "[26]
(ஒரு கிளையைத் தட்டினதில்
ஆயிரம் கிளிகள் எழுந்தன) - விடுகதை
கீரெ (கீரை) - விடை

என்னும் விடுகதையும்,

அக்க நீரு உத்தங்க மெதந்தது
தங்கெ நகெதது [27]
(அக்காள் நீரின் மேல் மிதந்தாள்
தங்கை சிரித்தாள்) - விடுகதை
தாமரெ எலெவு ஊ (தாமரை இலையும், பூவும்) - விடை

என்னும் விடுகதையும் முறையே மரம், செடி, கொடி என்ற நிலைகளில் சான்றுகளாய் அமைந்து இயற்கைப் படைப்புகளான இவையும் இவர்களின் விடுகதைகளில் பாங்குற இடம்பெற்றுள்ளதனைக் கருத்தாய்க் குறிப்பிட வாய்ப்பினைத் தருகின்றன.

## 3.3.2 சமூகப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

சமூகத்தின் அங்கமான மனிதனின் நாகரிகம், அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் மற்றும் இவற்றை ஒத்த பிற தன்மைகளின் தொகுப்பே பண்பாடாகும். [28] ஆன்மீகம், அறிவுநிலை, பொருள்நிலை, வாழ்வியல் அம்சங்கள், சமூகத்தின் மரபுத்தன்மை ஆகியவை அடங்கிய ஒரு தொகுதியே பண்பாடு என்பதாகும்.[29] சமூகமரபுகளின் கூட்டே பண்பாடு என லூயி அறிஞரும், சமூகப்பாரம்பரியமே பண்பாடு என இலிண்டன் என்பாரும் பண்பாட்டிற்கு விளக்கம் தருகின்றனர். மேலும், அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைத் தலைமுறை தலைமுறையாகப் பேணித் தருகின்றவையே பண்பாடாகும். [30] இவ்விளக்கங்களை ஆராயின், எல்லா விளக்கங்களும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியமுடிகிறது. எனவே சமூகமும், பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது. இதனால் சமூகப்பண்பாட்டில் வாழ்வியலைச் சார்ந்த அம்சங்களே முக்கிய இடங்களைப் பிடிக்கின்றன என்பது தெளிவாகிறது. இதனை மனித இனச் செயல்பாடுகளின் வெளிப்பாடுகளில் ஒன்றான விடுகதைகள் மூலமும் காணலாம். குறும்பர் விடுகதைகளிலும் இப்போக்கினைக் காணமுடிகிறது. இவர்களிடையே காணப்படும் சமூகப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகளை ஐந்து பிரிவுகளின்கீழ் அடக்கலாம். அவை,

1. வாழிடம் மற்றும் சார்பானவற்றை அடிப்படையாகக் கொண்டவை
2. வீட்டுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டவை
3. உணவுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டவை
4. எழுதுபொருட்களை அடிப்படையாகக் கொண்டவை
5. ஊர்தியினை அடிப்படையாகக் கொண்டவை

என்பனவாகும்.

### 3.3.2.1 வாழிடம் மற்றும் சார்பானவற்றை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

வாழுமிடமான வீட்டின் கட்டுமான அமைப்போடு தொடர்புடைய பொருட்கள் இப்பழங்குடியினரின் விடுகதைகளில் இடம் பெறுகின்றன. இதனை நிலைநாட்டும் வண்ணம் பின்வரும்,

ஒகு எந்தலெ ஓதது
பா எந்தலெ பந்தது[31]
(போ என்றால் போகிறது
வா என்றால் வருகிறது) – விடுகதை
அடிலு (கதவு) – விடை

என்னும் விடுகதையைச் சுட்டலாம். இதில் வீட்டின் கட்டுமான அமைப்போடு தொடர்புடைய 'கதவு' என்னும் பொருள் இடம் பெற்றுள்ளது. இதனைப் போன்று செங்கற்கள், [32] வீட்டுக்கூடு (மோட்டுப்பகுதி)[33] ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

வாழுமிடத்தில் சார்புநிலையில், குறும்பர்கள் வாழும் ஊரின்கண் அமைந்த பாதை இடம் பெறுகிறது. விடுகதையில் பாதை கைத்தடிக்கு (ஊன்றுகோல்) உருவகப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களிடையே வழக்கில் இருந்து வருகிறது.

### 3.3.2.2 வீட்டுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

அன்றாட வாழக்கையில் உணவு, உடை, இருப்பிடம் ஆகியன மிகவும் தொடர்புடையனவாகும். குறும்பரின் அன்றாட வாழ்வில் உணவு, உடை ஆகியவற்றோடு அடுப்பு, அளவைப் பாத்திரம், ஊசி, எண்ணெய் விளக்கு, ஏணி, கதவுப்பூட்டு, குழல், சுண்ணாம்பு, செருப்புகள், தண்ணீர்ப் பானை, திருவை, துடப்பம், துப்பாக்கி, மத்தளம், மெழுகுத்திரி, ரேடியோ, வத்திப்பெட்டி, வலை, விளக்கு எண்ணெய் ஆகியன[34] இடம் பெறுவதனை விடுகதைகள் குறிப்பிடுகின்றன.

குறும்பரின் விடுகதைகளில் பெரும் அளவில் இடம்பெறும் வீட்டுப்பொருள் திருவையாகும். பின்வரும்,

1. திருகி முருகி மலெகு பேரு எந்து[35]
(திரும்பவும் சுற்றவும் (செய்யும்) மலைக்குப் பெயர் என்ன?)
– விடுகதை
பீசு – கல்லு (திருவை) – விடை

2. தின்னுவது பாயிலு
பேலுவது அள்ளெலு [36]
(தின்பது வாயால்
வெளியே தள்ளுவது பக்கவாட்டில்) –விடுகதை
பீசு – கல்லு (திருவை) – விடை

3. பிட்ட மனெ
தும்பி மொரெத [37]
(பெரிய வீடு
சிறிய வாசல்) – விடுகதை
பீசு – கல்லு (திருவை) – விடை

விடுகதைகள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. எண்ணெய் விளக்கும், சுண்ணாம்பும் இரு விடுகதைகளில் இடம் பெற்று, ஏனையவை ஒரே ஒரு விடுகதையில் இடம் பெற்றுள்ளன.

### 3.3.2.3 உணவுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

அன்றாட வாழ்வியல் நிலையில் உணவுப் பொருட்களுக்கும் முக்கிய இடம் உண்டு. உணவுப் பொருட்களும் குறும்பர்களின் விடுகதைகளில் இடம் பெறுவதிலிருந்து தப்பவில்லை.[38] 15 உணவுப்பொருட்கள் இடம்பெற்றிருந்த போதிலும், திரவநிலையில் உணவுப் பொருளாக இடம் பெற்றவை நீர், [39] தேங்காய் நீர், [40] தேன், [41] பால்[42] ஆகியனவாகும்.

நேரடியாகச் சாப்பிடப்படும் பொருட்களாக இட்லி[43], பலாப்பழம்,[44] முட்டை,[45] வாழைப்பழம்,[46] வேர்க்கடலை [47] ஆகியன இடம்பெறுகின்றன.

நேரடியாகச் சாப்பிடப்படும் பொருட்களாக அமையாமல் பிற சாப்பிடப்படும் பொருட்களோடு ஏதேனும் ஒரு நிலையில் கலந்து உண்ணப்படும் பொருட்களாக உப்பு,[48] கடுகு,[49] தேங்காய்,[50] பல்லாரி,[51] பாகற்காய்,[52] பூசணிக்காய்,[53] மிளகாய்,[54] ஆகியன குறிப்பிடப்படுகின்றன.

இவண் குறிப்பிடப்பட்ட பல்வேறு நிலைகளில் அமைந்த உணவுப் பொருட்களில் பின்வரும்,

1. கப்பெ கலக்காத நீரு[55]
   (தவளை கலக்காத நீர்) - விடுகதை
   தெங்காயி நீர (தேங்காய் நீர்) - விடை

2. குன்ன - குன்ன பெட்டி வாகெ
   குன்ன - குன்ன பெயிர - கல்லு[56]
   (சின்ன சின்ன வெட்டியில்
   சின்ன சின்ன வயிரக்கற்கள்) - விடுகதை
   பேரு - கடலை (வேர்க்கடலை) - விடை

3. காயி கக்க - மிக்க
   ஊ சின்ன - மின்ன[57]
   (காய் வெடித்துச் சிதறும்
   பூ பொன்போல் மின்னும்) - விடுகதை
   கடுகு - விடை

ஆகிய விடுகதைகள் முறையே வகைக்கு ஒன்றாக எடுத்துக்காட்டுகளாய் அமைந்து நிரூபணம் செய்வதுபோல் விளங்குவது சுட்டப்படவேண்டிய செய்தியாகும்.

### 3.3.2.4 எழுதுபொருட்களை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

குறும்பர்கள், தம் கற்பனைத்திறத்தால் எளிய பொருட்களையும் அரிய பொருட்கள் என்று எண்ணுமளவிற்கு விடுகதைகளைப் படைப்பதில் வல்லவர்களாகக் திகழ்கின்றனர். இவர்களின் விடுகதையில் எழுதுபொருட்களாகக் காகிதமும், மையும் மட்டுமே இடம் பெறுகின்றன. பிற எழுதுபொருட்களையும் இவர்கள் பயன்படுத்தினாலும், அவை இதுவரையிலும் விடுகதைகளில் இடம் பிடிக்கவில்லை.

குறும்பர்கள் காகிதத்தை வெள்ளை நிலம் என்ற குறிப்பாலும், மையினைக் கருமைநிறங்கொண்ட விதை என்ற குறிப்பாலும் சுட்டி, இரு விடுகதைகளையும் ஒரே விடுகதை என்று எண்ணுமளவிற்கு அமைத்துள்ளனர். இதனை,

காடு பெள்ளெ
பிதெ கறுபு [58]

(நிலம் வெள்ளை
விதை கறுப்பு) – விடுகதை
காயிதமு மசி (காகிதமும், எழுதும் மையும்) – விடை

என்ற விடுகதை தெளிவுபட விளக்கிச் செல்கிறது.

### 3.3.2.5 ஊர்தியினை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

அன்றாடத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற ஊர்திகள் கட்டாயத் தேவையாக அமைகின்றன. குறும்பர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நிறைவேற்றப் பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும் அதிக அளவில் பயணம் மேற்கொள்கின்றனர். சில நேரங்களில் இவர்கள் உதகையிலிருந்து குன்னூருக்கோ, மேட்டுப்பாளையத்திற்கோ செல்லும்போது புகைவண்டியில் பயணம் மேற்கொள்கின்றனர். கற்பனை வானில் சிறகடித்துச் செல்லும் இவர்களின் மனதில் புகைவண்டி மட்டுமே இடத்தைப் பிடித்துள்ளது. புகைவண்டியின் செயல்பாடுகள் இவர்களின் மனதைக் கவர்ந்த நிலையில்,

தாண்டி தாண்டி பந்த மர
தள்ளாடி பந்த மர
இறுபு உக்க மர[59]

(ஊர்ந்தும் துள்ளியும் வந்த மரம்
தள்ளாடி வந்த மரம்
எறும்புகள் உள்ளே நுழைந்த மரம்) – விடுகதை
ரயிலு (புகைவண்டி) – விடை

என்னும் விடுகதையாக வெளிப்படுகிறது.

### 3.3.3 பிற என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள்

இயற்கையாகவே அமைந்தவை மற்றும் சமூகப்பண்பாடு தொடர்பானவை ஆகிய இவற்றைத் தவிர்த்த ஏனையவற்றை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள் அனைத்தும் இப்பகுப்பின்கீழ் இடம்பெறுகின்றன.

துப்புதல், நிழல், மலப்பொருள் என்னும் விடைகள் கிடைக்கப்பெறும் விடுகதைகளான,

தாரி – தாரி சொட்டு – சொட்டு[60]
(வழியெங்கும் சொட்டு சொட்டாகத் துளிகள்) – விடுகதை
துப்போது (துப்புதல்) – விடை

என்பதும்,

என்ன ஒந்தாயி இத்தலெவு சினேகித அல்ல;
கொரசியலெ சத்தனவே கேயாத செகிதவு அல்ல[61]
(என்னோடு ஒன்றாக இருந்தாலும் சினேகிதன் அல்ல;
கூப்பிடும்போது எந்த ஒலியையும் கேட்கமுடியாத
செவிடனும் அல்ல) – விடுகதை
நாலு (நிழல்) – விடை

என்பதும்,

ஒந்து மனுச காசுன எத்தி ஓயி
பெத்தொட்டு குயின எத்திஒனு பந்த[62]
(ஒரு மனிதன் உருளைக்கிழங்குடன் செல்கிறார்
(எங்கேயோ) போட்டுவிட்டு உடன் திரும்பி வருகிறார்) – விடுகதை
ஏலு (மலப்பொருள்) – விடை

என்பதும் இப்பாகுபாட்டில் இடம்பெற்று, சாதாரண நிகழ்வுகளையும் அசாதாரணநிலைக்கு மிகைப்படுத்துவதோடு, குறும்பர்களின் வளமையான கற்பனைத்திறத்திற்கு எடுத்துக்காட்டுகளாய் அமைவது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

## 3.4 முடிபுகள்

விடுகதைகளின் பாகுபாடுகள் குறித்துத் திட்டவட்டமான பொதுவான அடிப்படைநிலைகள் வரையறுக்கப்படவில்லை. அறிஞர்கள் தங்களின் சிந்தைகளுக்கு ஏற்றவாறு பாகுபாடுகள் செய்துள்ளனர்.

குறும்பர்கள் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களில் வாழ்வதோடு தம்முடைய சமூகப்பண்பாட்டினை அழிந்துவிடாமல் பாதுகாத்தும் வருகின்றனர். இவர்களின் நாட்டுப்புறவழக்காற்றில் இருக்கும் விடுகதைகளை, சேகரிக்கப்பட்ட நிலையில் கிடைத்தவற்றின் அடிப்படையில் அவை உருவாக்கம் பெறுகின்ற நிலைகளுக்கு ஏற்றவாறு இயற்கையாகவே அமைந்தனவற்றை அடிப்படையாகக் கொண்டவை, சமூகப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை, "இவை அல்லாத பிற" என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்னும் மூன்று பாகுபாடுகளின்கீழ் அடங்குகின்றன.

இயற்கையாகவே அமைந்தவனவற்றை அடிப்படையாகக் கொண்ட குறும்பர் விடுகதைகளில் வானம், நட்சத்திரங்கள், காடு ஆகியவை இடம்பெறுகின்றன. மேலும், நீர் குறித்த விடுகதையும், நீர்நிலைகளில் காட்டாறு மற்றும் கடல் குறித்த விடுகதைகளும் காணக்கிடக்கின்றன. அன்றியும், ஊர்ந்து செல்லும் உயிரினங்களில் அணில், பேன், நண்டு, பாம்பு ஆகியவை குறித்த விடுகதைகளே அங்கம் பெறுகின்றன. மீன் மட்டுமே நீந்துவனவற்றில் இடம்பெற்று, பறந்து செல்வனவற்றில் ஆந்தை, காகம், சேவல், தேனீ ஆகியன இடம்பெறுகின்றன. நடந்து செல்வனவற்றில் ஆடு, பசு, மனிதன் என்பன மட்டுமே விடுசதைகளில் காணப்பட உடல் உறுப்புகளைப் பொறுத்தவரை, இரு உறுப்புகள் உயிரினங்களின் பொது உறுப்புகளாகவும், ஒரு உறுப்பு சேவல் கோழியின் உறுப்பாகவும். ஏனைய 10 உறுப்புகள் மனித உறுப்புகளாகவும் இடம் பெறுகின்றன. தாவரங்களைப் பொறுத்தவரை, விடுகதைகளில் காணக்கிடப்பனவாக மரம் என்ற நிலையில் ஆமணக்கு, ஈச்சமரம், கல்லக்கடலை, வாழை என்பனவும், செடி என்ற நிலையில் கீரை, தொட்டால்வாடி, புல் என்பனவும், கொடி என்ற நிலையில் தாமரையும் உள்ளன.

சமூகப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட குறும்பர் விடுகதைகள் ஐந்து பாகுபாடுகளின்கீழ் அடங்குகின்றன. வாழுமிடமான வீட்டின் கட்டுமான அமைப்போடு தொடர்புடைய கதவு, செங்கற்கள், மோட்டுப்பகுதி ஆகியன விடுகதைகளில் அங்கம் பெற, அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய 17 வீட்டுப்பொருட்களும் இடம் பெறுகின்றன. மேலும், உணவுப்பொருட்கள் என்ற நிலையில் நான்கு திரவ உணவுப்பொருட்களும், நேரடியாகச் சாப்பிடப்படும் ஐந்து திட உணவுப்பொருட்களும், நேரடியாக உண்ண முடியாமல் ஆனால் ஏதேனும் ஒரு நிலையில் பிற பொருட்களோடு கலந்த நிலையில் உண்ணப்படும் ஏழு திட உணவுப்பொருட்களும் விடுகதைகளில் பிரதிபலிக்கின்றன. தவிரவும், எழுதுபொருட்களைப் பொறுத்தவரை, காகிதமும் மையும் விடுகதைகளில் அமைய, ஊர்திகளைப் பொறுத்தவரை புகைவண்டி மட்டுமே இடத்தைப் பிடித்துள்ளது.

இயற்கை மற்றும் சமூகப்பண்பாடு ஆகியவைவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்த விடுகதைகளைத் தவிர்த்த ஏனையவை எல்லாம் 'பிற ' என்ற நிலையின் கீழ் இடம்பெறச் செய்தநிலையில் துப்புதல், நிழல், மலப்பொருள் என்பனவற்றைக் குறிக்கும் விடுகதைகள் மட்டுமே அடங்குகின்றன. சிந்தனைக்கு விருந்தளிக்கும் இத்தகைய விடுகதைகளைப் பேணிக் காப்பதால் நாளையச் சமுதாயத்திற்கு முந்தைய காலத்தவரின் கற்பனைத்திறனை வியந்து பாராட்டக் கிடைக்கப்பெறும் ஏதுக்களில் ஒன்றாக அமைவதில் வியப்பேதுமில்லை.

# அடிக்குறிப்புகள்

1. காண்க பி.எ. 4:1.
2. Don Yonder, "Folk Life Studies in American Scholarship" *American Folklife*, p. 54.
3. காண்க பி.எ. 4:2.
4. காண்க பி.எ. 3:19.
5. காண்க பி.எ. 3:12.
6. காண்க பி.எ. 3:83.
7. காண்க பி.எ. 3:20.
8. காண்க பி.எ. 3:19.
9. மே.ப.
10. காண்க பி.எ. 3:10.
11. காண்க பி.எ. 3:21, 3:53, 3:62.
12. காண்க பி.எ. 3:24, 3:28.
13. காண்க பி.எ. 3:96.
14. காண்க பி.எ. 3:36.
15. காண்க பி.எ. 3:60.
16. காண்க பி.எ. 3:43.
17. காண்க பி.எ. 3:48.
18. காண்க பி.எ. 3:23.
19. காண்க பி.எ. 3:94.
20. காண்க பி.எ. 3:78.
21. காண்க பி.எ. 3:9.
22. காண்க பி.எ. 4:3.
23. காண்க பி.எ. 3:31.
24. காண்க பி.எ. 4:2.
25. காண்க பி.எ. 3:92.
26. காண்க பி.எ. 3:28.
27. காண்க பி.எ. 3:2.
28. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும், பண்பாடும், ப.23.
29. E.B. Tylor, *Primitive Culture*, Vol. II, p.1.
30. சீ. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 157.

31. காண்க பி.எ. 3:45.
32. காண்க பி.எ. 3:54.
33. காண்க பி.எ. 3:73.
34. காண்க பி.எ. 4:4.
35. காண்க பி.எ. 3:70.
36. காண்க பி.எ. 3:71.
37. காண்க பி.எ. 3:84.
38. காண்க பி.எ. 4:5.
39. மே.ப.
40. காண்க பி.எ. 3:47, 3:66.
41. காண்க பி.எ. 3:94.
42. காண்க பி.எ. 3:9.
43. காண்க பி.எ. 3:91.
44. காண்க பி.எ. 3:4.
45. காண்க பி.எ. 3:90.
46. காண்க பி.எ. 3:81.
47. காண்க பி.எ. 3:55.
48. காண்க பி.எ. 3:6, 3:49.
49. காண்க பி.எ. 3:52.
50. காண்க பி.எ. 3:5.
51. காண்க பி.எ. 3:17.
52. காண்க பி.எ. 3:27.
53. காண்க பி.எ. 3:1.
54. காண்க பி.எ. 3:56.
55. காண்க பி.எ. 3:47.
56. காண்க பி.எ. 3:55.
57. காண்க பி.எ. 3:52.
58. காண்க பி.எ. 3:51.
59. காண்க பி.எ. 3:68.
60. காண்க பி.எ. 3:69.
61. காண்க பி.எ. 3:22.
62. காண்க பி.எ. 3:33.

# 4. குறும்பர் விடுகதைகளின் அமைப்பாய்வு

## 4.1 முன்னுரை

கோட்பாடுகளின் அடிப்படையில் நாட்டுப்புறவியலில் தோன்றியுள்ள பல்வேறு பள்ளிகளுள் அமைப்பியல் பள்ளியும் (Structural School) ஒன்று. அமைப்பியல் கோட்பாட்டின் தந்தையெனக் கருதப்படுகிற விளாடிமிர் பிராப் அவர்களின் "நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பியல் " என்ற நூலின் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தில் 1958-இல் வெளிவந்தவுடன் பெருந்திருப்புமுனை நாட்டுப்புறவியலில் ஏற்பட்டது. சசூரின் மொழியியல் கோட்பாட்டில் அமைந்த அமைப்பியல் கருத்துகளை லெவிஸ்டிராஸ் மானிடவியல் மற்றும் நாட்டுப்புறவியல் துறைகளுக்கான உயர்தர அமைப்பியல் கோட்பாடுகளாக மாற்றி அமைப்பியல் ஆய்வினை மேற்கொண்டார்.[1] இவர்களைப் போன்று ஆலன் தண்டிசும் வட அமெரிக்க இந்திய வாய்மொழிக் கதைகளின் அமைப்பாய்வினை மேற்கொண்டவரில் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார்.

இத்தகைய அமைப்பியல் ஆய்வுகள் தமிழிலுள்ள நாட்டுப்புற இலக்கியங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. தாலாட்டிலும், ஒப்பாரியிலும் அமைப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.[2] மேலும், தமிழ்ப் பழமொழிகளிலும்,[3] வேடிக்கைக் கதைகளிலும்[4] இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், திராவிடப் பழங்குடியினரின் நாட்டுப்புற இலக்கியங்களின் எந்தவொரு

வகையிலும் இத்தகைய ஆய்வு இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வியல் குறும்பர் பழங்குடியினரின் விடுகதைகளின் அமைப்பினை ஆய்வு செய்கிறது.

## 4.2 குறும்பர் விடுகதைகளில் இடம்பெறும் அமைப்பாய்வுகள்

நாட்டுப்புறவியல் இலக்கியங்களின் எல்லா வகைகளுக்கும் அமைப்புகள் உண்டு. இவற்றில் விடுகதைகளும் விதிவிலக்கன்று. விடுகதைகளில் இடம்பெற்ற அமைப்புகளை நிரந்தரமான வரையறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டாலும், அறிஞர்கள் தம் பட்டறிவிற்கு ஏற்றவாறு அவற்றை ஆய்வு செய்ய முற்பட்டுள்ளனர். இவர்களின் ஆய்வு அணுக்கங்களைக் கருத்தில் கொண்டு,

அ. அலகுகளின் அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு
ஆ. குறிப்பு - விடை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு
இ. இலக்கணப் பார்வை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு

என்னும் நிலைகளில் பாகுபடுத்திக் குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளை ஆய்வு செய்ய இயலுகிறது.

### 4.2.1 அலகுகளின் அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு[5]

விடுகதைகளில் இடம்பெற்றுள்ள அலகுகளின் அடிப்படையில் விடுகதைகளின் அமைப்பினைப் பகுத்தாய்வதும் ஒரு முறையாகக் கருதப்படுகிறது. இதனடிப்படையில் விடுகதை,

1. தலைப்பு (சுட்டப்படும் பொருள் - Topic)
2. விவரணம் (சுட்டப்படும் பொருளின் விவரிப்பு - Comment)

என்னும் இரு அலகுகளாகப் பகுக்கப்படுகின்றன. பின்வரும்,

ஒந்தே கோயிகு ராடு கூடெ கவசுவாடு[6]
(ஒரு கோழிக்கு இரண்டு கூடுகள் கவிழ்க்கப்பட்டுள்ளன)
- விடுகதை

கண்ணு (கண்) - விடை

என்னும் குறும்பர் விடுகதையில் 'ஒந்தே கோயிக்கு' என்னும் அலகு தலைப்பாகவும், 'ராடு கூடெ கவசுவாடு' என்னும் அலகு விவரணமாகவும் அமைந்து 'கண்' என்னும் பொருள் சுட்டப்படுகின்றது. இவ்வளவிலேயே அமைப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### 4.2.2. குறிப்பு - விடை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு [7]

விடுகதை அமைப்பில் மறைந்துள்ள விடைப்பொருளைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்றவாறு இடம்பெற்ற குறிப்புகளின் எண்ணிக்கையையும், விடைகளின் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு அவ்விடுகதை அமைப்புகள்,

1. எளியநிலை விடுகதை அமைப்பு
   (Simple riddle structure)
2. கூட்டுநிலை விடுகதை அமைப்பு
   (Compound riddle structure)
3. கோர்வைநிலை விடுகதை அமைப்பு
   (String riddle structure)

என்னும் நிலைகளில் அமைகின்றன.

#### 4.2.2.1 எளிய நிலை விடுகதை அமைப்பு

விடுகதை அமைப்பில் மறைந்துள்ள விடைப்பொருளை விளக்குகிற குறிப்பு ஒன்று என்ற எண்ணிக்கையிலும், விடையும் ஒன்று என்ற எண்ணிக்கையிலும், (குறிப்பும், விடையும் சம எண்ணிக்கையில்) இருந்தால் அவ்விடுகதை அமைப்பினை எளியநிலை விடுகதை அமைப்பு என்பர். பின்வரும்,

தும்பி முட்டாத ஊ[8]
(வண்டு தொடாத பூ) - விடுகதை
ஊஞ்ச சூடெ (சேவல் கொண்டை) - விடை

என்னும் குறும்பர் விடுகதையில் முழுத்தொடரே விடை கிடைப்பதற்குரிய முக்கிய குறிப்பாகவும், ஒரே ஒரு குறிப்பாகவும் அமைகிறது. விடை என்ற நிலையில் "சேவல் கொண்டை" என்ற ஒரே ஒரு விடையே கிடைக்கப்பெறுகிறது. இத்தகைய எளியநிலை விடுகதை அமைப்பு கொண்ட விடுகதைகள் இப்பழங்குடியினரிடம் ஏராளமாகக் கிடைக்கப்பெறுகின்றன.

#### 4.2.2.2 கூட்டுநிலை விடுகதை அமைப்பு

விடுகதை அமைப்பில் மறைந்துள்ள விடைப்பொருளை விளக்குகிற குறிப்புகள் ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலும், விடை ஒன்றே ஒன்று

என்ற எண்ணிக்கையிலும் இருந்தால் அவ்விடுகதை அமைப்பினைக் கூட்டுநிலை விடுகதை அமைப்பு என்பர். பின்வரும் குறும்பர் விடுகதையான,

அண்ணா எந்து பிளித,
பருவது இல்லெ;
தம்பி எந்து பிளித,
பந்த "[9]

(அண்ணா என்று அழைத்தால்,
வருவது இல்லை,
தம்பி என்று அழைத்தால்,
வருகிறான்) – விடுகதை
மத்து (உதடுகள்) – விடை

என்பதில் அண்ணா என்று அழைத்தால், வருவது இல்லை (உதடுகள் ஒன்றோடொன்று சேராத நிலை) என்ற குறிப்பும், 'தம்பி என்று அழைத்தால், வருகிறான் (உதடுகள் ஒன்றோடொன்று சேரும் நிலை)' என்ற பிறிதொரு குறிப்பும் குறிப்புகளாக அமைந்து, 'உதடுகள்' என்ற ஒரே ஒரு விடையைத் தருகின்றன. இத்தகைய கூட்டுநிலை விடுகதை அமைப்பு கொண்ட விடுகதைகள் பலவும் குறும்பரிடம் காணப்படுகின்றன.

### 4.2.2.3 கோர்வைநிலை விடுகதை அமைப்பு

எளிய விடுகதை அமைப்பினைப் போன்று கோர்வைநிலை விடுகதை அமைப்புகளிலும் குறிப்பும், விடையும் சம எண்ணிக்கையில் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு அடியிலும் குறிப்பும், விடையும் இடம் பெறுவதால் பல விடுகதைகள் கோர்வையாக ஒரு சேர அமைந்து 'ஒரே விடுகதை அமைப்பு' என்ற நிலையில் தோற்றமளிக்கின்றன. குறும்பர் விடுகதைகளிலும் கோர்வைநிலை விடுகதை அமைப்பு காணப்படுகிறது. பின்வரும்,

அட்டகு ஆறு கண்ணு
மொட்டகு மூறு கண்ணு[10]

(அட்டைக்கு ஆறு கண்கள்
முட்டைக்கு மூன்று கண்கள்) – விடுகதை

புகிரிவு தேங்காயி (புல்லாங்குழலும், தேங்காயும்) – விடை

என்ற விடுகதையில் முதலடியில் ஒரு குறிப்பும் (அட்டைக்கு ஆறு கண்கள்), ஒரு விடையும் (புல்லாங்குழல்) இடம்பெற, இரண்டாவது அடியில் பிறிதொரு குறிப்பும் (முட்டைக்கு மூன்று கண்கள்), பிறிதொரு விடையும் (தேங்காய்) இடம் பெற்றுக் கோர்வைநிலை விடுகதை அமைப்பாக விளங்குவதைக் காணலாம்.

### 4.2.3 இலக்கணப்பார்வை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு

அலகுகள் மற்றும் குறிப்பு-விடை அடிப்படையில் விடுகதைகளின் அமைப்புகளை ஆய்வு செய்யும்போது, இலக்கணத் தன்மைகள் குறித்த சிந்தனைகளின்றி ஒரு குறுகிய எல்லையினுள் அடங்கியே அவற்றை விவரிக்க முடிகிறது. ஆனால், இலக்கணக்கூறுகளின் ஊடுநவலை விடுகதைகளில் காணும் நிலையில், அவற்றின் செயல்நிலைகளை இலக்கணப் பார்வையோடு விவரிக்கும்போது, பரந்துபட்டநிலையில் விடுகதைகளின் அமைப்புப் போக்குகளை அறிந்து கொள்ள முடிகிறது.

### 4.2.3.1. நேர்நிலை - எதிர்நிலை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு

நேர்நிலை - எதிர்நிலை அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வினைப் பரந்துபட்ட அல்லது விரிவான நிலையின் அடிப்படையில் அமைந்த அமைப்பாய்வு என்றும் கூறுவர் நாட்டுப்புறவியல் அறிஞர்கள். சனதொம்பி சிங் மேற்கொண்ட ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு,

1. நேர்நிலை அல்லது எதிர்நிலையல்லா அமைப்புடையன
   (Direct or non - oppositional structure)
2. எதிர்நிலை அமைப்புடையன
   (Oppositional structure)

என்னும் நிலைகளின் அடிப்படையில்[11] விடுகதைகளின் அமைப்புகளை ஆய்வுசெய்யின் ஓரளவு பரந்துபட்ட அமைப்பாய்வினைப் பெறமுடியும் என்பதனை அடிப்படையாகக் கொண்டு குறும்பர் விடுகதைகளின் அமைப்புகள் இவண் ஆராயப்படுகின்றன.

#### 4.2.3.1.1 நேர்நிலை அமைப்புடையன

எதிர்மறைத் தன்மையினைக் குறிப்பிடும் விளக்கக்கூறுகள் / சொற்கள் (Element) இடம்பெறாத அமைப்பு கொண்ட விடுகதைகள் நேர்நிலை அல்லது எதிர்நிலையல்லா அமைப்பு விடுகதைகள் எனப்படுகின்றன. இத்தகைய அமைப்புடைய குறும்பர் விடுகதைகள் இருபெரும் பிரிவுகளாக அமைகின்றன.

### 4.2.3.1.1.1 நேரடி நேர்நிலை அமைப்புடையன (Literal non-oppositional structure)

இவ்வகை அமைப்புடைய விடுகதைகளில் விளக்கக் கூறுகள் உருவகத் தன்மையுடன் இடம்பெறா. மேலும், எதிர்மறைப்போக்கு இடம்பெறாமல் நேரடியாகவே விளக்கக்கூறுகள் இடம்பெறுகின்றன. பின்வரும் குறும்பர் விடுகதையான,

தின்னுவது பாயிலு
பேலுவது அள்ளெலு[12]
(தின்பது வாயால்
வெளியே தள்ளுவது பக்கத்தால்) – விடுகதை
பீசு கல்லு (திருவை) – விடை

என்பதில் இடம்பெற்ற விளக்கக்கூறுகளான பாய், அள், தின், பேலு ஆகியன நேரடியாகவே தரப்பட்டுள்ளன. உருவகத்தன்மையும், எதிர்மறைத்தன்மையும், இடம்பெறவில்லை.

### 4.2.3.1.1.2 உருவகத்தன்மையுடன் கூடிய நேர்நிலை அமைப்புடையன (Metaphorical non-oppositional structure)

இவ்வகை அமைப்புடைய குறும்பர் விடுகதைகளில் தலைப்பும், விவரணமும் உருவகத்தன்மையுடன் அமைந்திருக்கின்றன. ஆனால், இவற்றில் விளக்கக்கூறுகள் இடம்பெறா. கீழ்க்காணும்,

கூன் அஜ்ஜிகு
பாயி முச்சூடு
அல்லு[13]
(கூன் கிழவிக்கு
வாய் எல்லாம்
பல்லு) – விடுகதை
கொயிலு கத்தி (அறுவடை செய்யும் அரிவாள்) – விடை

என்னும் விடுகதையில் விடைப்பொருளான அரிவாளின் பிறை போன்ற வளைந்த நிலையைக் குறிப்பிடக் கூன் விழுந்த கிழவியையும், அரிவாளின் பற்களுக்கு அவளுடைய (பற்கள் இருக்கும் கிழவி) பற்களையும் உருவகங்களாக நேரடியாகத் தரப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின், தலைப்புப்

பொருளான அரிவாளும், அதனுடைய விவரணமும் உருவகங்களுடன் தரப்பட்டுள்ளன.

### 4.2.3.1.2 எதிர்நிலை அமைப்புடையன (Oppositional structure)

முரண்பாடான செய்திகளையோ, எதிர்மறைச்செய்திகளையோ குறிப்பிடுகின்ற விளக்கக்கூறுகளைக் கொண்ட விடுகதைகளை எதிர்நிலை விடுகதைகள் என்பர். குறும்பரின் எதிர்நிலை அமைப்புடைய விடுகதைகள் பின்வரும் மூன்று அமைப்புப் பகுப்புகளில் அடங்குகின்றன :

1. பொருத்தமில்லாத முரண்பாடு அமைப்புடையன
   (Anti-thetical contradictive structure)
2. தனித்துவ முரண்பாடு அமைப்புடையன
   (Privational contradictive structure)
3. யதார்த்த முரண்பாடு அமைப்புடையன
   (Casual contradictive structure)

### 4.2.3.1.2.1 பொருத்தமில்லாத முரண்பாடு அமைப்புடையன

இவ்வகை அமைப்புடைய விடுகதைகளில் விளக்கக் கூறுகள் பொதுவாகவே பொருத்தமில்லாத நிலையில் முரண்பட்ட போக்குடன் காணப்படுகின்றன.

சுட்ட கொரங்கு
அட்டலுகு அத்தியது[14]

(சுட்ட குரங்கு
மேடையில் ஏறுகிறது!) – விடுகதை
மடகெ (சமைக்கப் பயன்படும் மண்பானை) – விடை

என்னும் இக்குறும்பர் விடுகதையில் சமைக்கப்பயன்படும் மண்பானையினைக் குறிக்கச் 'சுட்ட' மற்றும் 'குரங்கு' என்னும் விளக்கக்கூறுகள் தரப்பட்டுள்ளன. செயல்நிலையில் 'சுட்ட குரங்கு' எவ்வாறு மேடையில் (அட்டலு) ஏறுகிறது? ஏறமுடியாத நிலையே உள்ளது. இது ஒரு எதிர்நிலைதானே; மேலும், இது ஒரு முரண்பாடுதானே; அன்றியும், இது பொருத்தமில்லாத ஒன்றுங்கூட. எனவே, பொருத்தமில்லாத முரண்பாடுடைய விளக்கக்கூறுகளைக் கொண்ட

அமைப்புடைய எதிர்நிலை விடுகதைகள் குறும்பர் மொழியில் இடம்பெற்றுள்ளதனைக் காணமுடிகிறது.

### 4.2.3.1.2.2 தனித்துவ முரண்பாடு அமைப்புடையன

இவ்வகை அமைப்புடைய விடுகதைகளிலும் விளக்கக் கூறுகள் முரண்பட்ட நிலையில் அமைகின்றன. ஆனால், விளக்கக்கூறுகளின் படிநிலை அமைப்பில் தனித்துவ நிலையில் முரண்பட்ட போக்கினைக் காணமுடிகிறது. குறும்பர் விடுகதைகளிலும் இந்நிலை இடம்பெறுகிறது.

குன்னலு சீலெ உட்டது
தொட்டி எண்ணு
பர – பர சீலெ உடர[15]

(சிறு பருவத்தில் துணி அணிகிறாள்
வளரும்போது

மெல்ல – மெல்ல துணி அணிவதை விடுகிறாள்)– விடுகதை
பெதுரு (மூங்கில்) – விடை

என்னும் இக்குறும்பர் விடுகதையில் மூங்கில் என்பது பெண் என்ற நிலையில் உருவகிக்கப்படுகிறது. இந்நிலையில் தனித்துவநிலையில் அதனுடைய (அவளுடைய) வளர்ச்சிநிலை படிப்படியாக விவரிக்கப்படுகிறது. மூங்கிலின் இளம்பருவத்தில் அதன் குருத்துப்பகுதி மெல்லிய தோட்டினால் மூடப்பட்டிருக்கும். இத்தோட்டுப்பகுதி பெண் குழந்தையின் துணியுடன் உருவகிக்கப்படுகிறது. ஆனால், இக்குறும்பர் இனமக்களின் சிறு பெண் குழந்தைகள் இளமையில் பெரும்பாலும் துணி அணிவதில்லை. மூங்கிலின் இளம்பருவத்திற்கும், பெண்குழந்தையின் இளம்பருவத்திற்கும் ஒற்றுமை இருந்தபோதிலும், அணியும் ஆடையைப் பொறுத்தவரை (தோடு/துணி) செயல்பாடு மாறுபட்டு அமைவதால் முரண்பட்டநிலை காணப்படுகிறது.

மூங்கில் வளர வளரக் குருத்தினை மூடியிருக்கும் தோட்டுப்பகுதி மெல்ல மெல்ல விரிந்து இறுதியில் அடர்ந்து கீழே விழுந்து விடுகிறது. ஆனால், இவ்வளர்ச்சிநிலை பெண் வளருவதற்கு உருவகிக்கப்பட்டுக் கட்டாயமாகத் துணி அணிவதற்கு மாறுபட்டு முரண்பாட்டுநிலையில் மெல்ல மெல்லத் துணி அணிவதை விடுகிறாள் எனச் சுட்டப்படுகிறது. இத்தகைய விடுகதைகளில்

இடம்பெறும் பொருளின் தனித்துவக் குணத்தினை விவரிக்கும்போது ஒவ்வொரு படிநிலை அமைப்பிலும் முரண்பட்ட நிலையினைக் காண முடிகிறது.

### 4.2.3.1.2.3 யதார்த்த முரண்பாடு அமைப்புடையன

இவ்வகை அமைப்புடைய விடுகதைகளில் விளக்கக் கூறுகள் முரண்பாடு கொண்ட நிலையில் அமையினும், அவை உண்மைத் தன்மையினைச் சுட்டுவதோடு யதார்த்தப்போக்கினைக் கொண்டு விளங்குகின்றன. இந்நிலைக்குக் குறும்பர் விடுகதைகளும் விதிவிலக்கன்று. பின்வரும்,

எலுவு இல்லாத மனுச
எலெ இல்லாத மரலு
அத்தியது [16]

(எலும்பு இல்லாத மனிதன்
இலை இல்லாத மரத்தில்
ஏறுகிறான்) – விடுகதை

எனுவு மண்டெயியே (பேனும், முடியும்) – விடை

என்ற குறும்பர் விடுகதையில், மனிதனுக்கு எலும்பு உண்டு என்றும், பேனுக்கு எலும்பு இல்லை என்றும் மறைமுகமாகக் குறிப்பிடப்படுவதனை உய்த்துணர முடிகிறது. மனிதனுக்கு உருவகிக்கப்பட்டு யாதார்த்த நிலையில் எலும்பு இல்லாத மனிதன் என முரண்பாடான நிலையில் அமைந்துள்ளது. இதன்னைப் போன்று மரத்திற்கு இலை உண்டு என்றும், முடிக்கு இலை கிடையாது என்றும் மறைமுகமாக உணரவைத்த நிலையில், மரத்திற்கு உருவகிக்கப்பட்டு யதார்த்தநிலையில் இலை இல்லாத மரம் என முரண்பாடானநிலையில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

## 4.2.4 நேர்நிலை மற்றும் எதிர்நிலை விடுகதைகளின் வருகை நிலைகள்

நேர்நிலை மற்றும் எதிர்நிலை விடுகதைகளின் அமைப்பு நிலைகள் விளக்கமாகத் தரப்பட்டிருப்பினும் அவற்றின் வருகை நிலைகளைக் குறித்த கருத்துகளைத் தருதலும் கட்டாயமான ஒன்றாகும்.

குறும்பரின் நேர்நிலை அமைப்புடைய விடுகதைகளில் இடம்பெறுகின்ற விளக்கக்கூறுகள் (எதிர்மறைப்பொருளைத் தராமல்) எளிய இலக்கியத்தன்மை கொண்டோ அல்லது உருவகத் தன்மை கொண்டோ விளங்குகின்றன. மேலும், இவ்விளக்கக்கூறுகள் தனித்து வருகின்ற நிலையில் உள்ளன.

### 4.2.4.1 எளிய இலக்கியத்தன்மை

ஓகு எந்தலெ ஓதது
பா எந்தலெ பந்தது[17]

(போ என்றால் போகிறது
வா என்றால் வருகிறது) – விடுகதை
அடிலு (கதவு) – விடை

### 4.2.4.2. உருவகத் தன்மை

ஒந்து ஆனெகு
ராடு கூறு [18]

(ஒரு யானைக்கு
இரண்டு பங்கு (சதை)) – விடுகதை
நெண்டு (நண்டு) – விடை

குறும்பரின் சில எதிர்நிலை அமைப்புடைய விடுகதைகளில் எதிர்நிலை விளக்கக்கூறு மட்டுமே இடம்பெற்று வருகின்ற நிலையினையும் காண முடிகிறது. பின்வரும்,

முட்டாத முருங்கெ ஏது? [19]
(கடிக்காத முருங்கை எது?) – விடுகதை
பாம்பு – விடை

என்ற விடுகதையில் 'முட்டாத' என்பது எதிர்நிலையைக் குறிக்க வந்த விளக்கக் கூறாகும்.

இவர்களின் சில விடுகதைகளில் நேர்நிலை அமைப்புத்தன்மையும், எதிர்நிலை அமைப்புத்தன்மையும் ஒருசேர இடம்பெற்று வருவதனையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக,

வெள்ளெ கும்பகாயி
கொட்டு இல்லெ [20]

(வெள்ளை சுரைக்காய்
தண்டு இல்லை) – விடுகதை

கோயி மொட்டெ (கோழிமுட்டை) – விடை

என்னும் விடுகதையில் 'வெள்ளெ கும்பகாயி ' என்பது நேர்நிலை அமைப்புடனும், ' கொட்டு இல்லெ ' என்பது எதிர்நிலை அமைப்புடனும் அமைந்துள்ளன.

## 4.3 முடிபுகள்

திராவிடப்பழங்குடியினரின் நாட்டுப்புற இலக்கியங்களில் அமைப்பாய்வுகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்படாதநிலையில், தென்திராவிடப்பழங்குடி இனத்தவரில் ஒரு இனத்தவரான குறும்பரின் விடுகதைகளில் காணப்படும் அமைப்புகளைக் குறித்த இவ்வாய்வு, முன்னோடி ஆய்வாக விளங்குவது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

குறும்பர் விடுகதை அமைப்புகளில் அலகுகளின் அடிப்படையில் அமைந்த ஆய்வு, குறிப்பு -விடை அடிப்படையில் அமைந்த ஆய்வு, இலக்கணப்பார்வை அடிப்படையில் அமைந்த ஆய்வு ஆகிய ஆய்வு முறைகளை மேற்கொண்டநிலையில் பின்வரும் செய்திகள் கிடைக்கப்பெற்றன:

1. குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளைத் தலைப்பு, விவரணம் ஆகிய அலகுகளின் அடிப்படையில் பகுத்தாயும்போது விரிவானநிலையில் அமைப்பாய்வு செய்ய இயலவில்லை.

2. குறிப்பு -விடை அடிப்படையில் குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளை ஆராய்ந்த நிலையில் தெளிவான நிலையில் அமைப்புகளின் போக்குகளை அறிய வாய்ப்புகள் கிடைத்தாலும், இலக்கணத் தன்மைகள் குறித்த செய்திகளை அறிந்து கொள்ள இயலாதநிலை காணப்படுகிறது.

3. இலக்கணக் கூறுகளின் ஊடுருவலை விடுகதைகளின் அமைப்புகளில் காணும் நிலையில், அவற்றின்

செயல்நிலைகளை இலக்கணப் பார்வையோடு விவரிக்கும் போது, பரந்துபட்ட நிலையில் விடுகதைகளின் அமைப்புப் போக்குகளை அறிந்து கொள்ள முடிகிறது.

3.1 நேர்நிலை அல்லது எதிர்நிலையல்லா அமைப்புடையன என்ற நிலையிலும், எதிர்நிலை அமைப்புடையன என்ற நிலையிலும் குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளை ஓரளவு பரந்துபட்டமுறையில் ஆய்வு செய்ய இயலுகிறது. இந்நிலையில் நேர்நிலை அமைப்புடைய குறும்பர் விடுகதைகள் நேரடி நேர்நிலை அமைப்புடையன என்றும், உருவகத்தன்மையுடன் கூடிய நேர்நிலை அமைப்புடையன என்றும் இரண்டாகப் பகுக்கப்பட்டு அமைப்பாய்வு மேற்கொண்டதில் நேரடி நேர்நிலை அமைப்புடைய விடுகதைகள் உருவகத்தன்மை இன்றியும், எதிர்மறைப்போக்கு இல்லாமலும் உள்ளன என்பதையும், உருவகத்தன்மையுடன் கூடிய நேர்நிலை அமைப்புடைய விடுகதைகள் எதிர்மறை விளக்கக் கூறுகள் இல்லாமல் உள்ளன என்பதையும் பெறமுடிகிறது.

3.2 எதிர்நிலை அமைப்புடைய குறும்பர் விடுகதைகள் பொருத்தமில்லா முரண்பாடு அமைப்புடையன என்றும், தனித்த முரண்பாடு அமைப்புடையன என்றும், யதார்த்த முரண்பாடு அமைப்புடையன என்றும் பகுக்கப்பட்டநிலையில், ஒவ்வொரு பகுப்புகளிலும் இடம்பெற்றுள்ள முரண்பாட்டுநிலை வெளிப்பாடாகத் தெரிந்தநிலையிலும் வழக்கத்தில் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு விடுகதைகளில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

3.3 நேர்நிலை அமைப்புடைய விடுகதைகளும், எதிர்நிலை அமைப்புடைய விடுகதைகளும் தனித்தனியாக விளக்கக் கூறுகளுடன் குறும்பர் மொழியில் இடம் பெற்றிருப்பினும், இவ்விரு அமைப்புகளும் சேர்ந்து வருவதும் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

# அடிக்குறிப்புகள்

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 369.
2. பா.ரா. சுப்பிரமணியன், தமிழக நாட்டுப்பாடல்கள் : ஒப்பாரி, தாலாட்டுப்பாடல்கள் அமைப்பு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1975.
3. தே. லூர்து, தமிழ்ப் பழமொழிகள் : ஓர் ஆய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியிடப்படாத பிஎச்.டி பட்ட ஆய்வேடு, மதுரை. 1980
4. ஞா. ஸ்டீபன், வேடிக்கைக் கதைகளில் அமைப்பியல் ஆய்வு : விளவங்கோடு வட்டம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியிடப்படாத பிஎச்.டி பட்ட ஆய்வேடு, தமிழ் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1993
5. S. Santhombi Singh, "Manipuri Riddles : Towards Classification and Analysis", *Folklore,* Vol, 31, No. 357-538, March - April 1990. p.92.
6. காண்க பி.எ. 3 : 42.
7. G. Santhi, *Folklore Survey of Thanjavur District,* Tamil University, Thanjavur, 1994, p.160
8. காண்க பி.எ. 3:72.
9. காண்க பி.எ. 3:7.
10. காண்க பி.எ. 3:5.
11. S. Santhombi Singh, LOC. Cit.
12. காண்க பி.எ. 3:71.
13. காண்க பி.எ. 3:58.
14. காண்க பி.எ. 3:63.
15. காண்க பி.எ. 3:57.
16. காண்க பி.எ. 3:21.
17. காண்க பி.எ. 3:45.
18. காண்க பி.எ. 3:24.
19. காண்க பி.எ. 3:96.
20. காண்க பி.எ. 3:90.

# 5. குறும்பர் விடுகதைகளின் யாப்புநிலையும், அணிநிலையும்

## 5.1 முன்னுரை

நாட்டுபுற இலக்கியவகைகளில் ஒன்றான விடுகதைகளில் பெரும்பாலானவை கவிதைப்போக்கிலும், சிறுபான்மையானவை உரைநடையிலும் அமைவதனைக் காணமுடிகிறது. இத்தகையப் போக்குகள் குறும்பர் விடுகதைகளிலும் காணப்படுகின்றன. குறும்பர் விடுகதைகளில் காணப்படும் கவிதைக்கூறுகளை யாப்புநிலை, அணிநிலை என்னும் இருநிலைகளில் அணுகலாம்[1].

## 5.2 குறும்பர் விடுகதைகளில் யாப்புநிலை

யாப்பு என்பது செய்யுள் அல்லது கவிதை எனப் பொருள்படுகிறது. கவிதைகள் சீர்களாலும், தளைகளாலும் கட்டப்படுகின்றன. கவிதைகளுக்குரிய ஓசையையும், வடிவத்தையும் சீர்களும், தளைகளுமே கொடுக்கின்றன. கவிதைகள் மேன்மேலும் ஓசையையும், இனிமையையும் பெற்று மெருகுடன் திகழத் துணைநிற்பன தொடை வகைகளாகும். இலக்கியமொழிகளில் காணப்படும் கவிதைகளின் கூறுகள் அனைத்தும் குறும்பர் விடுகதைகளில் இடம்பெறவில்லை. சீர், தளை, அடி ஆகிய ஒழுங்குகளும் அவற்றில் இல்லை. ஆனால், தொடை வகைகளான மோனையும், எதுகையும், இயையும், முரணும்,

அந்தாதியும் அமைந்து கவிதைத் தன்மையினைக் கொடுத்து விடுகின்றன. விடுகதைகளைக் கூர்ந்தாயும்போது இரு கண்களாக[2] விளங்கும் மோனையும், எதுகையும் மக்களின் பேச்சோடு கலந்த இயற்கைப்பண்புகள்[3] என்பதனையும், நாட்டுப்புற இலக்கியத்தின் பெரும்பகுதி பாட்டாக அமைய இவையே காரணமாக அமைகின்றன என்பதனையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

## 5.2.1 மோனைத்தொடை

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்[4]. குறும்பர் விடுகதைகளின் மோனைகளை அவை பெறுமிடம் மற்றும் தன்மைகளின் அடிப்படையில் பகுக்கலாம்.

### 5.2.1.1 பெறும் இடம் அடிப்படையிலான பாகுபாடுகள்

குறும்பர் விடுகதைகளில் மோனை இடம்பெறும் இடத்தை அடிப்படையாகக்கொண்டு,

1. அடிமோனை
2. சீர்மோனை

என இருபிரிவுகளாகப் பகுக்க முடிகிறது.

#### 5.2.1.1.1 அடிமோனை

அடிகளிடையே மோனை இடம்பெற்று வருவது அடிமோனையாகும். எல்லையின் அடிப்படையில் பகுதிமோனை, முழுமோனை என அடிமோனை இரண்டாக அமைகிறது.

##### 5.2.1.1.1.1 பகுதிமோனை

பகுதிமோனையில் சில அடிகளில் மட்டுமே மோனை இடம்பெறுகிறது. பின்வரும் குறும்பர் விடுகதையான,

எலுவு இல்லாத மனுச
எலெ இல்லாத மரலு
அத்தியது[5]

என்பதில் முதலிரண்டு அடிகளில் எகரம் மோனைநிலையில் இடம்பெற, இறுதியடி அது பெறாமல் நிற்கிறது.

### 5.2.1.1.1.2 முழுமோனை

முழுமோனையில் அடிகள்தோறும் முதலெழுத்து ஒன்றியோ அல்லது மோனை பெற்றோ வரும். பின்வரும்,

ஒந்து மனுசெகு
ஒந்தே கண்ணு [6]

என்னும் குறும்பர் விடுகதையில் அடிகள் தோறும் ஒகரம் வந்து முழுமோனையை அமைத்துள்ளது.

### 5.2.1.1.2 சீர்மோனை

சீர் அளவில் மோனை அமைவது சீர்மோனையாகும்.

பலெ பெந்தது
பகிரி பேயர [7]

என்னும் இக்குறும்பர் விடுகதையில் அடிகள்தோறும் பகரம் இடம்பெற்றுச் சீர்மோனை அமைந்துள்ளது.

### 5.2.1.2 தன்மை அடிப்படையிலான பாகுபாடுகள்

மோனைகளின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு குறும்பர் விடுகதைகளின் மோனைகளை ஆராயின், அவற்றை மூன்று பகுப்புகளின் கீழ் அடக்கலாம். அவை,

1. நெடில் மோனை
2. வர்க்க மோனை
3. இனமோனை

என்பனவாகும்.

### 5.2.1.2.1 நெடில்மோனை

நெடில்மோனை நிலையில் அமைந்த விடுகதைகள் குறும்பர்களிடையே அதிக அளவில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. நெடில்மோனை நிலையில் அமைந்த விடுகதைக்குச் சான்றாகப் பின்வரும்,

ஈர சீலெகிரிதி
இப்பத்தெட்டு சுருகு பெத்தொத்த [8]

என்னும் விடுகதை அமைகிறது. இவ்விடுகதையில் இகர, ஈகாரங்கள் மோனையாக அமைந்து நெடில்மோனை இடம்பெற்றுள்ளது.

### 5.2.1.2.2 வர்க்கமோனை

வர்க்கமோனை நிலையில் அமைந்த விடுகதைகளும் குறும்பரிடையே அதிக அளவில் காணப்படவில்லை. இந்நிலையில் அமைந்த குறும்பர் விடுகதைக்குச் சான்றாக.

தாண்டி தாண்டி பந்த மர
தள்ளாடி பந்த மர
இறுபு உக்க மர
ஆ மர ஏன ம்ர?[9]

என்பதனைக் காட்டலாம். இவ்விடுகதையில் முதலிரண்டு அடிகளில் த, தா என்ற ஒரே வர்க்க எழுத்துகள் வந்தமையால் வர்க்கமோனை அமைந்துள்ளது என்பதனைக் குறிப்பிட முடிகிறது.

### 5.2.1.2.3 இனமோனை

இனமோனையைப் பொறுத்தவரையிலுங்கூட இனமோனையில் அமைந்த குறும்பர் விடுகதைகளும் மிகவும் அருகியே காணப்படுகின்றன.

அன்னத் கோலு
எண்ணோங்கு முடிய[10]

என்னும் குறும்பரின் விடுகதையில் அகர, எகரங்கள் இடம்பெற்று இம்மோனையை அமைத்துள்ளன.

## 5.2.2 எதுகைத்தொடை

மோனைக்கு அடுத்தநிலையில் வைத்து எண்ணப்படுவது எதுகையாகும். முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்[11]. குறும்பர் விடுகதைகளும் எதுகை பெற்று வருகின்றன. மோனைகளைப் போன்று குறும்பர் விடுகதைகளின் எதுகைகளையும் இடம் மற்றும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்த முடிகிறது.

### 5.2.2.1 இட அடிப்படையிலான பாகுபாடுகள்

எதுகைகள் அமையும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு குறும்பர் விடுகதைகளை,

1. அடி எதுகை
2. சீர் எதுகை

என இரண்டாகப் பகுக்க முடிகிறது.[12]

#### 5.2.2.1.1 அடி எதுகை

அடிகளிடையே எதுகை பெற்று அமைவது அடி எதுகை ஆகும். அடி எதுகை இடம்பெறும் அளவின் அடிப்படையில் குறும்பர் விடுகதைகளின் அடி எதுகைகளை,

1. பகுதி எதுகை
2. முழு எதுகை

என இரண்டாகப் பாகுபடுத்தலாம்.

##### 5.2.2.1.1.1 பகுதி எதுகை

சில குறும்பர் விடுகதைகளின் சில அடிகளில் மட்டும் எதுகை இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது. இவ்வகை எதுகையினைப் பகுதி எதுகை என்பர். பின்வரும்,

ராடு ஆளு
நீ முந்து நானு முந்து
நீ முந்து நானு முந்து
எந்து போவாரு. ஆருமு
முந்துவது இல்லெ[13]

என்ற குறும்பர் விடுகதையில் முதலடி தவிர்த்த இரண்டாம் மற்றும் மூன்றாம் அடிகளில் ஒரு வகையான எதுகை நிலையும், நான்காம் மற்றும் ஐந்தாம் அடிகளில் பிறிதொரு வகையான எதுகைநிலையும் இடம்பெற்றுப் பகுதி எதுகை என்ற பாகுபாட்டிற்குச் சான்றாக அமைவதைக் காணமுடிகிறது.

### 5.2.2.1.1.2 முழு எதுகை

அடிதோறும் எதுகை பெற்று வருவது முழு எதுகையாகும்.

சுட்ட கொரங்கு
அட்டலுகு அத்தியது[14]

எனச் சான்றாக அமையும் இக்குறும்பர் விடுகதை. இரண்டு அடிகளிலும் எதுகையினைப் பெற்று முழுமை அடைந்துள்ளது.

### 5.2.2.1.2 சீர் எதுகை

சீர் அளவில் எதுகை அமைவது சீர் எதுகையாகும்.

பெட்டியலெ பெட்டியலெ
பெட்டுவே ஏற[15]

என்னும் விடுகதையில் இரு அடிகளிலும் சீர் எதுகை இடம்பெற்றுள்ளது.

### 5.2.2.1.2.1 தன்மை அடிப்படையிலான பாகுபாடுகள்

எதுகையின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு குறும்பர் விடுகதைகளின் எதுகைகளை இரண்டு பகுப்புகளின் கீழ் அடக்கலாம். அவை,

1. வர்க்க எதுகை
2. இன எதுகை

என்பனவாகும்.

### 5.2.2.1.2.1.1 வர்க்க எதுகை

இவ்வகை எதுகையில் வர்க்க எழுத்துகள் இடம்பெறுகின்றன. கீழ்க்காணும்,

எலுவு இல்லாத மனுச
எலெ இல்லாத மரலு
அத்தியது[16]

என்னும் குறும்பர் விடுகதையின் மூன்று அடிகளில் முதலிரண்டு அடிகளில் லகரத்தின் வர்க்க எழுத்துகள் எதுகையாக அமைந்துள்ளன.

### 5.2.2.1.2.1.2 இன எதுகை

இத்தகைய எதுகையில் இனமான எழுத்துகள் எதுகைகளாக அமைகின்றன. கீழ்வரும் குறும்பர் விடுகதையான.

அன்னத கோலு
எண்ணோங்கு முடிய [17]

என்பதில் னகர, ணகர மெல்லின ஒற்றுக்கள் எதுகைகளாக இடம்பெற்று இன எதுகை என்னும் நிலையில் அமைந்துள்ளன.

### 5.2.3 இயைபு

ஓர் அடியின் இறுதி எழுத்தோ அல்லது சொல்லோ அடிதோறும் ஒன்றி வருவது இயைபு ஆகும்[18]. எதுகைக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்வதும் இய்பே ஆகும்.

குறும்பர் விடுகதைகளில் காணப்படும் இயைபுகள் அவை அமையும் இடம் மற்றும் தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டு பிரிவுகளின் கீழ் அடங்குகின்றன.

### 5.2.3.1 இட அடிப்படையிலான பாகுபாடுகள்

குறும்பர் விடுகதைகளில் காணப்படும் இயைபுகளை அவை அமையும் இடத்தின் அடிப்படையில்,

1. அடி இயைபு
2. சீர் இயைபு

என இரண்டாகவும், அவற்றின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு.

1. எழுத்து இயைபு
2. சொல் இயைபு

என இரண்டாகவும் பிரிக்க முடிகிறது.

### 5.2.3.1.1 அடி இயைபு

அடிகளிடையே எழுத்தாலும், சொல்லாலும் இயைபு அமைவது அடி இயைபு ஆகும்.

### 5.2.3.1.1.1 எழுத்து இயைபு

மன மன எந்து தொட்டியது
நெத்தியலு பூதின ஊசியது
கயலு பானுன தோறிசியது
கத்தலு மணி கெட்டியது [19]

என்னும் குறும்பர் விடுகதையில் அடிதோறும் தகர உயிர்மெய் வந்து எழுத்து இயைபு ஆயிற்று.

### 5.2.3.1.1.2 சொல் இயைபு

பின்வரும் குறும்பர் விடுகதையான,

என்ன ஒந்தாயி இத்தலெவு சினேகித அல்ல
கொரசியலெ சத்தனவே கேயாத செகிதவு அல்ல [20]

என்பதில் அல்ல என்ற சொல் இரு அடிகளிலும் இடம்பெற்றுச் சொல்லால் இயைபினை ஏற்படுத்தியுள்ளது.

### 5.2.3.1.2 சீர் இயைபு

சீர் நிலையில் அமையும் எழுத்து, சொல் இயைபுகள் சீர் இயைபு ஆகும்.

### 5.2.3.1.2.1 எழுத்து இயைபு

குறும்பர் விடுகதைகளில் எழுத்து இயைபு குறைந்த அளவில் காணப்படுகிறது.

சத்தவரு சத்தெகு ஓதோ[21]

என்னும் விடுகதையில் சீரில் எழுத்தியைபு அமைந்துள்ளது.

### 5.2.3.1.2.2 சொல் இயைபு

குறும்பர் விடுகதைகளில் மிகவும் அருகியே சொல் இயைபு உள்ளது.

பெட்டியலெ பெட்டியலெ.........[22]

என்னும் விடுகதையில் வந்த சொல்லே வந்து சீரில் சொல் இயைபு காணப்படுகிறது.

### 5.2.3.2 விடைக்குறிப்பு இயைபு

குறும்பர் விடுகதைகளில் அமையும் இயைபுகளில் சில, விடைக்குறிப்பு உடையனவாக விளங்குகின்றன.

வானம் குறித்து வரும்,

ஓறகுத்து பாலெபன
சந்தொத்து சோலெபன[23]

என்னும் விடுகதையில் அமைந்துள்ள வனம் என்னும் பொருள் தரும் 'பன' என்னும் வடிவ இயைபு இவ்வகையினதாகும்.

### 5.2.4 முரண்

மாறுபட்ட தன்மை கொண்ட சொல்லும், பொருளும் இணைந்து வருவது முரண் ஆகும்.[24] இது பொருண்மை நிலையில் அமைவது. அணியியலில் கூறப்படும் விரோத அணியும் இதுவும் ஒன்றாகும். எனவே, இது அணிப்பகுதியின் கீழ் விளக்கப்படுகிறது.

### 5.2.5 அந்தாதி

அடிதோறும் ஓரடியின் இறுதிக்கண் நின்ற எழுத்தோ அசையோ சீரோ சொல்லோ மற்றையடிக்கு ஆதியாக வருவது அந்தாதித்தொடையாகும். குறும்பரிடையே அந்தாதித்தொடையில் அமைந்த விடுகதை காணப்பட்டாலும், எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் ஒன்றே ஒன்று மட்டும் இடம் பெறுகிறது.

பின்வரும்,

அறெகு மேலெ கெறெ
கெறகு மேலெ காயி
காயி மேலெ ஊ[25]

என்னும் விடுகதையே எடுத்துக்காட்டாக அமைகிறது.

## 5.3 குறும்பர் விடுகதைகளில் அணிநிலை

அணியிலக்கணம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானதாகும். வடமொழி இதனை அலங்காரம் எனக் குறிப்பிடுகிறது. பொருள்நிலையில் கவிதையை அழுகுபடுத்துவது அணிகளாகும். தொல்காப்பியர் உவமை அணி

ஒன்றைமட்டும் குறிப்பிட, வடமொழியைப் பின்பற்றித் தன்மை நிவிற்சி முதல் பாவிகம் ஈறாக அணிகள் 35 வகைகளாகித் தமிழில் பிற்காலத்தில் இடம் பெற்றன.

குறும்பரிடையே வழங்கும் விடுகதைகளில்,

1. தன்மை நவிற்சி
2. உருவகம்
3. விரோதம் (முரண்)

ஆகிய அணிகள் காணப்படுகின்றன.

### 5.3.1 தன்மை நவிற்சி அணி

கேட்போர் உவக்குமாறு உள்ளதை உள்ளவாறு ஒன்றின் இயல்பை நேரில் பார்ப்பதுபோல் தோன்றுமாறு அழகுபடப் புனைந்து கூறுதல் தன்மை நவிற்சி எனப்படுகிறது.[26] கீழ்வரும்,

கூன் அஜ்ஜிக்கு
பாயி முச்கூடு
அல்லூ[27]

என்னும் விடுகதையில் அரிவாளின் தோற்றம் நேரில் பார்ப்பதுபோல் உள்ளவாறு கூறப்பட்டுள்ளது. அரிவாளின் இயல்பான தன்மை அழகுடன் உரைக்கப்பட்டுள்ளது.

### 5.3.2 உருவக அணி

உவமேயம், உவமானம் இரண்டையும் ஒன்றெனக் கூறுதல் உருவகம் ஆகும்[28] விடுகதையில் விடையாக அமையும் கருப்பொருளை உருவகத்தால் மறைத்துக் கூறுகின்ற நிலை காணப்படுகிறது.

#### 5.3.2.1 ஒரு பொருள் ஒரு உருவகம்

ஒரு பொருளைக் குறிப்பிட ஒரு உருவகமே இடம் பெறுகிறது.

நட்(உ)-அட்டலு
சிட்டெ கூடு[29]

என்னும் இக்குறும்பர் விடுகதையில் தொப்புள் என்னும் ஒரு கருப்பொருள், கூடு என்னும் நிலையில் உருவகிக்கப்பட்டுள்ளது. கூடு என்னும் ஒரு உருவகமே இதில் இடம்பெற்றுள்ளது.

### 5.3.2.2 ஒரு பொருள் பல உருவகம்

ஒரு கருப்பொருளை விடையாகக் கொண்ட விடுகதையில் பல உருவகங்கள் இடம்பெற்று வருவது ஒரு பொருள் பல உருவகம் ஆகும். பின்வரும்,

ராடு பீடுக்கு
ஒந்தே கம்பு[30]

என்னும் விடுகதையில் பீடு, கம்பு என்பன முறையே மூக்கின் இரண்டு வழிகள் மற்றும் நடுத்தண்டு ஆகியவற்றை உருவகிக்க வந்துள்ளன. ஒந்து (ஒன்று), ராடு (இரண்டு) ஆகியன அவ்வுருவகங்களுக்கு அடைகளாக வந்துள்ளன.

### 5.3.2.2.1 உறவு விளக்கம்

சுத்தி தங்கதுலு கெட்டடெ
நடுகெ நாகந்த்ரனு[31]

என்னும் விடுகதை நாக்கு என்னும் கருப்பொருளைக் குறிக்க வந்ததாகும். 'நாகந்த்ரனு' என்பது நாக்கினைக் குறிக்க வந்த உருவகமாகும். நாக்கினோடு உறவுடைய வாயின் உட்பாகம் தங்கத்திலான கட்டடமாக உருவகிக்கப் பட்டுள்ளது. இது விடையாகிய நாக்கு என்பதனை உணர உதவுகிறதேயன்றி விடையினுள் அமையவில்லை.

### 5.3.2.3 பல பொருள் பல உருவகம்

பல பொருட்களை முறையான பல உருவகங்கள் இடம்பெற்றுச் சுட்டுகின்றன. கீழ்வரும்,

அட்டகு ஆறு கண்ணு
மொட்டகு மூறு கண்ணு[32]

என்னும் விடுகதையில் புல்லாங்குழல் என்னும் கருப்பொருள் ஆறு கண்களை உடைய அட்டை என்பதோடும், தேங்காய் என்னும் கருப்பொருள் மூன்று கண்களை உடைய முட்டை என்பதோடும் உருவகிக்கப்பட்டுப் பலபொருள் - பல உருவகம் என்ற நிலையில் அமைந்துள்ளன.

### 5.2.3 விரோத அணி (முரண் அணி)

மாறுபட்ட சொல்லும், பொருளும் இயைந்து வருவது விரோதமாகும்[33] யாப்பில் இது முரண் எனக் குறிப்பிடப்படுகிறது. பின்வரும் குறும்பர் விடுகதையான,

குன்னலு சீலெ உட்டது
தொட்டி எண்ணு
பர-பர சீலெ உடர[34]

என்பதில் குன்னலு, தொட்டி ஆகிய சொற்களால் சொல் விரோதமும், உட்டது, உடர ஆகிய சொற்களால் பொருள் விரோதமும் இடம்பெற்றுள்ளன.

### 5.3.4 தன்மையும், உருவகமும்

முட்டை என விடை கிடைக்கப்பெறும்,

பெள்ளெ கும்பகாயி
கொட்டு இல்லெ[35]

என்னும் குறும்பரின் விடுகதையில் முட்டை கும்ப காயாக உருவகிக்கப்பட்டுள்ளது. மேலும், இதே நிலையில் தண்டு (கொட்டு) இல்லாத தன்மையும் சுட்டப்பட்டுள்ளது.

### 5.3.5 தன்மையும், விரோதமும்

கதவு என்னும் கருப்பொருள் கிடைக்கப்பெறும்,

ஒகு எந்தலெ ஓதது
பா எந்தலெ பந்தது[36]

என்னும் இவர்களின் விடுகதையில், கதவின் திறந்து அடைக்கும் தன்மைகள் இடம்பெற்றுள்ளன. ஒகு, பா என்னும் முரண்பட்ட சொற்கள் வந்தமையால், விரோதமும் விரவி வந்துள்ளது எனக் குறிப்பிடமுடிகிறது.

### 5.3.6 உருவகமும், விரோதமும்

குறும்பரிடையே வழங்கும்,

அவ்வெ சத்த நாத
மகளு சத்த பாடெ[37]

என்னும் விடுகதையில் அவ்வெ, 'மகளு' என்ற சொற்களால் சொல் விரோதமும், 'நாத', 'பாடெ' என்பனவற்றால் பொருள் விரோதமும் இடம் பெற்றுள்ளன.

## 5.4 முடிபுகள்

இலக்கிய மொழிகளின் விடுகதைகளைப் போன்று பழங்குடி மக்களின் விடுகதைகளிலும் யாப்பும், அணியும் இடம் பெற்றுள்ளன. குறும்பப் பழங்குடியினத்தவரின் விடுகதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

குறும்பர் விடுகதைகளில் யாப்புக்கூறுகளான மோனை, எதுகை, இயைபு, முரண், அந்தாதி ஆகியன இடம் பெற்றுளன.

இவர்களின் விடுகதைகளில் மோனை அடிநிலையிலும், சீர்நிலையிலும் இடம் பெறுவதோடு மோனையின் வகைகளும் காணக்கிடக்கின்றன.

அடிநிலையில் அமைந்த மோனைகளையும், எதுகை நிலையில் அமைந்த மோனைகளையும் தொகுப்பில் ஒப்புநோக்குமிடத்து அடிநிலையான மோனைகளே அதிகமாக இடம் பெற்றுள்ளன. இருப்பினும், எல்லா வகையான எதுகைகளும் உள்ளன என்பது குறிப்பிடத் தகுந்த செய்தியாகும்.

குறும்பர் விடுகதைகளில் எதுகையைவிடவும் இயைபுகள் அதிக அளவில் இடம் பெற்றிருந்தபோதிலும், சொல்லியைபுகளை விடவும் எழுத்தியைபுகள் சீர்நிலையில் அதிகம் இடம் பெற்றுள்ளன. விடைக்குறிப்புடைய இயைபுகளும் மிதமான அளவில் இவர்களின் விடுகதைகளில் இடம்பெற்றுள்ளன.

அந்தாதித்தொடை இடம் பெற்ற ஒரேயொரு விடுகதையே தற்போதைய நிலையில் இவர்களிடம் உள்ளன.

குறும்பப் பழங்குடி இனத்தவரின் விடுகதைகளில் அளபெடையே இடம்பெறவில்லை என்பது சுட்டத் தகுந்த செய்தியாகும். முரண் விரோத அணியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

மோனை, எதுகை, இயைபு ஆகியன ஒருங்கே இடம்பெற்ற விடுகதைகள் குறும்பரிடம் காணப்படவில்லை.

அணிநலமும் குறம்பர் விடுகதைகளில் அமைந்துள்ளன. தன்மை நவிற்சி, உருவகம், விரோதம் ஆகிய அணிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

இவர்களின் விடுகதைகளில் உருவகங்கள் மிகுந்த அளவில் இடம் பெற்றுள்ளன. மேலும், ஒன்றும் பலவுமாக உருவகங்கள் விடுகதைகளில் பொருந்தியுள்ளன.

குறும்பர் விடுகதைகளில், சிலவற்றில் அதிக அளவாக இரு அணிகளே இடம் பெற்றுள்ளன.

இத்தகைய நிலைகளில் யாப்புக் கூறுகளும், அணியியற் கூறுகளும் குறும்பர் விடுகதைகளுக்கு இலக்கிய மெருகினையும், சுவையினையும் கொடுக்கின்றன என்பதனைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. விடுகதைகளில் இடம்பெற்ற இலக்கணத் தன்மைகள் மட்டும் ஆராயப்படுவதால், எடுத்துக்காட்டுகளாகத் தரப்படும் விடுகதைகளின் அடிகள் மட்டுமே தரப்படுகின்றன, எனவே தமிழில் தொடர்ப் பொருண்மைகள் அடைப்புக் குறியினுள் தரப்படவில்லை.
2. குழந்தை, யாப்பதிகாரம், ப.ix.
3. சாலை இளந்திரையன், சமுதாய நோக்கில் பழமொழிகள், ப.30.
4. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, சூ.எ. 16
5. காண்க பி.எ. 3:21.
6. காண்க பி.எ. 3:34.
7. காண்க பி.எ. 3:83.
8. காண்க பி.எ. 3:17.
9. காண்க பி.எ. 3:68.
10. காண்க பி.எ. 3:10.
11. அமிர்தசாகரர், மு.நூ.ப.
12. மே. ப.
13. காண்க பி.எ. 3:100.
14. காண்க பி.எ. 3:63.
15. காண்க பி.எ. 3:87.
16. காண்க பி.எ. 3:21.
17. காண்க பி.எ. 3:12.

18. அமிர்தசாகரர், மு.நூ.ப.

19. காண்க பி.எ. 3:93.

20. காண்க பி.எ. 3:22.

21. காண்க பி.எ. 3:60.

22. காண்க பி.எ. 3:87.

23. காண்க பி.எ. 3:44.

24. அமிர்தசாகரர், மு.நூ.ப.

25. காண்க பி.எ. 3:11.

26. தண்டி, சூ.எ. 29.

27. காண்க பி.எ. 3:58.

28. தண்டி, சூ.எ. 36.

29. காண்க பி.எ. 3:75.

30. காண்க பி.எ. 3:101.

31. காண்க பி.எ. 3:64.

32. காண்க பி.எ. 3:5.

33. தண்டி, சூ.எ. 82.

34. காண்க பி.எ. 3:57.

35. காண்க பி.எ. 3:90.

36. காண்க பி.எ. 3:45.

37. காண்க பி.எ. 3:9.

# 6. குறும்பரின் சமுதாயப் பழக்க வழக்கங்கள்

## 6.1 முன்னுரை

சமூகவியலாளர்கள் சமுதாயப் பழக்கவழக்கங்களைச் சமூக மரபுரிமை (Social heritage) எனக் குறிப்பிடுகின்றனர். காலங்காலமாக முந்தையச் சந்ததியினர் பிந்தையச் சந்ததியினருக்குத் தம் சமுதாயப் பழக்கவழக்கமரபுகளை விட்டுச் செல்வதுடன், அவற்றில் மாற்றங்களை உருவாக்குவதற்கான அடித்தளங்களையும் விட்டுச் செல்வதனையும் காண முடிகிறது. எனவே, இனம் அல்லது சமுதாயம் என்பதற்குப் பொதுவான அடிப்படை பழக்கவழக்கங்களைக் கொண்ட கூட்டம்[1] என்றும், பழக்கவழக்கங்களை வளர்க்கும் அடித்தளக்களம்[2] என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன. பண்படு என்னும் வினைவடிவின் பெயராக்க வடிவே பண்பாடு என்பதாகும்.[3]

மக்களின் நற்செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் எல்லா வழக்கங்களும், திறமைகளும் சமூகப்பண்பாட்டின் கூறுகளாகும்[4]. எனவே, சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் நம்பிக்கைகள், உற்பத்திகள், தொழில்கள், கலைகள், அறிவியல், மொழி, சட்டங்கள், சமயம், உணவு, உடை, இருப்பிடம், கைவினைப்பொருட்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளின் கூட்டினைப் பழக்கவழக்க மரபுத்தன்மை அல்லது பண்பாடு எனக் குறிப்பிடப்படுகிறது.[5] மனிதனின் தேவைகளுக்காக உருவாக்கிக் கொள்ளப்படும் பொருட்களான உணவு, ஆடை, அணிகலன், இருப்பிடம்,

மனைப்பொருட்கள், தொழிற்பொருட்கள், வாகனங்கள், தொடர்புச் சாதனங்கள் ஆகியன பொருள்சார் பண்பாடு என்ற பிரிவிலும்[6], உருவ வடிவம் பெறாத பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சகுனங்கள், சடங்குகள், வழிபாடுகள் போன்றவை பொருள்சாராப் பண்பாடு என்ற பிரிவிலும்[7] அடங்குகின்றன.

இத்தகைய நிலையிலுள்ள மக்களின் பழக்கவழக்கப் பண்பாட்டு மரபுகளை அறிந்து கொள்ள இலக்கியங்களும், வரலாற்று நூல்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும், சாசனங்களும் ஓரளவிற்கு உதவுவதைப் போன்று நாட்டுப்புற இலக்கியங்களும், நாட்டுப்புறக்கலைகளும் துணைசெய்கின்றன. நாட்டுப்புற இலக்கிய வகையைச் சார்ந்த விடுகதைகளும் இதற்கு விதிவிலக்கன்று. இதனை அடிப்படையாகக் கொண்டு குறும்பர் விடுகதைகளின் வழி அவர்களின் பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்ள இவ்வியல் முயற்சி மேற்கொள்கிறது.

## 6.2 உணவுப்பழக்கங்கள்

குறும்பர்களிடம் மூன்று வகையான உணவுப்பழக்க முறைகள் உள்ளன: திரவநிலையில் பொதுவாக நீரைப் பருகினாலும் தேங்காய் நீர், பால், தேன் ஆகியவற்றையும் பருகும் பழக்கமுடையவர்களாக உள்ளனர்.[8]

நேரடியாகவும், ஏதேனும் ஒன்றுடன் கலந்த நிலையிலும் திட உணவுப்பொருட்களை உண்ணும் பழக்கமும் இவர்களிடையே காணப்படுகிறது. நேரடியாக உண்ணப்படும் உணவுப்பொருட்களாகப் பாலாப்பழம், முட்டை, வாழைப்பழம், வேர்க்கடலை ஆகியவை இடம் பெறுகின்றன.[9] இவை தவிர, ரொட்டியையும் தின்னும் பழக்கமும் இவர்களிடையே காணப்படுகிறது. இதனைச் சுண்ணாம்பினைச் சாப்பிட இயலாது என்பதைக் குறிக்க வரும்

ஒந்து ரொட்டின சாவிர ஆளு
தந்தலெவு திம்பங்கு முடிய [10]
(ஒரு ரொட்டியை ஆயிரம் ஆட்கள்
தின்றாலும் தின்ன முடியவில்லை) – விடுகதை
சுண்ண – கட்டி (சுண்ணாம்புக்கட்டி) – விடை

என்னும் விடுகதைமூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

உப்பு, கடுகு, தேங்காய், பல்லாரி, பாகற்காய், பூசணிக்காய், மிளகாய் ஆகியன ஏதேனும் ஒரு முறையில் உண்ணப்படுபவையோடு கலந்த நிலையில் இவர்களால் உண்ணப்படுகின்றன[11].

உணவு உண்டபின், தட்டினைக் கழுவிச் சுத்தம் செய்கின்ற வழக்கமும் இவர்களிடையே நிலவுகிறது. இறைவன் தந்த உலோகத்தட்டைக் கழுவ முடியவில்லை என வானத்தின் இயல்பினை விடுகதை வழி விவரிக்கும் நிலையில் தட்டினைக் கழுவுகின்ற குறிப்பு கிடைக்கப் பெறுகின்றது[12].

### 6.2.1 மருந்து சாப்பிடுதல்

நோய்க்கு மருந்து சாப்பிடும் வழக்கம் பிற பழங்குடி இனத்தவர்போல் இவர்களிடமும் நிலவி வருகிறது. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி. ஆனால், உப்பில்லாமல் உண்ணுவது என்பது மருந்து என்ற நிலையில் மட்டுமே சாத்தியமாகும். இந்நிலையானது விருந்தின்மேல் ஏற்றப்பட்டு,

அது இல்லாத விருந்து எல்லாகு
ஒந்து மத்துவு ஆக[13]
(அது இல்லாத விருந்து எல்லோருக்கும்
ஒரு மருந்துகூட ஆகலாம்) – விடுகதை
உப்பு – விடை

என்னும் இவர்களின் விடுகதைமூலம் எடுத்தியம்பப்படுகிறது.

## 6.3 அணிதல் பழக்கங்கள்

### 6.3.1 உடை அணிதல்

குறும்பர்கள் பழங்குடியினத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும், குழந்தைப் பருவத்திலிருந்தே ஆடை அணிகின்ற வழக்கத்தையுடையவராக உள்ளனர். மூங்கில் மரத்தின் குருத்துப்பாளை கீழே விழுகின்ற நிலையினைச் சிறு பெண்குழந்தை ஆடை அணியும் நிலைக்கு (முரண்பட்ட நிலையில்) உருவகித்து விடுகதை வழி எடுத்துக்காட்டப்படுகிறது[14]. மேலும், பெண்டிர் ஈரத்துணியை உடுத்தும் செயலினையும் விடுகதை சுட்டுகின்றது[15].

### 6.3.2 அணிகலன் அணிதல்

அணிகலன் அணிவதில் குறும்பர் இனப்பெண்கள் மிகுந்த நாட்டம் உடையவர்கள். வயதான மூதாட்டியர் தலையில் கொத்தான நிலையிலுள்ள அணிகலனைச் சூடுவதாக உள்ள குறிப்பு,

ஒந்து அஜ்ஜி
ஏழு ஒறெ கொத்துன
சூடியொன்[16]

என்னும் விடுகதைமூலம் கிடைக்கப்பெறுகிறது.

வைரக்கற்களை அணிகின்ற அளவிற்கு வசதி படைத்தவர்களாக இவர்கள் இல்லாதநிலையிலும், வேர்க்கடலையைக் குறித்துக் குறிப்பிடும் விடுகதை வழி அதனையும் அறிந்து வைத்துள்ளனர் என்பதனை அறியமுடிகிறது[17].

தங்கத்திலான அணிகலன்களை அணிகின்ற குறிப்பு இவர்களின் விடுகதைகளில் இடம்பெறாமல் இருந்த போதிலும், தங்க உலோகத்தினைக் குறித்து அறிந்து வைத்துள்ளனர் என்பதனை மஞ்சள் நிறங்கொண்ட பற்களைத் தங்கத்திலான கட்டிடம் என உருவகித்துக் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது[18].

### 6.3.3 அழகு பார்த்தல்

அழகு பார்த்தலுக்குக் குறும்பர்கள் கண்ணாடியைப் பயன்படுத்துகின்றனர் என்பதற்குரிய குறிப்பு கிடைக்கப் பெறுகிறது[19]. நேரடியாகக் கண்ணாடியைக் குறித்துக் குறிப்பிடாமல், நகம் குறித்த விடுகதையை இவர்கள் போடும்போது கண்ணாடியை உருவகித்துக் குறிப்பிடுவதால் கண்ணாடியைக் குறித்தும் இவர்கள் தெரிந்துள்ளனர் என உணரலாம்.

## 6.4 உறைவிடச் சார்பு பழக்கங்கள்

தனிமனிதனின் பாதுகாப்பிற்கு அரணாக அமைவது அவனது வீடேயாகும். தமிழக அரசு குறும்பர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தபோதிலும், இவர்கள் தங்களின் மரபுப்படி அமைக்கப்பட்ட வீடுகளிலேயே வசிக்கின்றனர். இவர்களின் வீடுகள் செங்கற்களால் ஆனவை[20]. மழைக்காலங்களில் நீர் வடிவதற்கேற்றவாறு இருபக்கங்களிலுமுள்ள கூரைப்பகுதிகள் சாய்ந்தநிலையில் வீட்டின் மோட்டுப்பகுதி (வீட்டுக்கூடு) அமைந்துள்ளது[21]. வீட்டுக்கூட்டினை அமைப்பதற்கும், வீட்டுக்கூட்டிலிருந்து சாய்வான பகுதிகளை அமைப்பதற்கும் மூங்கிலைப் பயன்படுத்துகின்றனர்.

வீட்டின் பாதுகாப்பிற்காகக் கதவுகள் அமைத்துள்ளனர்[22]. வெளியில் செல்லும்போது வீட்டுப் பொருட்கள் பாதுகாப்பாக இருப்பதற்குக் கதவில் பூட்டு போட்டுவிட்டுச் செல்கின்றனர்[23]. வீட்டுச்சுவர்கள் கெடாமல் இருப்பதற்கும், பார்வைக்கு அழகாக இருப்பதற்கும் சுண்ணாம்பால் வெள்ளை அடிக்கின்றனர்[24].

## 6.5 புழங்கு பொருட்கள் இடம்பெறல்

வீட்டின் அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய பொருட்களைப் புழங்கு பொருட்கள் அல்லது வீட்டுப்பொருட்கள் என்பர். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட சமையற்தேவைகளுக்கு வேண்டிய பொருட்களும் இதன்பால் அடங்குகின்றன[25].

குறும்பர்களிடம் இவை தவிர்த்த பொருட்களான ஊசி, எண்ணெய் விளக்கு, ஏணி, சுண்ணாம்பு, செருப்பு, திருவை, துடப்பம், துப்பாக்கி, மத்தளம், மெழுகுத்திரி, ரேடியோ, வலை, விளக்கு எண்ணெய் ஆகியன புழங்கு பொருட்களாக இடம் பெறுகின்றன[26].

## 6.6 தூங்குதல்

தூங்கும்போது பாயை விரித்துக் தூங்குவதும், தூங்கியபிறகு பாயைச் சுருட்டி வைப்பதும் குறும்பர்களின் வழக்கமாகும். சுருட்டப்படாமல் இருக்கும் நிலையையும் அவர்கள் கவனத்தில் கொள்ளாமல் இல்லை. வானம் பரந்து கிடக்கும் நிலையைச் சுருட்டப்படாமல் உள்ள பாய்க்கு உருவகித்துக் கூறுகின்றனர்[27].

## 6.7 விபூதி பூசுதல்

குறும்பர்கள் விபூதி பூசும் பழக்கம் உடையவர்களாகவும் உள்ளனர். நாதசுவரத்தின் ஓசைநிலைக்கு ஏற்றவாறு சில நேரங்களில் மத்தளத்தின் பக்கவாட்டிலுள்ள தோலின் மேற்பகுதியில் விரல்களினால் தடவி இழுக்கும்போது அது விபூதி பூசுவதுபோல் உள்ளது என்றும், எழுகின்ற மத்தள ஓசை எருது அலறுவதுபோல் உள்ளது என்றும் இவர்களின் விடுகதை செய்திகளைத் தருகின்றது[28].

## 6.8 தொழில்கள்

மிருகங்களைப் பொறுத்தவரையில் குறும்பர்கள் ஆடு மற்றும் பசு ஆகியவற்றை வளர்க்கின்றனர். இவை தரும் பாலினை அருந்துகின்றனர்[29]. மேலும், பெட்டைக்கோழியையும், சேவற்கோழியையும் வளர்க்கின்றனர்[30]. அரசு வழங்கிடும் மானியத்தொகையுடன் கூடிய தேனீ வளர்ப்புத்திட்டத்தின்கீழ் தேனீக்களை வளர்த்துத் தேன் பெறுகின்றனர்[31]. நெல், சாமை, தினை போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். இவற்றை அறுவடை செய்யப் பற்களை உடைய வளைந்த அரிவாளைப் பயன்படுத்துகின்றனர்[32].

சமையற்கட்டின் பின்புறப்பகுதியில் உள்ள அடுக்களைத் தோட்டத்தில் தொட்டால்வாடிச்செடி பரந்து வளர்ந்திருக்கும் நிலையினை விளக்கும்போது பாயை விரித்தாற்போன்றுள்ளது எனக் குறிப்பிடுவதிலிருந்து அடுக்களைத் தோட்டத்தில் காய்கறிச் செடிகளைப் பயிரிடுவதாகவுமுள்ள குறிப்பும் கிடைக்கப் பெறுகிறது[33].

## 6.9 ஆடல் - பாடல் இரசனை

குறும்பர்கள் ஆடல், பாடல் கலைகளில் மிகுந்த இரசனைத்தன்மை கொண்டவர்களாக விளங்குகின்றனர். அணிலின் செயல்பாட்டைக் கண்ணுறும் இவர்கள், அது எழுப்புகின்ற ஒலியோடும், உடல் அசைவோடும் இணைத்துக் கூறுகின்றனர். தாய் போன்ற நிலையிலுள்ள பெண்மணி நாட்டிய நிகழ்ச்சியின்போது பாட, மகள் போன்ற நிலையிலுள்ள பெண் பாடலுக்கேற்றவாறு ஆடுவது வழக்கம். இவற்றைப் போன்று அணிலின் தலைப்பகுதியிலுள்ள வாய் ஒலிஎழுப்ப, அதற்கேற்றவாறு அதனுடைய உடற்பகுதி அசைகிறது. கற்பனை வளத்துடன் இதனை,

அவ்வெ பாடி
மகளு கொணிகி [34]

(தாய் பாடகி
மகள் நாட்டியக்காரி) – விடுகதை
சண்ணானு (அணில்) – விடை

என்னும் விடுகதை வெளிப்படுத்துகிறது.

## 6.10 புல்லாங்குழல் ஊதுதல்

பொழுதுபோக்கு நேரங்களில் புல்லாங்குழல் ஊதும் பழக்கமும் இவர்களிடம் காணப்படுகிறது. இவர்கள் வனப்பகுதிகளில் வாழ்வதால், மூங்கில் மரங்களிலிருந்து பருமனில் சிறியதான மூங்கிலினை வெட்டி அதில் ஆறு துளைகள் இட்டுப் புல்லாங்குழலாக ஊதுகின்றனர் என்பதனை 'அட்டகு ஆறு கண்ணு'[35] என்னும் விடுகதையடி குறிப்பிடுகின்றது.

## 6.11 எழுதுதல்

எழுதும் பழக்கம் குறும்பர்களிடமும் காணப்படுகிறது. இவர்களின் விடுகதைகளில் காகிதமும், மையும் (இங்க்) எழுது பொருட்களாக இடம் பெறுகின்றன. காகிதத்தை வெள்ளைநிற நிலத்திற்கும், மையினைக்

கருமைநிறங்கொண்ட விதைக்கும் உருவகப்படுத்தியுள்ள இவர்களின் கற்பனைத்திறன் வியப்பளிப்பதாகவுள்ளது[36].

## 6.12 பயணம் மேற்கொள்ளல்

குறும்பர்கள் பல்வேறு வகையான ஊர்திகளில் பயணம் மேற்கொண்டு தங்களின் செயன்மைகளை நிறைவேற்றினாலும் அவர்களின் மனங்கவர்ந்த நிலையில் அமைந்த பயணம் புகைவண்டிப்பயணமே. எனவேதான், இவர்கள் உதகையிலிருந்து குன்னூருக்கோ அல்லது மேட்டுப்பாளையத்திற்கோ, அல்லது மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூருக்கோ, உதகைக்கோ, அல்லது குன்னூரிலிருந்து உதகைக்கோ, மேட்டுப்பாளையத்திற்கோ புகைவண்டியில் பயணம் செய்யும்போது ஏராளமான மக்கள் அடைந்து செல்வதனை எறும்புகள் மொய்த்திருப்பதற்கு ஒப்பிட்டும், திருப்பங்களில் வளைந்து செல்லும்போது தள்ளாடிச் செல்வதற்கு ஒப்புமைப்படுத்தியும், மலைமேடுகளில் ஏறி இறங்கிப் போவதனைக் குதித்துச் செல்வதற்கு ஒப்பிட்டும் இரசனையுடன் குறிப்பிடுகின்றனர்[37].

## 6.13 இறந்தவர்களை எரித்தல்

குறும்பர்கள் தம்மினத்தில் இறந்தவர்களை எரிக்கின்ற பழக்கமுடையவர்களாக உள்ளனர். துப்பாக்கி குறித்த விடுகதையில் மூதாட்டியை எரிப்பதாக உள்ள 'அஜ்ஜின சுட்ட எடலு'[38] என்னும் குறிப்பு இச்செய்தியினை உறுதி செய்துள்ளது.

## 6.14 முடிபுகள்

நெடுங்காலமாக வாழ்வியல் நிலையில் நிலைத்து வந்த குறும்பரின் பழக்கவழக்க மரபுகளின் சுவடுகள், குறிப்புகள் என்ற தோற்றத்தில் அவர்களின் விடுகதைகளின்வழி வெளிப்படுகின்றன.

பருகுகின்ற நிலையிலுள்ள திரவ உணவினையும், உண்ணும் நிலையிலுள்ள திடப்பொருளை நேரடியாகவும், பிறிதொரு உண்ணப்படும் பொருளோடு கலந்தநிலையிலும் உண்ணுகின்ற பழக்கமுடையவர்களாக இவர்கள் விளங்குகின்றனர். சில நேரங்களில் 'உப்பு' மருந்தாக இவர்களிடையே பயன்படுகிறது.

குறும்பர் இனப்பெண்கள் அணிகலன்கள் அணிவதில் அதிக நாட்டம் உடையவர்களாகத் திகழ்கின்றனர். பழங்குடி இனத்தவராக இருந்தபோதிலும் வைரம், தங்கம் ஆகியவை குறித்த செய்திகளையும் தெரிந்து வைத்துள்ளனர்.

இவர்களுக்குத் தமிழக அரசு குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தபோதிலும், தங்களின் மரபுப்படி அமைக்கப்பட்ட வீடுகளிலேயே விரும்பி வசிக்கின்றனர்.

சமையல் செய்வதற்குத் தேவையான அடிப்படைப்பாத்திரங்களும், அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய வீட்டின் இதரப் பொருட்களும் இவர்களிடையே புழங்குப்பொருட்களாக அமைகின்றன.

தூங்கும்போது பாயினைப் பயன்படுத்துகின்றனர். விபூதி பூசுகின்ற பழக்கமும் இவர்களிடையே காணப்படுகிறது.

தொழில் நிலையில் ஆடு, பசு ஆகியவற்றை வளர்ப்பதோடு கோழி வகைகளையும் வளர்க்கின்றனர். அரசின் மானிய உதவியுடன் தேனீக்களை வளர்ப்பதோடு நெல், சாமை, தினை ஆகியவற்றையும் பயிரிடுகின்றனர். மேலும், அடுக்களைத் தோட்டத்தில் காய்கறிச் செடிகளையும் பயிரிடுகின்றனர்.

ஆடல்பாடல்களில் இரசனையுடைய இவர்கள், பொழுதுபோக்கிற்காகப் புல்லாங்குழலினை ஊதுகின்றனர். எழுதுவதற்குக் காகிதத்தையும், மையையும் பயன்படுத்துகின்றனர். இவர்களின் மனங்கவர்ந்த நிலையில் அமைந்த பயணம் புகைவண்டிப்பயணமே.

மனிதப் படைப்பின் இறுதிநிலை இறப்பே. இந்நிலையில் இறந்தவர்களை எரிக்கின்ற பழக்கமுடையவர்களாக உள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. W. Smith Ronald, *Sociology - An Introduction*, p.19
2. David Dreseller and William W. Wills, *Sociology - The Study of Human Interaction*, p.33.
3. இராம. சுந்தரம், "தமிழர் பண்பாடும், அறிவியலும்", தமிழ்மொழியும், பண்பாடும், சு. இராசாராம் மற்றும் பலர் (ப.ஆ.) ப. 325
4. Ralph Linton, *The Study of Man*, p.10.
5. Dictionary of Sociology, p. 90.
6. சீ. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 157.
7. மே. ப., ப. 157.
8. காண்க பி.எ. 4.4.
9. மே. ப.,
10. காண்க பி.எ. 3:40.
11. காண்க பி.எ. 3:4.
12. காண்க பி.எ. 3:74.
13. காண்க பி.எ. 3:6.
14. காண்க பி.எ. 3:57.
15. காண்க பி.எ. 3:17.
16. காண்க பி.எ. 3:23.
17. காண்க பி.எ. 3:55.
18. காண்க பி.எ. 3:64.
19. காண்க பி.எ. 3:35.
20. காண்க பி.எ. 3:26.
21. காண்க பி.எ. 3:73.
22. காண்க பி.எ. 3:45.
23. காண்க பி.எ. 3:26.
24. காண்க பி.எ. 3:25.

25. காண்க பி.எ. 4:3.

26. மே.ப.

27. காண்க பி.எ. 3:14.

28. காண்க பி.எ. 3:85.

29. காண்க பி.எ. 3:9.

30. காண்க பி.எ. 3:23.

31. காண்க பி.எ. 3.94.

32. காண்க பி.எ. 3:58.

33. காண்க பி.எ. 3:18.

34. காண்க பி.எ. 3:10.

35. காண்க பி.எ. 3:5.

36. காண்க பி.எ. 3:51.

37. காண்க பி.எ. 3:68.

38. காண்க பி.எ. 3:3.

# 7. ஆய்வு முடிவுரை

7.1 தமக்கேயுரிய தனித்ததொரு பாரம்பரியத்தையும், பழக்கவழக்கங்களையும் கொண்டு விளங்கும் பழங்குடி மக்களின் வாய்மொழி இலக்கிய வகையைச் சார்ந்த அனைத்தும் காலச்சுழற்சியில் மெல்ல மெல்ல மறைந்து வருவதனை நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் உணர்ந்து வருகின்றனர். எனவே அவற்றைப் பேணிக்காப்பதும், ஆய்வதும் இன்றையக் காலக்கட்டத்தில் கட்டாயத் தேவைகளாகும். ஏனெனில், இம்மக்களின் நாட்டுப்புற இலக்கியங்கள் காலப்போக்கில் மறையும்போது இவர்களின் பண்பாட்டு மரபுகளையும், பாரம்பரியத் தன்மைகளையும், மொழிநிலைகளையும் பிற்காலத்தில் அறிந்துகொள்ள வாய்ப்புகள் இல்லாமலாகி விடுகின்றன. தமிழகப் பழங்குடியினத்தவரில் பண்டையப்பழங்குடி (Primitive Tribes) மரபைச் சார்ந்தவர்கள் என்ற நிலையில் மட்டுமல்லாமல் தென்திராவிட மொழிப்பிரிவில் அடங்குகிற எல்லாப் பழங்குடிமொழிகளும் ஒருங்கே பேசப்படும் பகுதியான நீலகிரி மாவட்டத்தில் உள்ள குறும்பர் பழங்குடியினரிடையேயும் நாட்டுப்புறவியல் இலக்கியவகையைச் சார்ந்த விடுகதைகள் இன்றும் அவர்களின் நாவில் துடிப்புடன் வெளிவருகின்றன.

7.1.1. வாய்மொழி இலக்கியங்கள் பொதுவாக இயற்கைச்சூழல்களில் உருவாக்கப்படுபவை. குறும்பர் விடுகதைகளும் இதற்கு விதிவிலக்கன்று. இவர்களின் விடுகதைகள் மலைப்பாங்கு மற்றும் வனப்பகுதிகள் நிறைந்த

இயற்கைச் சூழல்களில் உருவாக்கப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களும், தொல்காப்பியமும் பிசி, நொடி என்னும் சொல்லாட்சிகளை விடுகதை என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்த, பிற திராவிட இலக்கியமொழிகள் விடுகதை என்னும் சொல்லின் பல்வேறு மருவிய சொல்லாட்சிகளைப் பயன்படுத்துகின்றன. குறும்பமொழி 'புடுசோ - பளமே' என்னும் சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறது.

7.1.2 குறும்பர்கள் பொழுதுபோக்கின்போது மட்டும் விடுகதைகளைச் சொன்னாலும், குழுக்கள் என்ற நிலையில் பிரிவுகளை ஏற்படுத்தி விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதைப் போன்று விடுகதைப் போட்டிகளையும் நடத்துகின்றனர்.

7.1.3 பண்பாட்டுப்பின்னணியினையும், சூழல்களையும் விடுகதைகள் கொண்டிருந்தாலும், பிற மக்களின் விடுகதைகளில் காணப்படுவதனைப் போன்று குறும்பர் விடுகதைகளிலும் சில விடுகதைகள் வினாத்தன்மையினை ஏற்றும், சில விடுகதைகள் வினாத்தன்மையில்லாத நிலையினைக் கொண்டும் விளங்குகின்றன. இக்குறும்பப் பழங்குடியினத்தவர்களின் விடுகதைகள் ஓரடி முதல் ஈரடியினைக் கொண்ட குறுவடிவினையும், மூன்று முதல் ஆறு அடிகள் கொண்ட பெருவடிவினையும் கொண்டு அமைவதோடு அவற்றில் இடம்பெற்ற சொல்லாட்சிகள் அவர்களின் சொற்றிறத்தையும், அறிவுத்திறனையும் பறைசாற்றுகின்றன.

7.2 வாழுகின்ற சூழல்களும், வாழ்வியல் அம்சங்களும் மனித இனத்தில் இன்றியமையா இடங்களைப் பிடித்து அவ்வினத்தின் செயல்பாடுகளின் வெளிப்பாடுகளான பழமொழிகள், கதைகள், பாடல்கள், விடுகதைகள் போன்றவற்றின் மூலம் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. குறும்பர் விடுகதைகளும் இந்நிலையிலிருந்து தடம்புரளாமல் ஒத்தமைவதோடு அவற்றைப் பாகுபடுத்த அடிப்படை ஏதுக்களையும் கொண்டு விளங்குகின்றன. நாட்டுப்புறவியலறிஞர் பாகுபடுத்தியதைப் போன்று விடுகதைகளின் விடைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கையாகவே அமைந்தனவற்றை அடிப்படையாகக் கொண்டவை, சமூகப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை, இவையல்லாத பிற என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்னும் பகுப்புகளின் கீழ் குறும்பப் பழங்குடியினத்தவரின் விடுகதைகள் அடங்குகின்றன. முதல் பகுப்பில் அதிக எண்ணிக்கையில் இவர்களின் விடுகதைகள் இடம்பெறுவதற்கு இயற்கையோடு சார்ந்த

வாழ்க்கையினை இவர்கள் மேற்கொள்வதால்தான் என்னும் உண்மை கிடைக்கப்பெறுகின்றது.

7.3 குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளை ஆய்வுசெய்த நிலையில் குறிப்பிடத் தகுந்த செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. இக்குறும்பர் விடுகதைகளின் அமைப்புகளைத் தலைப்பு, விவரணம் என்னும் அலகுகள்வழி ஆயும்நிலையில் விரிவாக அமைப்பாய்வு செய்ய இயலவில்லை. ஆனால், குறிப்பு - விடை அடிப்படையில் ஆராய்ந்த நிலையில் அமைப்புகளின் போக்குகளை மட்டுமே தெளிவாக அறிய முடிகிறதேயன்றி இலக்கணத் தன்மைகள் குறித்த செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை. மேலும், இவ்விடுகதைகளின் அமைப்புகளில் இலக்கணக் கூறுகளின் ஊடுருவல் காணப்படுகிறது. இந்நிலையில் அவற்றின் செயல்பாடுகளை இலக்கணப் பார்வையோடு விளக்கும்போது பரந்துபட்ட நிலையில் மட்டுமே விடுகதைகளின் அமைப்புப் போக்குகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

7.4 இலக்கியமொழிகளில் காணப்படுவதனைப் போன்று குறும்பர் விடுகதைகளிலும் யாப்பும், அணியும் இடம்பெற்றுள்ளன. இவர்தம் விடுகதைகளில் யாப்புக்கூறுகளான மோனை, எதுகை, இயைபு, முரண், அந்தாதி ஆகியன இடம் பெற்றுள்ளன. மோனைகள் அடிநிலையிலும், சீர்நிலையிலும் இடம் பெற்றிருப்பினும் அடிநிலையான மோனைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் எல்லா வகையான எதுகைகளும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தகுந்த செய்தியாகும். இயைபுகளைப் பொறுத்தவரை சொல்லியைபுகளைவிடவும் எழுத்தியைபுகள் சீர்நிலையில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவர்களின் விடுகதைகளில் அளபெடையே இல்லையென்றபோதிலும், முரண் விரோத அணியாக இடம்பெறுகிறது. மோனையும், எதுகையும், இயைபும் ஒருசேர இணைந்த விடுகதைகள் குறும்பரிடம் காணப்படவில்லை.

7.4.1 அணிகளைப் பொறுத்தவரை, தன்மை நவிற்சி, உருவகம், விரோதம் ஆகிய அணிகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவர்களின் விடுகதைகளில் உருவகங்கள் மிகுந்த அளவில் இடம்பெற்ற போதிலும், சில விடுகதைகளில் அதிக அளவாக இரு அணிகளே காணப்படுகின்றன. குறும்பர் விடுகதைகளின் இலக்கிய மெருகூட்டலுக்கு யாப்புக்கூறுகளும் அணியியற்கூறுகளும் பேரளவிற்குத் துணை செய்வதனை அறிந்து கொள்ள முடிகிறது.

7.5 பன்னெடுங்காலமாகக் குறும்பரின் வாழ்வியல் நிலையில் நிலைத்து வந்த பழக்கவழக்க மரபுகளின் சுவடுகளை அவர்களின் விடுகதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. பருகும் நிலையிலுள்ள திரவ உணவுகள், நேரடியாக உண்ணுகின்ற திட உணவுகள், பிறவற்றோடு கலந்தநிலையில் உண்ணும் உணவுகள் என்ற நிலைகளில் உணவுகளை உண்ணும் பழக்கமுடையவர்களாக உள்ளனர். இவ்வுணவுகள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையின் காரணமாகக் காடுகளில் கிடைக்கும் கனிகள் மற்றும் காய்கள் என்ற நிலையில் மட்டும் அமையாமல் மரபுவழி வாழும் எளிய வாழ்க்கையின் காரணமாகவும் அமைகிறது.

7.5.1 தங்கம், வைரம் போன்ற உயரிய உலோகப்பொருட்கள் குறித்து இவர்கள் அறிந்திருந்தபோதிலும், குறும்பரினப் பெண்கள் அணிகலன்கள்பால் மிகுந்த நாட்டமுடையவர்களாகவும் உள்ளனர் என்பதனையும் தெரிந்து கொள்ள முடிகிறது. அரசு தரும் நவீன வீடுகளைத் தவிர்த்து, மரபுசார்ந்து கட்டப்பட்ட வீடுகளில் மட்டுமே வாழ விருப்பமுடையவர்களாக உள்ளனர். எளியவர்களின் வீடுகளில் இடம்பெறும் புழங்குபொருட்களே இவர்களிடமும் உள்ளன. தொழில்நிலையில் ஆடு, பசு, கோழி, தேனீ ஆகியவற்றை வளர்ப்பதோடு நெல், சாமை, தினை ஆகியவற்றையும் பயிரிடுகின்றனர். இறந்தவர்களை எரியூட்டுகின்றனர். ஆடல்பாடல்களில் இரசனையுடைய இவர்களுக்குப் புகைவண்டிப் பயணமே மிகவும் மனங்கவர்ந்த ஒன்றாகும்.

7.6 காலச்சுழற்சியாலும், சமுதாயச்சூழல்களாலும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்படுவது யதார்த்தமான செயலாகும். குறும்பரினப் பழங்குடியினரிடமும் இம்மாற்றங்கள் நிகழ்வுற்றபோதும் மரபுவழி செயல்பாடுகளைப் பேணிக்காத்து வருகின்ற பாங்கினை இவர்களின் விடுகதைகள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. இவர்களின் விடுகதைகளைப் பதிவு செய்துப் பேணிக்காக்கும் நிலையில்தான் பிற்காலத்தில் இவர்களின் பாரம்பரிய நிலையைத் தெரிந்து கொள்ள இயலும். அன்றியும், இனஞ்சார்ந்த பண்பாட்டு மரபுகளின் மீட்டுருவாக்கத்திற்கும் பயன்படும் நிலையில் இவை அமையும். மேலும், ஒரே குடும்பம் சார்ந்த வெவ்வேறு பழங்குடி மக்களிடையே பண்பாடு குறித்த ஒப்பாய்வுகள் மேற்கொள்வதற்கும், பிற குடும்பங்கள் சார்ந்த பழங்குடி மக்களிடையே பண்பாடு குறித்த ஒப்பாய்வுகள் மேற்கொள்வதற்கும் வாய்மொழி இலக்கியவகையைச் சார்ந்த விடுகதைகளை ஆவணப்படுத்த வேண்டும் என்ற கட்டாய நிலையை உருவாக்க வேண்டும்.

# பின்னிணைப்புகள்

1.1 நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள் குன்னூர் வட்டம்

1.2 நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள் கோத்தகிரி வட்டம்

1.3 நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள் குந்தா வட்டம்

1.4 நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள் கூடலூர் வட்டம்

1.5 நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள் பந்தலூர் வட்டம்

2. ஆய்வு முன்னோடிகள் - குறிப்புகள்

3. குறும்பர் விடுகதைகள்

4.1 விடுகதைகள் குறித்த அறிஞர்களின் பாகுபாடுகள்

4.2 இயற்கையாகவே அமைந்த விடுகதைகள்

4.3 உடல் உறுப்புகள் குறித்த விடுகதைகள்

4.4. வீட்டுப்பொருட்கள் குறித்த விடுகதைகள்

4.5. உணவுப்பொருட்கள் குறித்த விடுகதைகள்

5. தகவலாளிகள் குறித்த குறிப்புகள்

பின்னிணைப்பு எண் - 1.1

## நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள்

### குன்னூர் வட்டம்

| வரிசை எண் | ஊரின் பெயர் | வருவாய்கிராமம் |
|---|---|---|
| 1 | குறும்பதி | பரலியாறு |
| 2 | புதுக்காடு | பரலியாறு |
| 3 | செங்குத்துராயர்மலை | மேலூர் |
| 4 | சூரியமலை | மேலூர் |
| 5 | வீரக்கொம்பை கொத்திக்கல் | மேலூர் |
| 6 | செங்கல்புதூர் கொம்பை | உழிக்கல் |
| 7 | நெடுகல்கொம்பை | மஞ்சக்கொம்பை |

பின்னிணைப்பு எண் - 1.2

## நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள்

### கோத்தகிரி வட்டம்

| வரிசை எண் | ஊரின் பெயர் | வருவாய்கிராமம் |
|---|---|---|
| 1 | கீழ் - கூப்புக்காடு | ஜக்கநாரை |
| 2 | அரையூர் | ஜக்கநாரை |
| 3 | மேட்டுக்கல் | தேநாடு |
| 4 | பாவியூர் | தேநாடு |
| 5 | கீழ்-கோத்தகிரி | தேநாடு |

பின்னிணைப்பு எண் - 1.3

## நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள்

### குந்தா வட்டம்

| வரிசை எண் | ஊரின் பெயர் | வருவாய்கிராமம் |
|---|---|---|
| 1 | தும்பிநெறி கொம்பை | மேல்குந்தா |
| 2 | கின்னக்கொரை | கின்னக்கொரை |
| 3 | மரப்பாலம் | கீழ்க்குந்தா |
| 4 | பெல்லத்திகொம்பை | கீழ்க்குந்தா |
| 5 | ஓஞ்சலரைகொம்பை | மேலூர் |

பின்னிணைப்பு எண் - 1.4

## நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள்

### கூடலூர் வட்டம்

| வரிசை எண் | ஊரின் பெயர் | வருவாய்கிராமம் |
|---|---|---|
| 1 | பெர்க்கலின் குறும்பர் வெட்ட எஸ்டேட் | செறுமுல்லி |
| 2 | தெப்பக்காடு | முதுமலை |
| 3 | விலாங்கூர் | நெல்லியாளம் |
| 4 | பெரும்பள்ளி | நெல்லியாளம் |
| 5 | மணல்கொல்லி | மூனநாடு |
| 6 | கனயம்வயல் | மூனநாடு |
| 7 | மதுராந்தல் | மூனநாடு |
| 8 | பரசேரி | சேரங்கோடு |
| 9 | கல்லிச்சால் | சேரங்கோடு |
| 10 | கொன்னத்து | சேரங்கோடு |
| 11 | குறும்பர்பாடி | தேவலா |

பின்னிணைப்பு எண் - 1.5

# நீலகிரி மாவட்டத்தில் குறும்பர்கள் வாழுமிடங்கள்

## பந்தலூர் வட்டம்

| வரிசை எண் | ஊரின் பெயர் | வருவாய்கிராமம் |
|---|---|---|
| 1 | நெடுங்கோடு | எருமாடு |
| 2 | கப்பாலா | எருமாடு |
| 3 | நரிவெளுப்பு | எருமாடு |
| 4 | காப்புக்குன்னு | எருமாடு |
| 5 | ஒனிமூலா | எருமாடு |
| 6 | பள்ளியரா | எருமாடு |
| 7 | தேயக்குன்னி | எருமாடு |
| 8 | கூவமூலா | எருமாடு |
| 9 | பன்னிக்கொல்லி | எருமாடு |
| 10 | பனசர கொத்தமங்கலம் | எருமாடு |
| 11 | செம்பக்கொல்லி | மச்சிக்கொல்லி |

பின்னிணைப்பு எண் - 2

## ஆய்வு முன்னோடிகள் - குறிப்புகள்


1 மானிடவியல் தொடர்பானவை (நீலகிரி பழங்குடி மக்கள் - பொது)

a. C.F. Muzzy, "Account of the Neilgherry Hill Tribes", *Christian Instructor and Missionary Record,* 24 : 358, 1844.

b. Rifle, "The Hill Tribes of the Neilgherries, *"Indian Antiquary 2:32* (Reprinted from Madras Spectator), Oct. 18, 1872.

c. Edgar Thurston, *Castes and Tribes of Southern India,* Vol. IV K to M, Vol. 11. C, Cosmo Publications, Delhi, 1975.

d. Paul Hockings, *Ancient Hindu Refugees,* Vikos Publishing House Ltd., 1980.

e. W. Francis, *Madras District Gazetteers,* Logos Press, 1984.

f. W.H.R. Rivers, *The Todas,* Macmillan & Co. Ltd., London, 1906.

2 சமூகவியல் தொடர்பானவை

a) S.R. Venkatraman, *Bharathap Pazhankudigal (Tamil),* Tamil Writers' Co-operative Sangam, 1983.

3 வாழ்வியல் தொடர்பானவை (பொது)

a) Pilo Iruthayanath, *Pazhamkudigal* (Tamil), Tamil Selvi, Madras, 1973.

b) S. Sakthivel, *Tamilnadu Pazhankudi Makkal : Vazhvum Varalarum,* Manivasakar Nulakam, Chidambaram, 1980.

4 மொழியியல் தொடர்பானவை

a) S.V. Shanmugam, *Dravidian Nouns,* CAS in Linguistics, Annamalai University, Annamalainagar, 1971.

b) P.S. Subramanyam, "The Personal pronouns in Dravidian", *Bulletin of the Deccan College* 28 : 112-116, 1967-68.

.............................,*Dravidian Verb Morphology : A Comparative Study,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1971.

.............................,"Quantitative Variation in Dravidian", *Indian Linguistics,* 36 : 1 - 15.

.............................,*Dravidian Comparative Phonology,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1983.

c) S. Sakthivel, *Phonology of Toda with vocabulary,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1976.

...................., *A Grammar of the Toda Language,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1977.

d) G. Subbaiya, *Grammar of Kota Language,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1985.

e) V. Chidambaranatha Pillai, *Phonology of Kasaba with Vocabulary,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1976.

.......................................,*A Grammar of the Kasaba Language,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1978.

f) R. Perialwar, *Irula Phonology with Vocabulary,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1978.

..........................., *A Grammar of Irula Language,*, CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1978.

g) D. Robert Sathya Joseph, *A Descriptive Study of Mullukurumba,* Unpublished Ph.D., Thesis, CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1982.

h) S. Jean Lawrence, *A Descriptive Analysis of Paniya,* Unpublished Ph.D., thesis, CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1979.

i) Natanasabhapathy, *Descriptive Study of Kattunayaka Language,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1986.

j) S. Jayapal, *Descriptive Grammar of Betta Kurumba Language,* Unpublished Ph.D., Thesis, CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1978.

k) M.B. Emeneau, "Proto-Dravidian C : Toda t," *Bulletin of the School of Oriental and African Studies* 15 : 98 - 112, 1953.

......................, " Toda, a Dravidian Language", Transactions of the Philological Society : 15 - 66, 1958.

......................, "The South Dravidian Languages", *Journal of American Oriental Society,* 87:365 - 412, 1967.

......................, *Dravidian Linguistics, Ethnology and Folktales* (Collected Papers), CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1967.

l) T. Burrow, *Collected Papers on Dravidian Linguistics,* CAS in Linguistics, Annamalai Unviersity, Annamalainagar, 1968.

m) Kamil Zvelebil, *Irula Language,* Otto Harrassowitz., Wiesbaden, 1973.

n) Gerald Diffloth, "Irula Dialect of Tamil - Some Phonological Remarks", *Proceedings of the First International Conference - Seminar of Tamil Studies,* Vol. 2:550 - 562, Kaula Lumpur, 1969.

5 தற்கால வாழ்வியல் தொடர்பானவை

a) T.S. Natarajan, *Tribal Habitats of Nilgiri District,* Tribal Research Centre, Tamil University, Udhagamandalam, 1985.

b) K.N. Reddy, *Plants and Animals used as Food among Nilgiri Tribes,* Tribal Research Centre, Tamil University, Udhagamandalam, 1985.

................,*Food systems among a few Nilgiri Tribes,* Tamil University, Udhagamandalam, 1988.

c) M. Sethuraman, *Colour Blindness among School going Tribal Children of Nilgiris,* Tamil University, Udhagamandalam, 1989.

d) D.V. Raghava Rao & K. Baskaradoss, *Land Alienation among Tribals of Tamil Nadu,* Tamil University, Udhagamandalam, 1985.

6 மானிடவியல் அணுகுமுறை (குறும்பர்கள் மட்டும்)

a) A. Krishna Iyer, "The Kadu Kurumbas", *Man in India, 9(4) : 223-229,* 1929.

b) Riginals Ruggles Gates, "The Kurumbas in the Nilgiri Hills of South India, *Mankind,* Quarterly, 1 : 258 - 276, 1961

c) Rajalakshmi Misra, *Mullukurumbas of Kappala,* Anthropological Survey of India, Memorium 30, Calcutta, 1971.

d) P.R.G. Mathur, "The Kurumbas of Attappadi", *Primitive Tribes : THE FIRST STEP,* Surajit Sinha & B.D. Sharma (Eds.) Govt. of India, Ministry of Home Affairs, New Delhi, 1977.

e) Director, *Nilgiri Primitive Tribes (Tamil),* Tamil Research Centre, Tamilnadu Govt. Tribal Wefare Department, M. Palada, Ooty - 4, 1998.

7 நாட்டுப்புறவியல் தொடர்பானவை (நீலகிரி பழங்குடி மக்கள்)

a) M.B. Emeneau, *Toda Songs,* Oxford University Press, London, 1971.

b) S.Agasthialingom (Ed.), *Tamilakap Pazhankudi Makkal (Tamil),* Research Scholars' Publication Series 1, Linguistics Department, Annamalai University, Annamalainagar, 1972, pp. vi-vii.

c) K.A. Gunasekaran, *Dances of Nilgiri Tribal People (Tamil),* Tamil University, Thanjavur, 1989.

d) Vergheese, "Religious Believes and Practices", *Bulletin of the Anthropological Survey of India,* Vol.XVIII, No.2, April 1974.

e) Enakshi Bhaknani, *Folk and Tribal Designs of India, 1974.*

f) Pragash Banerji, *Asthetics of Indian Folk Dance,* Cosmo Publications, 1982.

8 ஒப்பாய்வு மொழியியல் அணுகுமுறை (குறும்பர்கள் மட்டும்)

D.B. Kapp, " Palu Kurumba Riddles : Specimens of a South Dravidian Tribal Language", *Bulletin of the School of Oriental and African Studies 41,* South Asia Institute of Heidelberg University, 1978.

................,"Alu Kurumba Riddles", *Bulletin of the School of Oriental and African Studies Vol. XLVII,* Part. 2, Univeristy of London 1984.

பின்னிணைப்பு எண் - 3

# குறும்பர் விடுகதைகள்

1. அக்க ஓடியது
குண்டு நித்தது
'கயிறு ஓடியது
வட்டக்கல் நின்றது'
(விடை : கும்ப - காயி - பூசணிக்காய்)

2. அக்க நீரு உத்தங்க மெதந்தது
தங்கெ நகெதது
'அக்காள் நீரின் மேல் மிதந்தால்
தங்கை சிரித்தாள்'
(விடை : தாமரெ எலெவு ஊ - தாமரை இலையும், பூவும்)

3. அஞ்ஞின சுட்ட எடலு
ஒந்து இடி பூதி இல்லெ
'மூதாட்டியை எரித்த இடத்தில்
ஒரு பிடி சாம்பல் இல்லை'
(விடை : பெடி - துப்பாக்கி)

4. அட்ட மரலு கிட்டப்ப தூங்கியது
'மர இடுக்கில் கிட்டப்ப(ன்) தொங்குகிறான்'
(விடை : சக்கெ - காயி - பலாப்பழம்)

5. அட்டகு ஆறு கண்ணு
மொட்டகு மூறு கண்ணு
'அட்டைக்கு ஆறு கண்கள்
முட்டைக்கு மூன்று கண்கள்'
(விடை : புகிரிவு தேங்காயி - புல்லாங்குழலும், தேங்காயும்)

6. அது இல்லாத விருந்து எல்லாகு

ஒந்து மத்துவு ஆக

'அது இல்லாத விருந்து எல்லோருக்கும்

ஒரு மருந்துகூட ஆகலாம்'

(விடை : உப்பு)

7. அண்ணா எந்து பிளித,

புருவது இல்லெ,

தும்பி எந்து பிளித,

பந்த

'அண்ணா என்று அழைத்தால்

வருவது இல்லை

தம்பி என்று அழைத்தால்

வருகிறான்'

(விடை : மத்து - உதடுகள்)

8. அயிது ஆறா எத்தி ஓவ

ஓறென ஒப்ப எத்தி ஓதது

'ஐந்து ஆட்கள்கொண்டு வருவதை

ஒரே ஆள் தனியே எடுத்துச் செல்கிறார்'

(விடை : நாலெங்கெ - நாக்கு)

9. அவ்வெ சத்த நாத

மகளு சத்த பாடெ

'தாய் இறந்தால் நாற்றம்

மகள் இறந்தால் மணம்'

(விடை : மாடுமு பாலு - பசுவும் பாலும்)

10. அவ்வெ பாடி

மகளு கொணிகி

'தாய் பாடகி
மகள் நாட்டியக்காரி'
(விடை : சண்ணானு - அணில்)

11. அறெகு மேலெ கெறெ
கெறகு மேலெ காயி
காயிகு மேலெ ஊ
'பாறை மேல் குளம்
குளம் மேல் பழம்
பழம் மேல் பூ'
(விடை : தீவிகெ - எண்ணெய் விளக்கு)

12. அன்னத கோலு
எண்ணோங்கு முடிய
'அளவிட முடியாத தானியங்கள்
எண்ண முடியவில்லை'
(விடை : பெள்ளி மீனு - நட்சத்திரங்கள்)

13. அஜ்ஜி கெட்டித கெட்டுன
பிடுசோங்கு முடியர
'மூதாட்டியால் கட்டிய கட்டினைப்
பிரிக்க முடியவில்லை'
(விடை : ஈசிலுமுண்டெ - ஈச்சமரத்தின் அடிப்பாகம்)

14. ஆசித பாயி சுருடோங்கு முடிய
'விரித்திருந்த பாயைச் சுருட்ட முடியவில்லை'
(விடை : பானு - வானம்)

15. ஆ மனெ ஈ மனெ
மொண்டி கூர ஆரியது

'அந்த வீடு இந்த வீடு (என்று)
நொண்டிக்குதிரை ஊர்ந்தது'
(விடை : படி - அளவைப்பாத்திரம்)

16. இல்லி பிட்ட கொக்கெ - தடி
பேரூரு சுத்தி பந்தது
'இங்கே விட்டுச்சென்ற கைத்தடி
பேரூரைச் சுற்றி வந்தது'
(விடை : தாரி - பாதை)

17. ஈர சீலெகரிதி
இப்பத்தெட்டு சுருகு பெத்தொத்த
'ஈரமான துணியை ஊடுத்தவள் மேல்
இருபத்தெட்டு அடுக்குத்துணிகள்'
(விடை : பெங்காயி - பல்லாரி)

18. எங்க மனெ - ஆயலு
குன்ன கூசு பாயின
ஆசி ஒறங்கியது
'எங்கள் அடுக்களைத் தோட்டத்தில்
சின்ன பையன் பாயை
விரித்துத் தூங்குகிறான்'
(விடை : தூங்கலு கீரெ - தொட்டால் வாடி)

19. எஞ்ஞாத கடலு ஏது?
'சென்றடைய முடியாத கடல் எது?'
(விடை : பானு - வானம்)

20. எத்தோங்கு முடிதது
ஜுள்ளோங்கு முடிய
'எடுக்க முடியும்,
கிள்ள முடியாது'
(விடை : நீரு - தண்ணீர்)

21. எலுவு இல்லாத மனுச
எலெ இல்லாத மரலு
அத்தியது
'எலும்பு இல்லாத மனிதன்
இலை இல்லாத மரத்தில்
ஏறுகிறான்'
(விடை : ஏனுவு மண்டெயியே - பேனும், முடியும்)

22. என்ன ஒந்தாயி இத்தலெவு சினேகித அல்ல,
கொரசியலெ சத்தனவே கேயாத செகிதவு அல்ல
'என்னோடு ஒன்றாக இருந்தாலும் சினேகிதன் அல்ல,
கூப்பிடும்போது, எந்த ஒலியையும்
கேட்க முடியாத செவிடனும் அல்ல'
(விடை : நாலு - நிழல்)

23. ஒந்து அஜ்ஜி
ஏளு ஒறே கொத்துன
சூடியொன் - இத்த
'ஒரு மூதாட்டி
ஏழு (எடைப்) பளு கொத்தினைச்
சூடி இருக்கிறாள்'
(விடை : கோயி - சேவல்)

24. ஒந்து ஆனெகு
ராடு கூறு
'ஒரு யானைக்கு
இரண்டு பங்கு (சதை)'
(விடை : நெண்டு - நண்டு)

25. ஒந்து கல்லலு ஒந்து காயி
அதுகு மேலெ ஒந்து ஊ

ஆ ஊன எத்தி
ஒந்து மடுவுகு எத்தி ஆகியலெ
அபார தொட்ட ஊ ஆதது

'ஒரு பாறையின் மேல் ஒரு காய்
அதன் மேல் ஒரு பூ
அந்த பூவினை எடுத்து
ஒரு மடுவினுள் போட்டுவிட்டால்
மிகப் பெரிய பூ ஆகிவிடும்'

(விடை : சுண்ண - சுண்ணாம்பு)

26. ஒந்து கறுபு மனிச
காவலுகு கெட்டிகர

'ஒரு கறுப்பு மனிதன்
காவலுக்குக் கெட்டிக்காரன்'

(விடை : தெறபு காயி - கதவுப் பூட்டு)

27. ஒந்து காயி நோடியலெ, ஒள்ளெ பஜுந்து
அதுன திந்தலெ, கயிதது.

'ஒரு காயைப் பார்க்கும்போது, மிகவும் அழகாயிருந்தது
அதனைச் சாப்பிடும்போது, கசப்பாக இருந்தது'

(விடை : பாகர காயி - பாகற்காயி)

28. ஒந்து கொண்ணெ தட்டியலெ
சாவிர கிளி எத்தது

'ஒரு கிளையைத் தட்டினதில்
ஆயிரம் கிளிகள் எழுந்தன'

(விடை : கீரெ - கீரை)

29. ஒந்து சாமனன உலெகு ஏறிசி பேசுன
பன்னண்டு பருச ஆனலூ பேவது இல்லெ
தீகு ஏறுசுன நிமிசதுலு பேந்து

'ஒரு பொருளை உலைக்குள் இட்டுச் சமைத்தால்
பன்னிரண்டு ஆண்டுகள் ஆனாலும் வேகுவது இல்லை
தீயுனுள் இட்டால் நிமிடத்தில் வேகும்'

(விடை : தலெ மூரு - தலைமயிர்)

30. ஒந்து சாவி இல்லாத பெட்டி
காசு கொட்டு ஏசினோனொ

'ஒரு சாவி இல்லாத பெட்டி
காசு கொடுத்து வாங்கப்பட்டது'

(விடை : கிச்சு பெட்டி - வத்திப்பெட்டி)

31. ஒந்து தாரியலு
ஒந்து மனுச ஓத. அல்லி
ஒந்து அண்ணு இத்துட்டது.
அதுன நோடியது ராடு ஆளு.
அதுன எத்தியது அத்து ஆளு.
அதுன திந்து தீரிசியது மொவந்து - ராடு ஆளு.

'ஒரு பாதையில்
ஒரு மனிதன் போகிறான் . அங்கு
ஒரு பழம் கிடந்தது
அதைப் பார்த்தது இரண்டு ஆட்கள்
அதை எடுத்தது பத்து ஆட்கள்.
அதைச் சாப்பிட்டுத் தீர்த்தவர்கள் முப்பத்திரண்டு ஆட்கள்'

(விடை : ராடு ஆளு - இரண்டு கண்கள்
அத்து ஆளு - பத்து விரல்கள்
மொவந்து - ராடு ஆளு - முப்பத்திரண்டு பற்கள்)

32. ஒந்து பறடுன தட்டுன
ஆயிர கிளி இளகுந்து

'காய்ந்த ஒன்றைத் தட்டினால்
ஆயிரம் கிளிகள் வாடும்'

(விடை : கீரெ - கீரை)

33. ஒந்து மனுச காசுன எத்தி ஓயி
பெத்தொட்டு குயின எத்தி ஒணு பந்த.
'ஒரு மனிதன் உருளைக் கிழங்குடன் செல்கிறார். அதை
(எங்கேயோ) போட்டுவிட்டு அவர் உடன்
திரும்பி வருகிறார்.'
(விடை : ஏலு - மலப்பொருள்)

34. ஒந்து மனுசகு
ஒந்தே கண்ணு
'ஒரு மனிதனுக்கு
ஒரே (ஒரு) கண்'
(விடை : சூஞ்சி - ஊசி)

35. ஒந்து மனுசகு
பென்னலு கண்ணாடிகெ
'ஒரு மனிதனுக்குப்
பின்னால் கண்ணாடி (உள்ளது)'
(விடை : உகுரு - நகம்)

36. ஒந்து மனுச சத்தொட்டு
அங்கிடிகு ஓதது.
'ஒரு மனிதன் செத்தவுடன்
சுடைக்குப் போகிறான்'
(விடை : ஒணங்கித மீனு - உலர்ந்த மீன்)

37. ஒந்து மனுச பக்கியொண் இத்த
'ஒரு மனிதன் நிரந்தரமாக வளைந்து இருக்கிறான்'
(விடை : பாயெ அண்ணு - வாழைக்கன்று)

38. ஒந்து மனுச பானு பித்த
பானு பித்த எந்து கயி கெறெதது

'ஒரு மனிதன் வானம் விழுகிறது
வானம் விழுகிறது என்று கையை விரித்தான்'
(விடை : அரல் எலெ - ஆமணக்கு இலை)

39. ஒந்து முக்காலு சாமன பாய்குனா
பீடு எல்ல தும்புந்து
'ஒன்றே முக்கால் (அணாவுக்கு) (ஒரு) சாமானை வாங்கினால்
வீடு எல்லாம் நிறையும் (நிரம்பும்)'
(விடை : பிளக்கு எண்ணெ - விளக்கு எண்ணெய்)

40. ஒந்து ரொட்டின சாவிர ஆளு
திந்தலெவு திம்பங்கு முடிய
'ஒரு ரொட்டியை ஆயிரம் ஆட்கள்
தின்றாலும் தின்ன முடியவில்லை'
(விடை : சுண்ண கட்டி - சுண்ணாம்பு)

41. ஒந்தே ஒந்து நெல்லு இடிதலெ
மனெ பூர உமி.
'ஒரே ஒரு நெல் ஊன்றினால்
வீடு முழுவதும் உமி'
(விடை : தீவிகெ - எண்ணெய் விளக்கு)

42. ஒந்தே கோயிகு ராடு கூடெ கவுசுவாடு
'ஒரு கோழிக்கு இரண்டு கூடுகள் கவிழ்க்கப்பட்டுள்ளன'
(விடை : கண்ணு - கண்)

43. ஒப்பன கொரெசி நோடியொட்டு
ஊருனவே கொரேசியது
'ஒருவனைக் கூப்பிட்டான். பார்க்கும்போது
ஊரையே கூப்பிட்டிருக்கிறான்'
(விடை : காகெ - காகம்)

44. ஒறகுத்து பாலெபன
சந்தொத்து சோலெபன
'காலையில் விரிந்த பாலைவனம்
அந்தியில் அடர்ந்த சோலைவனம்'
(விடை : பானு - வானம்)

45. ஓகு எந்தலெ ஓதது
பா எந்தலெ பந்தது
'போ என்றால் போகிறது
வா என்றால் வருகிறது'
(விடை : அடிலு - கதவு)

46. ஓவட சொள்ளெ
பப்பட குண்டு
'போகும்போது கனமற்றது
வரும்போது கனமுடையது'
(விடை : நீர் அணங்கு - தண்ணீர் பானை)

47. கப்பெ கலக்காத நீரு
'தவளை கலக்காத நீர்'
(விடை : தெங்காயி நீர - தேங்காய் நீர்)

48. கரிசெ இல்லாத மனசகு அள்ளலு கண்ணு
பெகட்டெகர கயலு சத்தது
(அவன் ஆர?
பெகட்டெகர எந்தலெ ஆர?)
'குடல் இல்லாத மனிதனுக்குப் பக்கவாட்டில் கண்கள்
அவன் கொடூர மனிதன் கையால் இறந்தான்'
(அவன் யார்? பெகட்டெகர என்றால் யார்?)
(விடை : நெண்டு - நண்டு,
பெகட்டெகர கூமெ (கொடூர மனிதன்) - ஆந்தை

49. கல்லுகு எல்லா தொட்ட கல்லு

'கற்களில் எல்லாம் பெரிய கல்'

(விடை : உப்பு கல்லு - உப்புக்குவியல்)

50. கறுபு பெள்ளெ ஆவது

'கறுப்பு வெள்ளை ஆகிறது'

(விடை : ராயொடி - ராகிப்பொடி)

51. காடு பெள்ளெ,

பிதெ கறுபு

'நிலம் வெள்ளை,

விதை கறுப்பு'

(விடை : காயிதமு மசி - காகிதமும் இங்கும்)

52. காயி கக்க - பிக்க

ஊ சின்ன - மின்ன

'காய் வெடித்துச் சிதறும்

பூ பொன்போல் மின்னும்'

(விடை : கடுகு)

53. காரு ஓடெ குத்தலு. காரு

ஆனெ கிடெ பீந்து இருக்குந்து.

கண்டது ராடு ஆளு. குத்தி

கொந்தது பத்து ஆளு.

'அடர்ந்த கறுத்த மூங்கில் காட்டில், கறுத்த

யானை கீழே விழுந்து கிடந்தது.

கண்டது இரண்டு மனிதர்கள். குத்தி

கொன்றது பத்து மனிதர்கள்'

(விடை : மூரு - தலைமயிர், பேனு - பேன்

கண்ணு - கண்கள், பிரலு - விரல்கள்)

54. கிச்சு மனெ வாகெ

சாவிர ஆளு இத்தரு

'தீ வீட்டிற்கு உள்ளே

ஆயிரம் ஆட்கள் இருக்கிறார்கள்'

(விடை : சுளெவு செங்கல்லு - சூளையும், செங்கற்களும்)

55. குன்ன - குன்ன பெட்டி வாகெ

குன்ன - குன்ன பெயிர - கல்லு

'சின்ன சின்ன பெட்டியில்

சின்ன சின்ன வயிரக்கற்கள்'

(விடை : பேரு கடலெ - வேர்க்கடலை)

56. குன்னலு கெறேன

அண்ணு தொட்டியதே கெஜோன

'சிறியதில் கறுப்பு

பெரியதில் சிவப்பு'

(விடை : மாச் அண்ணு - மிளகாய்)

57. குன்னலு சீலெ உட்டது

தொட்டி எண்ணு

பர-பர சீலெ உடர

'சிறு பருவத்தில் துணி அணிகிறாள்.

வளரும்போது

மெல்ல - மெல்ல துணி அணிவதை விடுகிறாள்'

(விடை : பெதுரு - மூங்கில்)

58. கூன் அஜ்ஜிகு

பாயி முச்சூடு

அல்லு

'கூன் கிழவிக்கு

வாய் எல்லாம்

பல்'

(விடை : கொயிலு கத்தி - அறுவடை செய்யும் அரிவாள்)

59. கொனென நோடி கண்ணநீரு சூசிஅது.

கண்ண நீரு பந்ததே அவன்வே கரெதொணு ஓதது

'ஓரப்பகுதியைப் பார்த்தால் அவன் கண்ணீர் விடுகிறான்

கண்ணீர் வந்தவுடன் அவன் உருகி விடுகிறான்'

(விடை : மெக்கு திரி - மெழுகுதிரி)

60. சத்தவரு சத்தெகு ஓதெ

'இறந்தவர் சந்தைக்குப் போகிறார்'

(விடை : ஒணங்கித மீனு - உலர்ந்த மீன்)

61. சிரு எம்ப சிட்டெகு

ஒந்து மொள பாலு

'கீச்சிடும் சிறிய பறவைக்கு

ஒரு முழம் வால்'

(விடை : செடெ - ஏணி)

62. சிவா உண்டு மாடித சோலெலு

இப்ப ஆறு காலு மனுசகு

ஊரு எல்லா கெறேன

ராடு கயலு சத்தது

'சிவன் உருவாக்கம் செய்த சோலையில்

வாழும் ஆறு கால் மனிதனுக்கு

உடம்பு எல்லாம் கறுப்பு

இரண்டு கையால் செத்தான்'

(விடை : ஏனு - பேன்)

63. சுட்ட கொரங்கு

அட்டலுகு அத்தியது

'சுட்ட குரங்கு

மேடையில் ஏறுகிறது'

(விடை : மடகெ - சமைக்கப் பயன்படும் மண் பானை)

64, சுத்தி தங்கதுலு கெட்டடெ
நடுகெ நாகந்த்ரனு
'சுற்றிலும் தங்கத்திலான கட்டடம்
நடுவில் பாம்பு'
(விடை : நாலங்கெ - நாக்கு)

65. சுத்தி - முத்தி சுண்ணத - காரிகே
திரிகி நோடோதுகு பக்கிலு இல்லெ
'சுற்றிமுற்றி (பார்த்தால்) சுண்ணாம்புக் கலவை
வலம்வந்து உள்ளே பார்க்க கதவும் இல்லை'
(விடை : கோயி மொட்டெ - கோழி முட்டை)

66. ஜேனுன சேதாதெ
சகரென கலக்காதெ
இனிப - நீரு
'தேன் சேர்க்காத
சர்க்கரை கலக்காத
இனிப்பான நீர்'
(விடை : தெங்காயி நீரு - தேங்காய் நீர்)

67. தாண்டாத கோலு எது?
'தாண்டாத கோல் எது?'
(விடை : பானி - ஆறு)

68. தாண்டி தாண்டி பந்த மர,
தள்ளாடி பந்த மர,
இறுபு உக்க மர,
ஆ மர ஏன மர?
'ஊர்ந்தும் துள்ளியும் வந்த மரம்,
தள்ளாடி வந்த மரம்,
எறும்புகள் (உள்ளே) நுழைந்த மரம்,
அந்த மரம் என்ன மரம்?'
(விடை : ரயிலு - ரயில்)

69. தாரி - தாரி சொட்டு - சொட்டு

'வழியெங்கும் சொட்டு சொட்டாகத் துளிகள்'

(விடை : துப்போது - துப்புதல்)

70. திரிகி முருகி மலெகு பேரு எந்து

'திரும்பவும் சுற்றவும் (செய்யும்) மலைக்குப் பேர் என்ன?'

(விடை : பீசு கல்லு - திருவை)

71. தின்னுவது பாயிலு
பேலுவது அள்ளெலு

'தின்பது வாயால்
வெளியே தள்ளுவது பக்கத்தால்'

(விடை : பீசு கல்லு - திருவை)

72. தும்பி முட்டாத ஊ

'வண்டு தொடாத பூ'

(விடை : ஊஞ்ச கூடெ - சேவல் கொண்டை)

73. தொண்ணூறு கிளி பக்கி நீரு குடிதது

'தொண்ணூறு கிளிகள் குனிந்து நீர் குடித்தன'

(விடை : பூடு - வீட்டுக்கூடு)

74. தொர தந்த கங்குவன
தாங்கோங்கு முடியர
(அது ஏன?)

'கடவுள் தந்த உலோகத்தட்டை
கழுவ முடியவில்லை (அது என்ன)'

(விடை : பானு - வானம்)

75. நட்(உ) - அட்டலு
சிட்டெ கூடு

'நடு மலையுச்சியில் சிறிய கூடு'

(விடை : ஒக்குடி - கொப்புள்)

76. நடட்டலு கயி பிஞ்சிய

'மலையுச்சியின் நடுவில் கையை ஆட்டுகிறான்'

(விடை : கண்ணெமெ - கண் இமை)

77. நடு கூடலு அக்கிலு;

கேரி கடய

'நடு கூட்டில் (ஒரு) பறவை,

வெளியே வரமுடியாது'

(விடை : கிறு நாலங்கு - உள் நாக்கு)

78. நாகு காலு மனுச

கண்டவன் கயலு சத்தது

'நான்கு கால் மனிதன்

கண்டவன் கையால் செத்தான்'

(விடை : கண்டவன் (மனுச) - கண்டவன் (மனிதன்)

சத்தது (நாலுகாலுமனுச) - செத்தது (ஆடு)

79. நாகு மூலெ நக்கி

ஒந்து மூலெலு குளித

'நான்கு மூலையேயும் நக்கி

ஒரு மூலையில் உட்காரும்'

(விடை : கெஜ்ஜி கீலு - துடப்பம்)

80. நாலு நட்ட பாயெ

என்னகு தெரிய

'நான் நட்ட வாழைகள்

எனக்கே தெரியவில்லை'

(விடை : கெவி - காதுகள்)

81. நூறு குத்தலிகு ஒந்தே காவு

'நூறு களைக்கொத்திக்கு ஒரே காம்பு'

(விடை : பாயே கெனெ - வாழைக்குலை)

82. பப்பட நாகு ஆளு. மனெகு பந்ததே
கேரி ராடு ஆளு நித்துட்டொ
வாகெ ராடு ஆளு ஓதொ.
கேரி நிப்பது ஆர?
வாகெ ஓவது ஆர?

'அவர்கள் வரும்போது நால்வர். அவர்களின் வீட்டிற்கு
வரும்போது இருவர் வீட்டடிற்கு வெளியில் நின்று
விடுகிறார்கள். இருவர் வீட்டினுள் சென்றுவிடுகிறார்கள்.
வீட்டிற்கு வெளியில் நிற்பது யார்? வீட்டினுள் செல்பவர் யார்?'

(விடை : கேரிப்பது ராடு
வெளியில் இருப்பது செருப்புகள்
வாகெ ஓவது ராடு காலு - உள்ளே போவது
இரண்டு கால்கள்

83. பலெ பெந்தது
பகிரி பேயர

'வலை எரிந்தது
கயிறு எரியவில்லை'

(விடை : வனவு தாரி - காடும், பாதையும்)

84. பிட்ட மனெ
தும்பி மொரெத

'பெரிய வீடு
சிறிய வாசல்'

(விடை : பீசு கல்லு - திருவை)

85. பூதி பூசி ஓரி அகறுந்து

'விபூதி பூசி(யதால்) எருது அலறுகிறது'

(விடை : தவுலு - மத்தளம்)

86 பெட்டித கொண்ணெலு கோயி கூகிய

'வெட்டிய மூங்கிலில் சேவல் கூவுகிறது'

(விடை : கொயலு - குழல்)

87. பெட்டியலெ பெட்டியலெ
பெட்டுவே ஏற

'வெட்ட வெட்ட
வெட்டே படாது'

(விடை : நீரு - நீர்)

88. பெட்டுன கொன்னெலு கோயி கூகுந்து

'வெட்டிய தடியில் சேவல் கூவுகிறது'

(விடை : குகலு - குழல்)

89. பெந்தொணு கசட படோவன்
அருகலு படோதில்லெ

'எரியும்போது வலியால் அவதியுறுகிறான்
துன்பப்படும்போது அவதிப்படவில்லை'

(விடை : லேடியோ - ரேடியோ)

90. பெள்ளெ கும்பகாயி
கொட்டு இல்லெ

'வெள்ளை சுரக்காய்
தண்டு இல்லை'

(விடை : கோயி மொட்டெ - கோழி முட்டை)

91. பெள்ளே த பெந்து உட்டியது

'வெந்தபிறகு எப்போதும் வெள்ளையாகப் பிறப்பான்'

(விடை : இட்டிலி - இட்லி)

92. மரகு எல்லா
தொட்ட மர

'மரங்களில் எல்லாம்
பெரிய மர'

(விடை : கல்லகடலெ மர - கல்லக்கடலை மரம்)

93. மன - மன எந்து தொட்டியது
நெத்தியலு பூதின ஊசியது
கயலு பானுன தோறிசியது
கத்தலு மணி கெட்டியது
'மன-மன என்று வளருகிறான்
நெற்றியில் விபூதியைப் பூசுகிறான்
கையால் வானை நோக்கிச் சுட்டுகிறான்
கழுத்தில் மணியைக் கட்டுகிறான்'
(விடை : அரலுமர - ஆமணக்கு மரம்)

94. மாடுன ஓடி தள்ளி
பெறு பட்டின
பாலு கறந்து
எடுது பருடோ
'பசுக்களைத் தூர விரட்டி
காலியான மடியில்
பால் கறந்து
வீட்டிற்குப் பால் கொண்டு வா'
(விடை : குன்னிமு தேனு - தேனீக்களும். தேனும்)

95. மாயே நீரு பப்ப தொள்ளென அடெபது ஏன?
'மழைநீர் துளை வழியே ஊடுருவதை அடைப்பது எது?'
(விடை : உல்லு - புல்)

96. முட்டாத முருங்கெ ஏது?
'முட்டாத முருங்கை எது?'
(விடை : பாம்பு)

97. முறு காலு குதுரெ
எப்படினவு தூகியது
'மூன்று கால் குதிரை
எத்தகைய எடையையும் தாங்கும்'
(விடை : கிச்சொலெ - அடுப்பு)

98. மொட்டெ அறுவத்து
அங்கிடி மொவந்து
'முட்டை அறுவது
கடை முப்பது'
(விடை : புறுடெ - சுரக்காய்)

99. மொலன கொந்தவன் சத்து ஆறு திங்க
சத்த மொலன நங்க ஈக தின்னோனொ
'ஆறு மாதங்களுக்கு முன்னால் முயலைக் கொன்றவன்
இறந்து விட்டான்,
இப்போது நாங்கள் இறந்தமுயலைச் சாப்பிடுகிறோம்'
(விடை : ஒணங்கலு மீனுவு பலே - உலர்ந்த மீனும்,
வலையும்)

100. ராடு ஆளு
நீ முந்து நானு முந்து
நீ முந்து நானு முந்து
எந்து போவாரு. ஆருமு
முந்துவது இல்லெ
'இரண்டு மனிதர்கள்
நீ முந்தி நான் முந்தி
நீ முந்தி நான் முந்தி
என்று போவார்கள். யாருமே
முந்துவது இல்லை'
(விடை : ராடு காலு - இரண்டு கால்கள்)

101. ராடு பீடுக்கு ஒந்தே கம்பு
'இரண்டு வீடுகளுக்கு ஒரு தூண்'
(விடை : மூகு - மூக்கு)

102. ராடு மனெகெ ஒந்து கம்பு
'இரு வீட்டிற்கு ஒரு தூண்'
(விடை : மூகு - மூக்கு)

## பின்னிணைப்பு எண் - 4.1

# விடுகதைகள் குறித்த அறிஞர்களின் பாகுபாடுகள்

### இரகுநாத் இராத் பாகுபாடு (2)

1. சடங்குச் சார்பு விடுகதைகள்
2. பொழுதுபோக்குச் சார்பு விடுகதைகள்

### ஆரியா பாகுபாடு (6)

1. இயற்கைச் சார்பு விடுகதைகள்
2. சமூகப் பழக்கவழக்கங்கள் சார்பு விடுகதைகள்
   - அ) தினப்பயன்பாட்டில் உள்ள பொருட்கள் சார்பு விடுகதைகள்
   - ஆ) காய்கறிகள் சார்பு விடுகதைகள்
   - இ) மிருகங்கள் - பறவைகள் - புழுக்கள் - பூச்சிகள் சார்பு விடுகதைகள்
   - ஈ) உடல், உறுப்புகள் சார்பு விடுகதைகள்
   - உ) பிற

### ரோஜர் ஆபிரகாம் ஆலன் தண்டிசு பாகுபாடு (9)
### (சொல்லுகின்ற பாங்கின் அடிப்படை)

1. விளக்க விடுகதைகள்
2. எதிர்மறை விடுகதைகள்
3. தலைதப்பும் விடுகதைகள்
4. கதையமைப்பு விடுகதைகள்
5. உரையாடல் விடுகதைகள்
6. சொல் விளையாட்டு
7. நகை வினாக்கள்
8. அறிவு வினாக்கள்
9. புதிர்கள்

### ஆறு. இராமனாதன் பாகுபாடு (2)

1. பாட்டு விடுகதை
2. உரைநடை விடுகதை

துர்க்கா பகவத் பாகுபாடு (6)

(அமைப்பு மற்றும் பயன்பாடு அடிப்படை)

1. நிலம் சாரந்த விடுகதைகள்
2. கதை சார்ந்த விடுகதைகள்
3. சமஸ்யா
4. ப்ரகொலிகா
5. வினாவிலி விடுகதைகள்
6. பெயர் விடுகதைகள்

சனதொம்பிசிங் பாகுபாடு (5)

1. முரண்பாடு விடுகதைகள்
2. மலைப்பு விடுகதைகள்
3. நையாண்டி விடுகதைகள்
4. குப்பை விடுகதைகள்
5. அறிவுப்பூர்வ விடுகதைகள்

மரிய லீச் பாகுபாடு (2)

1. உண்மை விடுகதைகள்
2. வினா விடுகதைகள்

ச.வே. சுப்பிரமணியன் பாகுபாடு (6)

அ) பண்பு அடிப்படையில் பாகுபாடு (2)

1. நாட்டுப்புற விடுகதைகள்
2. இலக்கிய விடுகதைகள்

ஆ) பயன் அடிப்படையில் பாகுபாடு (4)

1. விளக்க விடுகதைகள்
2. நகைப்பு விடுகதைகள்
3. கொண்டாட்ட விடுகதைகள்
4. பொழுதுபோக்கு விடுகதைகள்

க. சாந்தி பாகுபாடு (5)

1. விளக்கப்பாங்கு விடுகதைகள்
2. வினாநிலை விடுகதைகள்
3. ஓசைநய விடுகதைகள்
4. நகைப்புப் பாங்கு விடுகதைகள
5. உருவகம். ஒப்புமை போனறவை இடம்பெற்ற விடுகதைகள்

பின்னிணைப்பு எண் - 4.2

# இயற்கையாகவே அமைந்த விடுகதைகள்

| இயற்கைப் படைப்புகள் | | | இடம்பெறும் விடுகதைகளின் வரிசை எண்கள் |
|---|---|---|---|
| வானம் | | | 14, 19, 44, 74 |
| நட்சத்திரங்கள் | | | 12 |
| நீர் | | | 20, 87 |
| நீர்நிலைகள் (ஆறு) | | | 67 |
| **ஊர்வன** | | அணில் | 10 |
| | | நண்டு | 24, 48 |
| | | பாம்பு | 96 |
| | | பேன் | 21, 53, 62 |
| **நீந்துவன** | | மீன் | 36, 60 |
| **பறப்பன** | | ஆந்தை | 48 |
| | | காகம் | 43 |
| | | சேவல் | 23 |
| | | தேனீ | 94 |
| **நடப்பன** | | ஆடு | 78 |
| | | பசு | 9 |
| | | மனிதன் | 78 |
| **தாவரங்கள்** | **கொடி** | தாமரை | 2 |
| | **செடி** | கீரை | 28, 32 |
| | | தொட்டால்வாடி | 18 |
| | | புல் | 95 |
| | **மரம்** | ஆமணக்கு | 38, 93 |
| | | ஈச்சமரம் | 13 |
| | | கல்லக்கடலை | 92 |
| | | வாழை (கன்று) | 37 |

## பின்னிணைப்பு எண் - 4.3

# உடல் உறுப்புகள் குறித்த விடுகதைகள்

| வரிசை எண் | உடல் உறுப்புகளின் பெயர்கள் | இடம்பெறும் விடுகதைகளின் வரிசை எண்கள் |
|---|---|---|
| 1 | உதடுகள் | 7 |
| 2. | உள்நாக்கு | 77 |
| 3 | கண் | 31, 42 |
| 4 | கண் இமை | 76 |
| 5 | காதுகள் | 80 |
| 6 | கால்கள் | 53, 82, 100 |
| 7 | (சேவல்) கொண்டை | 72 |
| 8 | கொப்புகள் | 75 |
| 9 | தலைமயிர் | 21, 29, 53 |
| 10 | நகம் | 35 |
| 11 | நாக்கு | 8, 64 |
| 12 | பற்கள் | 31 |
| 13 | மூக்கு | 101, 102 |
| 14 | விரல்கள் | 31, 53 |

## பின்னிணைப்பு எண் - 4.4

# வீட்டுப்பொருட்கள் குறித்த விடுகதைகள்

| வரிசை எண் | பொருட்களின் பெயர்கள் | இடம்பெறும் விடுகதைகளின் வரிசை எண்கள் |
|---|---|---|
| 1 | அடுப்பு | 97 |
| 2 | அளவைப் பாத்திரம் | 14 |
| 3 | ஊசி | 34 |
| 4 | எண்ணெய் விளக்கு | 11, 42 |
| 5 | ஏணி | 61 |
| 6 | கதவுப்பூட்டு | 26 |
| 7 | குழல் | 86, 88 |
| 8 | சுண்ணாம்பு | 25, 40 |
| 9 | செருப்பு | 82 |
| 10 | தண்ணீர்ப் பானை | 46 |
| 11 | திருவை | 70, 71, 84 |
| 12 | துடப்பம் | 79 |
| 13 | துப்பாக்கி | 3 |
| 14 | மத்தளம் | 85 |
| 15 | மெழுகுத்திரி | 59 |
| 16 | ரேடியோ | 89 |
| 17 | வத்திப்பெட்டி | 30 |
| 18 | வலை | 99 |
| 19 | விளக்கு எண்ணெய் | 39 |

பின்னிணைப்பு எண் - 4.5

# உணவுப்பொருட்கள் குறித்த விடுகதைகள்

| வரிசை எண் | உணவுப்பொருட்களின் பெயர்கள் | இடம்பெறும் விடுகதைகளின் வரிசை எண்கள் |
|---|---|---|
| 1 | இட்லி | 91 |
| 2 | உப்பு | 6, 49, 50 |
| 3 | கடுகு | 52 |
| 4 | தேங்காய் | 5 |
| 5 | தேங்காய் நீர் | 47, 66 |
| 6 | தேன் | 94 |
| 7 | நீர் | 20, 87 |
| 8 | பல்லாரி | 17 |
| 9 | பலாப்பழம் | 4 |
| 10 | பாகற்காய் | 27 |
| 11 | பால் | 9 |
| 12 | பூசணிக்காய் | 1 |
| 13 | மிளகாய் | 56 |
| 14 | முட்டை | 65, 90 |
| 15 | வாழைக்குலை (வாழைப்பழம்) | 81 |
| 16 | வேர்க்கடலை | 55 |

## பின்னிணைப்பு எண் - 5

# தகவலாளிகள் குறித்த குறிப்புகள்

| வரிசை எண் | பெயர் | ஊர் | தொழில் | வயது | பால் பிரிவு |
|---|---|---|---|---|---|
| 1 | சந்திரன் | நெடுகல் கொம்பை | அலுவலக உதவியாளர் | 35 | ஆண் |
| 2 | பார்வதி | நெடுகல் கொம்பை | தையல் | 45 | பெண் |
| 3 | அர்ச்சுனன் | குறும்பாதி | தினக்கூலி | 50 | ஆண் |
| 4 | ராமன் | குறும்பாதி | பாரம் ஏற்றுபவர் | 37 | ஆண் |
| 5 | இலட்சுமி | மேட்டுக்கல் | துப்புரவாளர் | 32 | பெண் |
| 6 | கலா | மேட்டுக்கல் | வீட்டுப்பணி | 46 | பெண் |
| 7 | இந்திரன் | கீழ்க்கோத்தகிரி | தினக்கூலி | 49 | ஆண் |
| 8 | சித்ரா | கீழ்க்கோத்தகிரி | பால்வாடி ஆயா | 42 | பெண் |
| 9 | கிருஷ்ணன் | பெல்லத்தி கொம்பை | வியாபாரம் | 28 | ஆண் |
| 10 | இலட்சுமணன் | பெல்லத்தி கொம்பை | தினக்கூலி | 60 | ஆண் |
| 11 | சந்திரா | கின்னக்கொரை | சத்துணவு அமைப்பாளர் | 30 | பெண் |
| 12 | கிட்டன் | கின்னக்கொரை | தினக்கூலி | 26 | ஆண் |
| 13 | மாதி | தெப்பக்காடு | வீட்டுப்பணி | 54 | பெண் |
| 14 | கல்லன் | தெப்பக்காடு | தரகுத்தொழில் | 33 | ஆண் |
| 15 | குமரன் | கனயம்வயல் | வியாபாரம் | 55 | ஆண் |
| 16 | மல்லி | கனயம்வயல் | தையல் | 25 | பெண் |
| 17 | ராமன் | கப்பாலா | தினக்கூலி | 48 | ஆண் |
| 18 | மாதன் | கப்பாலா | உணவகம் | 37 | ஆண் |
| 19 | மாரி | ஓனிமூலா | வீட்டுப்பணி | 49 | பெண் |
| 20 | பீமன் | ஓனிமூலா | காவலாளி | 33 | ஆண் |

# தெரிவுத் துணைநூற்பட்டியல்

## தமிழ் நூற்கள்


அமிர்தசாகரர், **யாப்பருங்கலக்காரிகை**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1959

இராசாரம் மற்றும் பலர் (ப.ஆ.) **தமிழ்மொழியும், பாண்பாடும்**, தமிழ்ப் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்), இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம் (மைசூர்), சிங்கப்பூர் தமிழ்ச்சங்கம் (சிங்கப்பூர்), 2002

இராமநாதன், ஆறு., **தமிழில் புதிர்கள் - ஓர் ஆய்வு**, சமுதாயச் சிற்பிகள் வெளியீட்டகம், மஞ்சக்கொல்லை, 1978

குணசேகரன், கே.ஏ., **மலையின மக்கள் ஆட்டங்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998

கொங்குவேளிர், **பெருங்கதை**, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1968

சக்திவேல், சு., **நாட்டுப்புற இயல் ஆய்வு**, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

சீத்தலைச் சாத்தனார், **மணிமேகலை**, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1981

சுப்பிரமணியன், ச.வே., (ப.ஆ.), **தமிழில் விடுகதைகள்**, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977

சுப்பிரமணியன், பா.ரா., **தமிழக நாட்டுப்பாடல்கள் : ஒப்பாரி, தாலாட்டுப் பாடல்களின் அமைப்பு**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975.

தண்டியாசிரியர், தண்டியலங்காரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960

பக்தவத்சலபாரதி, சீ., **பண்பாட்டு மானிடவியல்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1960.

லூர்து, தே., **தமிழ்ப் பழமொழிகள் : ஓர் ஆய்வு**, மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியிடப்படாத பி.எச்.டி., பட்ட ஆய்வேடு, மதுரை, 1980.

லூர்து, தே., **நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள்**, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை, 1997.

ஸ்டீபன், ஞா., **வேடிக்கைக்கதைகளில் அமைப்பியல் ஆய்வு : விளவங்கோடு வட்டம்**, மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியிடப்படாத பிஎச்.டி., பட்ட ஆய்வேடு, தமிழ் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1993.

## ஆங்கில நூற்கள்

**Arya. S.P.,** *Sociological Study of Folklore,* Calcutta, 1975.

**Das, K.B.,** *Odia Lokgita "O" Kaham (Oriya), Viswa Bharathi, Shantiniketan, 1965.*

**David Dreseller & William W. Wills,** *Sociology - The Study of Human Interaction,* New York, 1976

**Richard M. Dorson (Ed.),** *Folklore and Folklife : An Introduction,* The Chicago University Press, Chicago, 1972

**Santhi, G.,** *Folklore Survey of Thanjavur District,* Tamil University, Thanjavur, 1994

**Smith Ronald, W.,** *Sociology - An Introduction,* St. Marin's Press, New York, 1976

**Tylor, E.B.,** *Primitive Culture,* Vol.2, Harper & Row Publisher, New York, 1871.

*Census Report - 1991*, Govt. of India, Calcutta.

## கட்டுரைகள்

**Don Yonder,** "Folklife Studies in American Scholarship", *American Folklife,* University of Texas, Austria, 1976.

**Kapp, D.B.,** "Palu Kurumba Riddles : Specimens of a South Dravidian Tribal Language," *Bulletin of the School of Oriental and African Studies 41,* South Asia Institute of Heidelberg University, *West Germany, 1978.*

**Kapp, D.B.,** "Alu Kurumba Riddles", *Bulletin of the School of Oriental and African Studies,* Vol. XLVII, Part 2, University of London, England, 1984.

**Raghunaths Rath,** "A Study of Kui Riddle," *Vanyajathi,* Vol. XLIX, No.4, Bharathiya Adimjati Sevak Sangh, New Delhi, Oct. 1996.

**Santhombi Singh,** "Manipuri Riddles : Towards Classification and Analysis", *Folklore,* Vol.31, No. 357-358, March, April 1990.


Design : Akaram.